3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL 1939

# கன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்



## கஸ்தூரி திலகம்

(முடிவு)

33. சிதறிய இதயம்—சிதைந்த காதல்
34. எது பெரிது? காதலா, கடமையா?
35. அந்தகார குகையில் வெந்துருகும் உயிர்கள்
36. தெளிந்த சித்தம்—தேங்கிய அன்பு
37. சோதனைப் பரீக்ஷை—சொல்லொணா இம்சை
38. மாய உலகின் மாறுதல் காட்சி
39. கலகத் தீயும், தியாகச் சுடரும்
40. அன்பின் த்யாகம்—அகந்தையின் வேகம்
41. புதுமை விளைவுகள் பொங்கலோ பொங்கல்

அடுத்த இதழில் ஆரம்பம்

## கானல் நீர் அல்லது கபட நாடகம்

கானம்ருதம்

அணா 2

கானல் நீரைக் கண்டோடிய மானின்
கதியைப்போல் மக்களின் வாழ்க்கை
யிலும் எவ்வித ஏமாற்றங்கள்
உள்ளன என்பதைச்
சித்திரித்துக்
காட்டும்

# கானல் நீர் அல்லது கபட உலகம்

என்னும்
புதிய நவீனம் நமது
"ஜகன்மோகினி" யில்
1939ஞ ஜூன் மாதம்
முதல் தொடர்ச்சியாக வெளிவரும்.

## ஸெய்கோன் அன்பர்களுக்கு!

நமது கௌரவப் பிரதிநிதி ஸ்ரீமான். சோ. ராமநாதன், தற்பொழுது ஸெய்கோனில் (119, ரூ பெல்லரின்) வசிப்பதால், நமது அன்பர்கள் அவரிடம் சந்தாவைச் செலுத்தி, "ஜகன்மோகினி" யையும், இதர நாவல்களையும் பெற்று, ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

## நமது விளம்பர விகிதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்துக்கு ஒரு முறை | ரூ. | 12 0 0 | கால் பக்கத்துக்கு | ,, ரூ. | 4 0 0 |
| அரை பக்கத்துக்கு | ,, ,, | 6 8 0 | உள்ளட்டைக்கு | ,, ,, | 15 0 0 |

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படும்.

# பொன் விழா !!



எஸ். டி. சுப்புலக்ஷ்மி
பேபி ஸரோஜா
பாபநாசம் சிவன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL 1939
MADRAS

டைரக்ஷன்
கே. சுப்ரமண்யம்
B.A.BL



# தியாகபூமி

டிஸ்ட்ரிப்யூடர்ஸ்

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன்

'ஜகன்மோகினி' மே 1939

வெற்றி!

•

சென்ற இடமெல்லாம் சிறப்புமிக்க வெற்றியுடன்
இருந்து வருகிறான்

# பக்த குமணன்

## (ராஜயோகி)

| | | |
|---|---|---|
| மதுரை | .... ஸில்வர் ஜூபிளி டாக்கீஸ் | 22-4-39 முதல் 2-வது வாரம் |
| கோவை | .... கர்னாடிக் டாக்கீஸ் | |
| திருச்சி | .... வெல்லிங்டன் டாக்கீஸ் | |
| திருவனந்தபுரம் | .... சித்ரா டாக்கீஸ் | |

ஆகிய இடங்களில் தினசரி ஆயிரக்கணக்கானவர்கள்
கண்டு மகிழும் படம்

**டி. பி. ராஜலக்ஷ்மி, வி. ஏ. செல்லப்பா,**
**பேபி ருக்மிணி, வி. எஸ். மணி**

நடித்தது.

**சென்னை, பிராட்வே டாக்கீஸிற்கும்**

மற்றும் இதர இடங்களுக்கும் சீக்கிரமே வருகிறான்

---

பக்த குமணன் பாடல்களை "யங் இந்தியா"
ரிகார்டுகளில் கேளுங்கள்.

---

—— : ஸோல் டிஸ்ட்ரிபியூடர்ஸ் : ——

**கபூர்சந்த் அண்டு கம்பெனி.,**

பெங்களூர் ஸிட்டி.

தந்தி : "KAPURCHAND"    போன் : 2382

# ஜகன் மோகினி

தொடர் நாவல் வெளிவரும் மாதப் பத்திரிகை

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

16-வது ஆண்டு ஆரம்பம் — வருஷ சந்தா ரூ. 1-8

ஜனவரி 1939 — தனிப்பிரதி அணா. 2

## ஜீவிய சந்தாநேயர்களுக்கு இனாம்

ரூ. 25-அனுப்பினால், நமது சஞ்சிகையுடன், இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

---

## ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள்,

எழுதிய நாவல்கள்.

**ரூ. 2-8**

வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

**ரூ. 2**

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

**ரூ. 1-12**

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

**ரூ. 1-8**

சோதனையின் கொடுமை

**ரூ. 1-4**

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வாழ்க்கையின் நாதம்
ஜீவியச்சுழல்

**ரூ. 1**

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்

**அணா 14**

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

**அணா 12**

கதம்பமாலை

**அணா 10**

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

**அணா 8**

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி

**அணா 6**

பக்ஷமாலிகா

**அணா 4**

ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின்சிகரம்
ஸரஸராஜன்
உளுத்த இதயம்

# பத்மகுமார்

அநுபவம், ஆச்சரியம்
இடைவிடா நகைப்பு
மிகுந்த நவீனம்



# கஸ்தூரி திலகம்

அல்லது

# காருண்ருதம்

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

47-வது நாவல்

" ஜகன்மோகினி " ஆபீஸ்,

26, தோடித் தெரு,

திருவல்லிக்கேணி : : : : சென்னை.

காபிரைட்] [ரூ. 1/4.

“ஜகன்மோகினி” பிரஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை. ( ௧௯௬௫ )

சென்னை-600 008
183032

# பொருள் அடக்கம்

---


| அதிகாரம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | பொங்கல் புதுமலர் ; பொங்கும் புகழ்மணம் | 1 |
| 2. | கடவுளிடம் பக்தியும் கல்யாண ஆசையும் | 9 |
| 3. | அஞ்சா நெஞ்சம்—அனாதை நிலையம் | 15 |
| 4. | திருமண மறுப்பு—திருவுள்ள வெறுப்பு | 20 |
| 5. | சங்கீத மகிமை—சஞ்சலப் பதுமை | 25 |
| 6. | மங்கையின் குழப்பம்—மாசிலா மருத்துவம் | 33 |
| 7. | மரணப் பேச்சும் மாறா உறுதியும் | 40 |
| 8. | பொறாமைப் பேய்களின் கிராதகச் சூழ்ச்சி | 46 |
| 9. | ஏக்கமும் ஊக்கமும் | 49 |
| 10. | பெண்ணின் அயற்சி—பிதாவின் முயற்சி | 51 |
| 11. | கோரவிபத்து—கூரிய பாணம் | 55 |
| 12. | கலகக் கட்டை—காதல் மொட்டு | 63 |
| 13. | பொறுமையும் முயற்சியும் பெருமையே பயக்கும் | 71 |
| 14. | ருத்திர மூர்த்தி—புத்திர வாத்ஸல்யம் | 79 |
| 15. | உபதேச மொழியும் ஊசலாடும் உள்ளமும் | 90 |
| 16. | வம்பர் கூட்டத்தின் வயிற்றெரிச்சல் | 95 |
| 17. | ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டிற்றாம் | 98 |
| 18. | ஏமாற்றமும் தடுமாற்றமும் | 104 |
| 19. | மூர்க்க நாடகத்தின் முதல் காட்சி | 108 |
| 20. | சந்தர்ப்ப சாட்சியும், சனியனின் ஆட்சியும் | 114 |
| 21. | சுயநலப் புலி சூரக் கொள்ளை | 122 |
| 22. | காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் | 125 |
| 23. | அதிர்ச்சி அமளி—கானாஸ்திரப் பிரயோகம் | 132 |
| 24. | திருமணப் பேச்சு—உருகிடும் பேதை | 139 |
| 25. | கலக நாடகம்—கபட நாடகம் | 145 |
| 26. | மங்கையின் நடிப்பு—மனோவேகத் துடிப்பு | 152 |

| | | |
|---|---|---|
| 27. | தனயனின் கலக்க இதயம்—தந்தையின் ஞான உதயம் | 159 |
| 28. | தீய்ந்த பயிரில் தீயும் பிடித்தது | 166 |
| 29. | ப்ரேமை நதியில் பிளவுச் சுழல் | 174 |
| 30. | எரியும் வீட்டில் எண்ணெய் மழைபெய்தது | 179 |
| 31. | அன்பின் வேகத்தின் அணைகடந்த வெள்ளம் | 185 |
| 32. | விதியின் கூற்றை வெல்லுதற்கு ஆமோ! | 189 |
| 33. | சிதறிய இதயம்—சிதைந்த காதல் | 193 |
| 34. | எது பெரிது? காதலா, கடமையா? | 201 |
| 35. | அந்தகார குகையில் வெந்துருகும் உயிர்கள் | 204 |
| 36. | தெளிந்த சித்தம்—தேங்கிய அன்பு | 208 |
| 37. | சோதனைப் பரீக்ஷை—சொல்லொணா இம்சை | 215 |
| 38. | மாய உலகின் மாறுதல் காட்சிகள் | 223 |
| 39. | கலகத் தீயும், தியாகச் சுடரும் | 228 |
| 40. | அன்பின் தியாகம்—அகந்தையின் வேகம் | 237 |
| 41. | புதுமை விளைவுகள்—பொங்கலோ பொங்கல்! | 242 |



( பக்த குமணனில் பேபி ருக்மிணி )

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.



| மலர் 16 | பிரமாதி ஞு சித்திரை மீ<br>மே 1939 | இதழ் 5 |
|---|---|---|



## திருமால் துதி

முயன்றும் பயனறியேன் மொய்வினையை நீக்க
அயன்றன் விதியறிவார் ஆரோ—வயந்தங்கு
நின்மாயை வல்லபத்தை நீக்கவேனக் காமோ
பொன்மானைக் கொன்றய் புகல். 1.

அரங்க நகருறையும் அம்மானை அன்பர்க்(கு)
இரங்கும் எழிற்கருணை யானைத்—தாங்கக்
கருங்கடலுட் கண்டுயிலும் கார்முகிலைத் துன்பம்
ஒருங்கொழிய நெஞ்சே உணர். 2.

பாலமுதாம் கன்னலாம் பாகாம் பயின்றகலை
நாலுணர்வு தேர்ந்தோர் நுனிநாவின்—மாலரவப்
பேரோத மேனியான் பேரோத நீர்கடைந்தான்
பேரோத மேனியான் பேர். 3.

சங்கற்ப மற்றுத் தனியே சிறிதிருக்க
எங்கட் கருள இரங்காயோ—செங்கைச்
சிலைவளைத்த சேவகனே ! சேயிழைக்கா முன்னம்
அலைவளைத்த ஆழுதே அன்று. 4.

—திரு. ராகவாசாரியர்

# பட முதலாளிகளுக்குச் சூடு

நியூ தியேட்டர்ஸ் தயாரித்த பிரஸிடெண்ட் என்ற படத்தில் பிரஸிடெண்டாகத் தோன்றிப் பெரும் புகழ்பெற்ற ஸ்ரீமதி கமலேஷ் குமாரி, பின் வருமாறு கூறுகிறாள்.

“இந்திய சினிமாத் தொழில் மெதுவாகப் பாழும் குழியில் விழப் போய்க் கொண்டிருக்கிறது. அதனை இப்பொழுதே முற்றிலும் சீர்திருத்தினாலன்றி, அதன் கதி அதோகதிதான். படம் தயாரிப்பதிலும், பட நுணுக்கங்களிலும் புது முறையைக் கையாள வேண்டும். தவிர, இந்தியப் பட முதலாளிகள், ஏதாவது ஒரு நடிகர் அல்லது நடிகைமீது ஒருவித தனிப் பிரீதி கொண்டு, அவர்களைக் கவனிப்பதைவிட, தாம் தயாரிக்கும் படங்களை அதிகமாகக் கவனிக்கவேண்டும் என எனக்குத் தோன்றுகிறது.

தமது அபிமானத்தைப் பெற்ற சினிமா மாதர்களுக்கு, அதிக விளம்பரம் கொடுத்து, சினிமாத் தொழிலின் அபிவிருத்திக்குப் பாதகம் விளைவிக்கிறார்கள் சிலர். அதனை நான் வெறுக்கிறேன். உண்மையில் நன்றாக நடிப்பவர்களை அவர்கள் கவனிப்பதே இல்லை. இம்மாதிரியான முதலாளிகளின் போக்கை பத்திரிகைகள் தம் நிகரற்ற செல்வாக்கைக் கொண்டு கண்டிக்கவேண்டும்.

சாமர்த்தியத்தினாலேயே ஒரு நடியோ, நடிகனோ நியாயமான விளம்பரத்தைப் பெறவேண்டும். இந்திய சினிமாத் தொழில், மேனாட்டைவிடப் பத்து வருடம் வயதில் பின்னடைந்திருக்கிறது. அது, மேனாட்டுப் படங்களை நிகர்த்ததாக ஆகவேண்டுமென்றால், இந்தியப் பட முதலாளிகள், உண்மையில் சமர்த்துள்ளவர்களுக்குப் போதுமான சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அவர்களது சொந்த விருப்பு, வெறுப்பு எல்லாம், உண்மை அந்தஸ்தைக் குறைவுப்படுத்தக் கூடாது. அவ்வாறு செய்தால்தான், இந்தியாவிலுள்ள சிறந்த நடிகர்கள் முன்னுக்கு வரக்கூடும்.

## தென்னாட்டில் ஸினிமாக் கலையின் நிலை

ஆரம்பத்தில், மேற்கித்திய பல நாடுகளில் முக்கியமாக ஜெர்மனி, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளில் படங்கள் எவ்வாறு அபரிமிதமாக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கின்றன என்பதை ராம்குமார் கூறிவிட்டு, அந்நிலைமையில் இந்தியாவும் வரவேண்டுமென்றால் யாவரும் பிரயத்தனங்கள் செய்யவேண்டும் என்று கூறினார். இந்தியாவில் சினிமாத் தொழில் விசேஷ அபிவிருத்தி யடையாததற்குக் காரணம், ஸ்டூடியோக்களை வைத்து நடத்தும் பட முதலாளிகளுக்கு, சினிமாக் கலையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாததே யாகும் என்பதாகவும், குறைந்த பணம் முதல்போட்டு, அதிக லாபம் கூடிய சீக்கிரத்தில் அடையவேண்டும் என்ற எண்ணம் ஒழிய வேண்டும் என்பதாகவும் கூறினார். வந்து நடிக்கும் நடிகர்களைக் கௌரவமாக நடத்தத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதாகவும், சில நடிகர்கள் கேவலமாக நடத்தப்பட்டு வருவதையும், நடிகர்களுக்குள் பல வித்தியாசங்களையும் வேற்றுமைகளையும் காட்டுவது பற்றித் தாம் வருந்துவதாகவும் கூறினார்.

நல்ல படித்த அறிவாளிகளேயும் சுயேச்சையாக நடிக்கும் தன்மை புள்ளவர்களேயும் குறிப்பாக பல முதலாளிகள் சினிமாத் துறையில் வரவேற்கத் தயாராயில்லே. கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு சினிமா லாயக்கில்லே என்பது தான் தமது அநுபவத்தின் காரணமாகத் தெரிந்து கொண்ட உண்மையாகும். தாம் இனி, கோவைக்கு வருவதாய் இருந்தால், சினிமாத் தொழிலே விட்டு, வேறு முறையில்தான் வருவதாக உத்தேசம். இனி, தமிழ்ப்படத்தில், தாம் நடிப்பதாகவும் உத்தேசமில்லே என்று, "சினிமா ஸ்டுடியோக்களில் நிலேமை எவ்வாறு இருக்கிறது" என்பதைப் பற்றி, ஸ்ரீ. ராம்குமார் கோவை கலேஞான சங்கத்தின் ஆதாவில் நடந்ததொரு கூட்டத்தில் விரிவாகக் கூறினர்.

# வெளிநாட்டுச் செய்திகள்

## சிறு நாடுகளுக்கு ஹிட்லரின் கேள்வி

ரூஸ்வெல்டுக்கு அனுப்ப வேண்டிய பதிலே ஹிட்லர் தயாரித்து வருகிறர். பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்ட் தன் தந்தியில் பிரஸ்தாபித்திருந்த சிறு நாடுகளுக்கு ஹிட்லர் யாதாஸ்துகளே அனுப்புவதாகத் தெரிகிறது. தம் சுதந்தரத்தை ஜெர்மனி பயமுறுத்துவதாகக் கருதி, குறுக்கிடுமாறு பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டை அவை கேட்டுக் கொண்டனவா என்று ஹிட்லர் கேட்கிறர்.

## ஹிட்லருக்குச் சிறு நாடுகளின் பதில்

பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்டின் தந்தியைப்பற்றி ஜெர்மன் சர்க்கார், பல நாடுகளேக் கலந்தாலோசித்தனர். அதற்குப் பல தேசங்களும் அனுப்பிய பதில்கள் கீழே தரப்படுகின்றன.

### ஹாலந்து

ஜெர்மனியால் பயமுறுத்தப்படுவதாகத் தாங்கள் கருதவில்லேயென்று ஹாலந்து சர்க்கார் பதிலளித்து விட்டனர். ஜெர்மனியிடமிருந்து நேர்முகமாகப் பயமுறுத்தலே எதிர்பார்க்கா விட்டாலும், இப்போதைய நெருக்கடி யுத்தத்தில் கொண்டுபோய்விடுமென்று தாங்கள் அஞ்சுவதாக அவர்களுடைய பதில் கூறுகிறதாம்.

### ஸ்வித்ஸர்லாந்து

ஜெர்மனியும் மற்ற நாடுகளும் ஸ்விஸ் நடுநிலேமையை அங்கீகரித்துள்ளன. அது கௌரவிக்கப்படுமென்பதே எங்கள் நம்பிக்கை. எங்கள் ஆயுத பலத்தைக் கொண்டு, அது கௌரவிக்கப்படும்படி செய்வோம்.

### பின்லாந்து

தான் ஜெர்மனியினல் பயமுறுத்தப்படுவதாக, பின்லாந்து கருதவில்லே யென்றும், முன்னடியே ரூஸ்வெல்ட் அந்தத் தந்தியைப்பற்றித் தங்களுக்குத் தெரிவிக்க வில்லேயென்றும், பின்லாந்து சர்க்கார் தங்கள் பதிலில் குறிப்பிட்டிருக்கிறர்கள்.

**லிதுவேனியா**

லிதுவேனியா மீது படையெடுப்பதில்லை யென்றும், படையெடுப்பை ஆதரிப்பதில்லை யென்றும் மெமெல் ஒப்பந்தத்தின் மூலம் ஜெர்மனி ஏற்றுக்கொண்டிருப்பதை லிதுவேனிய சர்க்கார் சுட்டிக் காட்டுகின்றனர்.

**எகிப்து**

முன்னதாகவே ரூஸ்வெல்டின் தந்தி, தங்களுக்கு அனுப்பப்படவில்லை யென்று, ஜெர்மனிக்கு எகிப்து சர்க்கார் பதிலளித்திருப்பதாக, 'அல் அஹ்ராம்' கூறுகிறது. தன் சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்வதில், எகிப்துக்கு ஆழ்ந்த சிரத்தை யுண்டாகையால், எந்த அனுக்கிரமிப்புப் பிரகடனத்தையும் வரவேற்கு மென்றும் பதில் கூறுகிறதாம்.

## போலந்தின் உஷார் குன்றவில்லை

போலிஷ் சர்க்கார் முன் ஜாக்கிரதையாக ரிசர்வுகளில் ஒரு பகுதியைப் படை திரட்டி தயாராக வைத்து உஷாராகவே இருந்து வருகிறார்கள். இதனால் தினந்தோறும் சராசரி 40,000 பவுன் அதிகப்படி செலவு ஏற்படுகிறது. வெகு சீக்கிரம் தங்கள் அந்தஸ்து மாறுமென்று டான்ஸீக் வாசிகள் எதிர்பார்க்கின்றனர். ஆனால், போலிஷ் பொது மக்கள் எவ்விதமான சலுகைக்கும் தயாராயில்லை. சர்க்காரை அவமதித்ததாக, பல போலிஷ்-ஜெர்மன் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். போலந்திலுள்ள ஜெர்மானியர் துன்புறுத்தப்படுவதாகவும், போலிஷ் மேற்கு லீக் என்ற ஸ்தாபனம் அட்டூழியங்களைச் செய்து வருவதாகவும், ஜெர்மானியர் வீடுகளின் ஜன்னல்களை உடைப்பதாகவும், பல ஜெர்மானியரை அடிப்பதாகவும் ஜெர்மன் பத்திரிகைகள் புகார் செய்கின்றன.

## பிரிட்டன்—ஐயர்லாந்து உறவு

ஐரிஷ் புரட்சியின் 23-வது வருஷ விழாவில் பேசிய டிவேலரா கூறியதாவது :—"ஐரிஷ் பிரிவினையை ஒழிக்கவும், தேசிய சுதந்தரத்தைப் பெறவும், பிரிட்டிஷ் டொமினியன்களுடன் சேர்ந்து உழைப்பதே சிறந்த முறை. அயர்லாந்தின் ஒற்றுமைதான் இப்பொழுது தேசமக்களின் மிகப் பெரிய லட்சியம். ஒன்று பட்ட அயர்லாந்து கூடாதென்று வடக்கிலிருந்து ஆட்சேபிப்போர் தாங்கள், விரைவில் மாறிவரும் உலகில் வசிப்பதை மறந்து விடக் கூடாது. பிரிவினை இருக்கும்வரை, பிரிட்டிஷ்-அயர் உறவு பரிபூர்ணமான நட்பை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. ஆக்கிரமிப்பைப் பற்றிய பேச்சுகள் ஐரிஷ் மக்களுக்கு மனக் கசப்பை உண்டாக்குகின்றன. ஏனெனில், பல நூற்றாண்டுகளாகவே, வட அயர்லாந்திலிருந்து இடைவிடாத ஆக்ரமிப்பு நடந்து வந்திருக்கிறது."

## தென் மேற்கு ஆப்பிரிக்காவுக்குப் பாதுகாப்பு

தென் ஆப்பிரிக்க சர்க்கார், தங்கள் சொந்த பிரஜைகளைப் போலவே, தென் மேற்கு ஆப்பிரிக்காவின் பிரஜைகளுக்கும் பாதுகாப்பை அளிப்பார்களென்று ஜெனரல் ஹெர்ட்ஸாக் பார்லிமெண்டில் தெரிவித்தார். இரண்டு பிரதேசங்களின் போலீஸ் படைகளை ஒன்றாக்கும் திட்டத்தை டாக்டர் மாலன் ஆட்சேபித்தார்.

## பிரான்ஸில் முஸ்தீபுகள்

வரிகளை அதிகப்படுத்தி, வேலை வாரத்தை 45 மணியாக்கி, பிரெஞ்சு சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். யுத்த தளவாடத் தொழிற் சாலைகளுக்கு அதிக வரியுண்டு. பிரெஞ்சு மொராக்கோவில் ஓரானில் ஒரு புதிய கடற்படை தளத்தைக் கட்டுவதற்கு வேண்டிய அதிகாரமும் பண வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவும் பிரிட்டனும்

லண்டன் ஸோவியத் ஸ்தானாதிபதி எம். மெய்ஸ்கி பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மையைப்பற்றிய முழு விவரங்களையும் தன் சர்க் காருக்குத் தெரிவித்துவிட்டார். அவர், உடனே லண்டன் திரும்பு வார். தாமதமின்றி அவர் வாபஸாவதிலிருந்து பிரிட்டிஷ் ஸோவியத் ஒப்பந்தம் சீக்கிரம் ஏற்படலாமென்று யூகிக்கப்படுகிறது. தன் எல்லை சம்பந்தப்படாத போராட்டங்களில் ஸோவியத் ரஷ்யா நடு நிலைமை வகிக்கலாம் என்று சென்ற வாரம் இருந்து வந்த கருத்து இப்பொழுது இல்லையென்று ஒரு லண்டன் செய்தி கூறுகிறது.

ஜெர்மனி-இத்தாலிய ஆக்கிரமிப்பை நிபந்தனையின்றி எதிர்க்க, ரஷ்யா இப்பொழுது தயாராயிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் ஹிட்லர், தன் ரீச்ஸ்டாக் பிரசங்கத்தைச் செய்தபிறகுதான் பிரிட்டிஷ் ஸோவியத் ஒப்பந்த அறிக்கை வெளியாகும்.

## ஜப்பான் கோபிக்கிறது

ரஷ்யாவுடன் சமரஸம் ஏற்படுத்திக் கொள்வதுடன் கூட, ஜன நாயக ஐக்கிய முன்னணியைக் கீழ்க்கோடி வரை நீட்ட பிரிட்டன் முயற்சிப்பது கண்டு, ஜப்பானிய சர்க்கார் ஆத்திரமடைந்திருக்கின்றனர். பிரிட்டன், சீனாவை ஆதரித்து வருவதை எல்லா ஜப்பானிய பத்திரிகை களும் கண்டிக்கின்றன.

## ஜிப்ரால்டரில் ஆகார ஏற்றுமதி கூடாது

சில ஆகாராதிகளை லைசென்ஸில்லாமல் ஏற்றுமதி செய்யக் கூடா தென்று கவர்னர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். போதிய உணவுப் பொருட்கள் ஜிப்ரால்டரில் தயாராயிருக்க வேண்டியதன் அவசியத்தை யுத்தேசித்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஹாலந்தின்மீது ஜெர்மன் போர் விமானங்கள்

ஜெர்மன் ராணுவ விமானங்கள் சென்ற சில தினங்களாக டச் ராணுவ அணிவகுப்புகளுக்கு மேலே பறந்து கொண்டிருந்தன. அத் தகைய மூன்று விமானங்களை டச் விமானங்கள் இறக்கிவிட்டன. இதைப் பற்றி அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

## அல்பேனியாவுக்குப் புதிய கவர்னர்

மாஜி அல்பேனிய ஸ்தானாதிபதி பிரான்ஸிஸ்கோ ஜிமோமோனி அல்பேனிய கவர்னராக நியமிக்கப்பட்டார்.

## யூதர்கள் ஆர்ப்பாட்டம்

இரண்டு கப்பல்களில் வந்து சட்டவிரோதமாய் குடியேற முயற்சித்த 400 யூதர்களை அனுமதிக்க அதிகாரிகள் மறுத்து விட்டதை ஆட்சேபித்து யூதர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டு, பெரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஆர்ப்பாட்டங்கள் நாள் பூராவும் நடைபெற்றன. பல போலீஸ்காரர் கல்லெறி காயமடைந்தனர். பல ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈட்டிகளால் தாக்குண்டனர். ஜெரூஸலத்திலும் டெல் அவீவிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. டாக்டர் ஹெர்ஸாக் என்ற யூத மதகுரு சர்க்காரின் பிரதம காரியதரிசியைக் கண்டு தஞ்சமடைந்தோர் நடத்தப்பட்ட விதத்தைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று கேட்டார். டெல் அவீவுக்கு வடபுறம் இறங்கி, ஒரு ஆரஞ்சுத் தோப்பில் ஒளிந்துகொண்ட 218 பேர்களைப் போலீஸார் கைது செய்து ஜாபாவுக்குக் கொண்டுபோயினர்.

# உள்நாட்டுச் செய்திகள்

---

## ‘மந்திரிகளை நம்புங்கள்’

கட்டாக்கிலிருந்து பூரிக்கு வந்த பல சட்டக் கல்லூரி மாணவர்கள் கவி ரவீந்திரநாத் தாகூரைச் சந்தித்து, கட்டாக்கில் நடக்கும் மெடிகல் ஸ்கூல் மாணவர் ஸ்ட்ரைக் சம்பந்தமாக அவருடைய யோசனையைக் கேட்டதற்குக் கவியரசர், “நீங்கள் பருவமடையாத உங்கள் முடிவிலேயே அதிகமாக நம்பிக்கை வைக்காதீர்கள். இப்பொழுது இருப்பதாக நினைக்கப்படும் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள, இப்பொழுது நீங்கள் பின்பற்றும் முறையை நிறுத்துங்கள். மாகாணத்திலுள்ள காங்கிரஸ் மந்திரி சபையிடம் பூர்ணமாக நம்பிக்கை வைத்து விவகாரத்தை அவர்களுடைய கையில் ஒப்படைத்தால், ஏதேனும் குறைகள் இருக்கும் பக்ஷத்தில் நிவர்த்தியாகும்” என்றார்.

## பி. என். ரயில்வே இந்திய தொழிலாளர் சங்கம்

பி. என். ரயில்வே மானேஜருக்கும், பி. என். ரயில்வே இந்தியதொழிலாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ. வி. ஆர். காளப்பாவுக்கும் நடந்த விவாதத்தினாலும், கடிதப் போக்குவரத்துக்களினாலும், சங்கம் அங்கீகாரம் பெற்றதாகிவிட்டது. இந்த அங்கீகாரம் மே மாதம் 1-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

## பிராங்கோவுக்கு இந்தியாவின் அங்கீகாரம்

‘ஜெனரல் பிராங்கோவின் நிர்வாகந்தான் ஸ்பெயினின் நியாயமான சர்க்காரென்று பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரித்துவிட்டதால், இந்தியாவிலுள்ள ஸ்பெயின் குடியரசுப் பிரதிநிதிகளின் அங்கீகாரத்தை இந்தியா சர்க்கார் வாபஸ் பெற்றுவிட்டதாக இந்தியா கெஜட் அறிவிக்கிறது.

## அசெம்பிளியில் ரகளை செய்தவர்கள் கைது

ஏப். 24-ந் தேதியன்று ஐ. மா. அசெம்பிளியில் நடந்த ரகளை சம்பந்தமாக இதுவரை 32 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் மூவர் இந்த காலிகளுக்குத் “தலைவர்கள்”. சர்க்கார் சொத்தையும், ரிகார்டுகளையும் நாசம் செய்த குற்றத்திற்காக 7 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

## மரண தண்டனை பற்றி ஐ. மா. மந்திரி

ஏப்ரல் 19-ந் தேதியன்று ஐ. மா. கவுன்சிலில், "மரண தண்டனையை ரத்துச் செய்யும்படி சிபார்சு செய்வதாக" ஒரு தீர்மானம் நிறைவேறியது. தீர்மானத்தைப்பற்றிப் பேசின மந்திரி டாக்டர் காட்ஜூ, "இவ் விஷயத்தைப்பற்றி உலகில் எங்குமே பலர் சிந்தனை செய்துதான் வருகிறார்கள். ஆனால், வேண்டுமென்று பிறரைக் கொல்லும் பாதகர்களையும் சமூகத்துக்கு ஆபத்தாக இருப்பவர்களையும் சரியானபடி தண்டிப்பது எப்படி என்பதே பிரச்னை" என்று கூறினார்.

## ஸ்திரீகளின் அஜாக்கிரதை !

யார் ரொம்ப அஜாக்ரதையாக இருக்கிறார்கள் ? ஆணா? பெண்ணா? இது ஒரு நெடுநாளைய பிரச்னை ! "நீதான் அம்மா அஜாக்கிரதையாக இருக்கிறாய்" என்றால் "தெரியுமே ! லக்ஷணம் !" என்று பெண் தெய்வங்கள் கோபிக்கலாம். ஆதலால், புள்ளி விவரத்தின் உதவியை நாடலாம். பம்பாயில் இந்திய கைத்தொழில்கள் காக்ஷி ஒன்று நடந்தது. இது இரண்டு தினங்களுக்கு முன் முடிந்தது. இந்தப் பொருட் காக்ஷியின் போது தொலைக்கப்பட்டு கண்டு பிடிக்கப்பட்ட சாமான்கள் சில வருமாறு:—தங்கச் சங்கிலி, வெள்ளிக் கொலுசு, புடவையில் குத்திக் கொள்ளும் "பின்"கள் வெள்ளிப் பொத்தான்கள், சாவிகள், பெரும்பாலும் வளை, கழுத்து மணி போன்ற சாமான்கள். யார் அஜாக்கிரதையானவர்கள்? ஆணா? பெண்ணா ?

## கட்ச் பிரஜைகளும் வெளியேற்றமா ?

லிம்டியிலிருந்து எப்படி ஆயிரக் கணக்கான ஜனங்கள் வெளியேறினரோ, அதைப்போல் கட்ச் சமஸ்தானத்தில் உள்ள ரோகா ஜாகீரிலிருந்தும் ஏராளமான விவசாயிகள் சமஸ்தானத்தைவிட்டு வெளியேறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறதாம். இந்த விவசாயிகள் சமஸ்தானத்திற்கு வெளியிலுள்ள கத்ரி தாலூகாவில் தங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவாம்.

## வித்யாமந்திர் பள்ளிக்கூடம்

நந்தூரா, ஜாராங் என்ற இரண்டு ஊர்களில், டெபுடி கமிஷனர் ரஹீம் என்பவரும், ஸ்ரீ. எம். எஸ். ஆனேயும் வித்தியாமந்திரைத் திறந்து வைத்தனர். வித்தியாமந்திரைத் திறந்துவைத்து ஸ்ரீ. ஆனே பேசுகையில், "மந்திர் என்றால் வீடு அல்லது மடம் என்று அர்த்தமேயொழிய, அதற்கும் எந்த மதத்துக்கும் சம்பந்தம் கிடையாது. விக்ரஹ ஆராதனைக்கும் 'மந்திர்' என்ற வார்த்தைக்கும் சம்பந்தமே இல்லை" எனத் தெளிவுபடுத்தினர்.

## "கங்காதின்" படத்திற்குத் தடை

ஹாலிவுட்டிலுள்ள ஆர். கே. ஓ. ரேடியோ பிலிம் கம்பெனியார் தயாரித்த, "கங்காதின்" என்ற ஆங்கிலம் பேசும் படம், பம்பாய் மாகாணத்திற்குள் காட்டப்பட யோக்யதை வாய்ந்ததல்லவென, பம்பாய் பிலிம் சென்சார் போர்டார் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர். இது முதலில் வங்க சென்சார்களுக்குக் காட்டப்பட்டதும் அவர்களும் இதே அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர்.

# மகாத்மாவின் மணிவாக்கு

## யுத்தமும் மக்கள் கடமையும்

"யுத்தம் வந்தால், எந்த நிலைமையிலும் அதில் கலந்து கொள்வதில்லை யென்ற சமாதான பிரதிக்கினையில் சேர்ந்து கொள்வது இப்போதுள்ள உலக நிலையில் (காரண காரியங்களையும் பயனையும் உத்தேசிக்கு மிடத்து) சரியான கொள்கையா?" என்பது பற்றி அபிப்பிராயம் கோரி ஒரு கலா சாலை ஆசிரியர் காந்திஜிக்கு எழுதிய கடிதத்திற்கு, ஹரிஜன் பத்திரிகையில் மகாத்மாஜி, பின் வருமாறு பதிலளித்திருக்கிறார்.

"யுத்த எதிர்ப்பு பிரதிக்கினையில் சேர வேண்டியதே யென்பதற்குப் சாதகமாக, பின் வரும் மூன்று காரணங்கள் இருக்கின்றன.

1. தீமையை நன்மையால்தான் வெல்ல முடியும். ஆகையால், பலாத்காரம் எப்போதும் குற்றமே. 2. யுத்தத்தின்மூலம் பிற்காலத்தில் யுத்தத்தை நிறுத்தி சமாதானம் ஏற்படுத்துவது நடக்க முடியாத காரியம். 3. சுதந்தரத்தையும் ஜனநாயகத்தையும் யுத்தத்தில் கிடைக்கும் வெற்றியால் காப்பாற்ற முடிவதில்லை. யுத்தம் நடக்கும்போதே மனித சுதந்தரம் பறிமுதலாகி விடுகிறது.

சமாதானப் பிரதிக்கினையில் சேர்ந்து யுத்தத்தில் உதவி மறுப்பது கூடாது என்பதற்கும் பாதமாக, மூன்று காரணங்கள் இருக்கின்றன.

1. எதிரியிடம் மனிதத் தன்மையோ ஜீவகாருண்ய உணர்ச்சியோ இருந்தால்தான் அஹிம்சையானது பயன் தரும். பாஸிஸ்ட் முறையானது ஜீவகாருண்யமும் மனிதத்தன்மையு மில்லாதது. ஆகையால் அஹிம்சையால் அதை எதிர்க்க முடியாது. ஆகையால் இப்போதுள்ள நிலைமையில் அஹிம்சை காரிய சாத்தியமில்லை. 2. ஜனநாயகத்தின் சார்பாக யுத்தம் செய்ய மறுப்பது தம் நாடு தோற்கும்படிச் செய்து பாஸிஸ்ட் எதிரிக்கு வெற்றி யளிப்பதாகும். ஆகையால், யுத்த உதவி மறுப்பானது சமாதான விரோதிகளின் ஆதிக்கத்தையே ஏற்படுத்தும். 3. யுத்தத்தால் சுதந்தரம் பறி போனாலும் ஜனநாயக ஆட்சியாவது இருந்தால், பிறகாவது சுதந்தரத்தைப் பெற முடியும். பாஸிஸம் வெற்றி பெற்றால், அதற்கும் இடமில்லாது போகும் என்பது ஆசிரியர் கருத்து.

### காந்திஜி பதில்

யுத்த எதிர்ப்பு பிரதிக்னையில் சேருவதற்குச் சாதகமாகச் சொல்லப் படும் காரணங்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. ஆனால், அதற்கெதிராக சொல்லப்படும் காரணங்கள் கூர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டியவையாகும்.

யுத்த எதிர்ப்பில் சேரக்கூடாது என்பதற்குக் கூறப்படும் முதலாவது காரணத்தை ஒப்புக்கொண்டால், யுத்த எதிர்ப்பு இயக்கத்தின் அடிப் படையே துவம்ஸமாகிவிடுகிறது.

பாஸிஸ்ட்களின் மனதையும் நாஜிகளின் மனதையும் திருப்பமுடியாது என்ற அபிப்பிராயமே அந்த வாதத்துக்குக் காரணமாக அமைகிறது. ஏன் அவ்வாறு நினைக்கவேண்டும்?

பாஸிஸ்டுகளும் நாஜிகளும்கூட ஜனநாயக ஆட்சிகள் என்று இப் போது சொல்லப்படும் அரசுகள் இருக்கின்றனவே, அதே ரகத்தைச் சேர்ந் தவைதான்? ஏன்? யுத்த எதிர்ப்பாளர்கள் எந்த ஜீவராசி இனத்தைச் சேர்ந்த வர்களோ அதே இனத்தைச் சேர்ந்தவர்கள்தானே நாஜிகளும்? பாஸிஸ்ட் நாஜிகளும் தமது குடும்பத்தில் மற்றவர்களைப் போலவே அன்பும் வாத்ஸல் யமும் காட்டுகிறார்கள்.

பாஸிஸ்டுகளுக்கும் மற்றவர்களுக்குமுள்ள வித்யாசம் 'அளவை'ப் பொறுத்ததேயொழிய அடிப்படை தன்மையைப் பொறுத்ததல்ல. பாஸி ஸம் ஒருவகையில் தற்காலமுள்ள போலி ஜனநாயகத்தின் புதிய பதிப்பே யாகும். போலி ஜனநாயகத்தின் அக்கிரமங்களை எதிர்ப்பதற்கே பாஸிஸம் தோன்றிற்று என்று கூடச் சொல்லலாம்.

சென்ற மகா யுத்தத்தைப் பற்றி, கிர்க்பி பேஜ் என்பவர் எழுதியுள்ள தைப் பார்த்தால், இரு கட்சியாரும் பொய்யும் புனைசுருட்டும் கட்டுவதிலும் கொடுமைகள் புரிவதிலும் ஒருவருக் கொருவர் இளைத்தவர்களாக இருந்த தில்லை யென்பது தெளிவாகத் தெரிகிறது. வார்ஸேல்ஸ் உடன்படிக்கை யும் தோற்றவர்கள் மீது வஞ்சம் தீர்க்கும் முறையிலேயே பலவந்தமாகப் புகுத்தப்பட்டது.

ஜனநாயக நாடுகள் என்று இப்போது சொல்லிக்கொள்ளும் நாடுகள், இதற்கு முன், பிறாது நாடுகளை அபகரித்துக் கொண்டவர்களே. கட்டுக் கடங்காத அடக்குமுறையையும் அவர்கள் கையாண்டு மக்களை ஒடுக்கியிருக் கிறார்கள். அந்த ஜனநாயக நாடுகள் செய்ததைத்தான் இப்போது ஹிட்லர், முஸோலினி கம்பெனியார், சற்றுத் திறமையான முறையில், நன்றாக விஞ் ஞான முறையில் அமைக்கப்பட்ட பலாத்காரத்துடன், பிரயோகித்து, தம் நாட்டின் லாபத்துக்காக பிறநாடுகளை ஆக்கிரமிக்கின்றனர். இதில் ஆச்சரிய மென்ன இருக்கிறது? ஆகையால் நாம் செய்யவேண்டிய தென்ன? புதிய பலாத்கார தத்துவம் பழைய பலாத்கார தத்துவத்தைவிட எத்தனைமடங்கு கொடுமையுள்ளது என்பதை மதிப்பிடவேண்டும். புதிய பலாத்காரம் எவ் வளவு அதிக கடுமையானதோ அதற்குத் தக்கவாறு அஹிம்சையும் அதிகரிக்க வேண்டும். அவ்வளவுதான். ஆகையால் பாஸிஸ்ட், நாஜிகள் மனதை இளக வைக்க முடியாது என்ற வாதத்தைத் தள்ளிவிட வேண்டியதே. மற்ற இரண்டு காரணங்களும் காரிய சாதகத்தையும் பலாபலன்களையும் பொறுத்த விஷயம். சமாதான வாதிகள் தமது நாட்டின் பலத்தைக் குறைக்கும்படி எதுவும் செய்து விடக்கூடாதுதான். தம் நாடுகள் கட்டாயம் தோற்றே போகும்படியான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த முயற்சிக்கக் கூடாதுதான். ஆனால் அதற்காக, அவர்கள் யுத்தம் கூடாது என்ற தமது அபிப்பிராயத்தின் உறுதியை நன்கு ருசுப்படுத்தும் சந்தர்ப்பத்தை இழந்துவிடக் கூடாது.

தமது சர்க்கார்கள் யுத்த வெறி பிடித்து யுத்தத்தில் சேராதவர்களை ஹிம்சித்தால், அதன் பலனை அவை அனுபவிக்க வேண்டியதுதான். ஜன நாயக நாடுகள் தனி நபர்களுக்கு, "மனச்சாட்சி சுதந்தரம்" தருவது அவ சியம். யுத்த எதிர்ப்பு வாதிகள், தம் தேச நன்மையென்று சொல்லப்படும் ஒரு லக்ஷியத்தைவிட, தமது மனச்சாட்சியைப் பெரிதாக நினைக்கவேண்டும்.

உண்மையான நம்பிக்கையிருந்தால், அது எந்தச் சோதனையையும் எதிர்த்து நிற்க வேண்டியதே. லாபநஷ்டக் கணக்குப் பார்த்துப் பயனில்லை. உண்மையான சமாதான வாதி ஒரு உண்மையான சத்யாக்ரஹியே; சத்யாக்ரஹி, எப்போதும் தன் கொள்கையிலுள்ள நம்பிக்கைப்படி நடப்பவனேயல்லாது, அதனால் ஏற்படும் லாபநஷ்டங்களை மதிப்பவனல்ல; ஏனென்றால், அவன் உண்மைப்படி நடந்தால் கோரிய பயன் கைகூடுமென்று அவன் நிச்சயமாக நம்புவான்.

இப்போதுள்ள போலி ஜனநாயகம் ஜெயித்துவிட்டாலுங்கூட என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது? அதோடு யுத்தங்கள் நின்று போகுமா? யுத்த காலத்தில் ஜனநாயக நாடுகளும், பாஸிஸ்ட் முறைகளையே உபயோகித்து ராணுவத்துக்கு ஆளும் கருவியும் சேகரிக்கும். இறுதியில் ஜெயித்தால் ஓரளவு தனி மனித சுதந்தரம் மீட்கப்படலாம். ஆனால், தனி மனித சுதந்தரம் எப்பொழுதும் வெளி உதவியால் பாதுகாக்கப் படுவதல்ல.

"உலகம் முழுவதும் எதிர்ப்பட்டு நின்றாலும் என் சுதந்தரத்தை நான் காப்பாற்றியே தீருவேன்" என்ற உறுதிதான் சுதந்தரத்தைக் காப்பாற்றும். இந்த உறுதியுடன் அஹிம்சைமூலம் எவன் தன் சுதந்தரத்தைக் காப்பாற்றுகிறானோ, அவன் அதன் மூலம் தன் தேசத்தின் சுதந்தரத்தையும், மனித வர்க்கம் முழுவதன் சுதந்தரத்தையும் காப்பாற்றுகிறவனாவான். அவன் தான் உண்மையான ஜனநாயக வாதி.

வரப்போகும் சோதனையில் சமாதானவாதிகள் யுத்தத்தில் ஆக்கிரமிப்பிலும் சரி, பாதுகாப்பிலும் சரி, எவ்விதத்திலும் பங்கு கொள்ள மறுப்பதன் மூலம், தமது நம்பிக்கையைக் காட்டட்டும். ஆனால், இவ்வாறு யுத்த எதிர்ப்புச் செய்வது அஹிம்ஸையில் பூர்ண நம்பிக்கை யுள்ளவர்களுக்குத் தான் கடமை யாகும். ஆகையால், இவ்விஷயம் ஒவ்வொருவனும் தன் மனத்தைச் சோதனை செய்து பார்த்து நிர்ணயித்துக்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய பிரச்னை யாகும்.

# அஹிம்சை சக்தியை வளருங்கள்

சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டதால் ஏற்படவேண்டிய முழுப் பயனையும் ஜனங்கள் பெற வேண்டுமாயின், சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டது சம்பந்தமான தத்துவத்தைத் தெரிந்து கொள்வது அவசியம். சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டதால், சில சமஸ்தான சர்க்கார்கள், அவ் வியக்கம் நிறுத்தப்பட்டதற்கு முன்புகூட நினைக்காத அவ்வளவு அதிகமான அடக்கு முறைகளை இப்போது கையாண்டு தயை தாக்ஷண்யம் அற்று நடக்க ஆரம்பிப்பதாகத் தெரிகிறது; இது எதிர்பார்க்காத விஷயமல்ல. ஆகவே, இவ்வாறு சர்க்காரின் கடுமை அதிகரிப்பது பற்றி யாரும் மனதில் சோர்வு அடைய நியாயமில்லை.

வலுவில் வந்த யுத்தம் எப்படி சோல்ஜர்களுக்குப் பெரிய பயிற்சியாக அமையுமோ அதுபோலவே இந்த அடக்குமுறை, சத்யாக்ரஹத்தில் பயிற்சிக்குச் சந்தர்ப்ப மளிக்கிறது. அடக்குமுறையின் காரணம் என்ன வென்பதைச் சத்யாக்ரகிகள் கண்டறியவேண்டும். ஒடுக்கப்பட்ட ஜனங்கள் சர்க்

காரின் பலாத்காரத்தைக் கண்டு எளிதில் பயந்துவிடுகிறார்கள்; கஷ்டத்துக்கும் தியாகத்துக்கும் அவர்கள் தயாரா யிருப்பதில்லை. இந்தச் சந்தர்ப்ப மானது, சத்தியாக்ரகத்தின் ஆரம்பப் பாடங்களைக் கற்றுக்கொள்ள சரியான சந்தர்ப்பம்.

ஈடு இலக்கிலாத இப் பெரும் சக்தியைப்பற்றி (சத்யாக்ரஹ சக்தியைப் பற்றி) சிறிதளவாவது தெரிந்து கொண்டிருப்பவர்கள், அடக்கு முறையை (நிர்க்கதியாகவும், சோர்வுடனு மல்லாது) தைரியத்துடனும் சங்கற்பத்துடனும் தாங்கி நிற்க மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு சமஸ்தானம், ஒரு சங்கத்தைச் சட்ட விரோத மென்று அறிவிப்பதாகவைத்துக்கொள்வோம். சிலர், தண்டனைக்குப் பயந்து அவ் வுத்தரவுக்குப் பணியலாம்; வேறு சிலர், 'இப்போது சட்டமறுப்புச் செய்யவேண்டாம்' என்ற அபிப்பிராயத்தால் வேண்டுமென்று அவ் வுத்தரவுக்குக் கீழ்ப்படலாம். இப்போது சட்டமறுப்பு வேண்டாம் என்ற காரணத்துக்காக, உத்தரவுக்குப் பணிந்தால், அவர்கள் தமது சக்திகளைக் காப்பாற்றி, சட்டத்தை அஹிம்சை முறையில் எதிர்த்து நிற்பதற்கு வேண்டிய முறையில் அந்தச் சக்தியை வளர்ப்பார்கள்.

சங்கத்தின் மெம்பர்கள் தனி ஹோதாவில் எந்தக் காரியங்கள் சட்ட விரோதமல்லவோ அந்தக் காரியங்களை யெல்லாம் நடத்திக்கொண்டே இருப்பார்கள். தமது ஸ்தாபனத்துக்குச் சட்ட பூர்வமான ஸ்தானம் கிடைக்க வேண்டு மென்பதற்கான சட்ட பூர்வமான கிளர்ச்சியையும் அவர்கள் நடத்திக்கொண்டே இருப்பார்கள். இவ்வாறு சட்டத்தின் எல்லைகளுக்குட்பட்டே அவர்கள் காரியம் செய்தும் கூட, ஊழியர்கள் கைது செய்யப்பட்டோ வேறு வகையில் அடக்கப்பட்டோ வருவார்களாயின், அந்தக் கஷ்டங்களையும் அடக்குமுறைகளையும் அவர்கள் சந்தோஷத்துடன் தாங்கி நிற்பார்கள்.

இவ்வாறு கஷ்டத்தைத் தாங்கும்போதும் அவர்கள் தம் மனதை சோதனை செய்து, தம்மீது கொடுமை புரிவோர்பால், கோபமோ, மாற்சரியமோ ஏற்படுகிறதா என்றும் கவனித்துக் கொள்வார்கள். "கடவுள் நம்மைக் காப்பாற்றுகிறார்; அவர்தான் நமது சங்கடங்களில் வழி காட்டுகிறார்" என்ற உணர்ச்சி, தமது மனதில் இருக்கிறதா என்று அவர்கள் தம்மைத் தாமே கேட்டுக்கொள்வார்கள்.

இம்மாதிரியான ஒரு பயிற்சியை விடாமல் உறுதியுடன் ஸாதகம் செய்து வந்தால், அந்த ஸாதகர்களுக்கு அஹிம்சை சக்தி தானகவே வளர்ந்து சட்டமறுப்புக்கான விசேஷ முயற்சிகள் எதுவும் செய்வதே அனுவசியமாகிவிடும்.

இதற்கு முந்தின சட்ட மறுப்புக்களை ஆரம்பித்ததில் நான் அவசரப்பட்டும், எவ்வளவு நம்பிக்கை வைக்கலாமோ அதைவிட அதிக நம்பிக்கை வைத்தும் ஆரம்பித்திருக்கிறேன்; அது தவறு; அந்தத் தவறை நான் செய்திருக்கிறேன் என்று ஒப்புக்கொள்ள வேண்டியதே. இருந்தாலும் அந்தத் தவறால் விசேஷ அனர்த்தம் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் நான் எப்போதும் தேசத்தின் நாடியில் கை வைத்து நிலைமை எப்படியிருக்கிற தென்று இடைவிடாமல் கவனித்துக்கொண்டே வந்திருக்கிறேன்; செய்த காரியத்தில் ஏதாவது தவறு அல்லது நிதானப் பிசகு ஏற்பட்டதாக அபாய அறிகுறி காணப்படும்போது, உடனே தவறைத் திருத்துவதற்காக முன்

வைத்த காலை பின் வாங்குவதற்குள்ள துணிவை எனக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார். தவறென்று தெரிந்தால், பின் வாங்குவதற்கு நான் சிறிதும் தயங்குவதில்லை. இதற்காக நான் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

இதற்கு முன்பு அவசரப்பட்டுச் சட்டமறுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக ஒரே ஒரு கெடுதி மட்டும் ஏற்பட்டிருக்கிறது. அதை நான் ஒப்புக்கொள்ளவேண்டும். அதாவது, சட்ட மறுப்பு ஆரம்பிப்பதற்கு வேண்டிய தயாரிப்புகள்பற்றியும், முன்னேற்பாடுகள் பற்றியும் போதிய அளவு சிரத்தை காட்டப்படாமல், ஒரு அலக்ஷிய புத்திக்கு ஜனங்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். ஆகையால், சட்ட மறுப்புக்கு முன்னதாக சில தயாரிப்பு வேலைகள் நடந்தாக வேண்டுமென்று கண்டிப்பான விதி முறைகள் ஏற்படுத்தும்போது ஜனங்களுக்கு அது பிடிக்கிறதில்லை. தயாரிப்பு வேலைகள் உற்சாகமும், ஆவேசமும் உள்ளவையாக இல்லாததால், வீண் தொந்தரவாக சிலர் மனதுக்குப் படுகிறது.

ஆனால், இந்தத் தயாரிப்பும் சாதகப்பயிற்சியும், சத்யாக்ரஹப் பயிற்சிக்கு மிகவும் முக்கியமானவை.

எத்தனையோ சிரமப்பட்டு நுணுக்கமான பல பயிற்சிகள் மூலம் படிப்படியாக பல காரியங்கள் செய்வதன் மூலம்தான் ஒரு சத்யாக்ரஹி, தன் அஹிம்சையைச் சக்தி யுள்ளதாகவும் காரியாம்சத்தில் பயனுள்ளதாகவும் ஆக்கமுடியும்.

அடக்கு முறையின் தன்மை, பயன் இவற்றை நாம் சரிவர உணர்ந்தால், சத்யாக்ரஹியிடம் எதிர்ப்பு சக்தி தானகவே, இயற்கையாகவே வளரும். இந்த உண்மையை நான் எல்லோருக்கும் புரியும்படி செய்ய முயற்சிக்கிறேன்.

# நான் செய்தது தவறு?

---

## ராஜ்கோட்டில் நடந்ததென்ன?

ராஜ்கோட் விஷயமாக நான் செய்ததிலோ இப்போதும் செய்து கொண்டிருக்கும் காரியத்திலோ புதிது ஒன்றுமில்லை. இந்தியா தேசப் படத்தில் ராஜ்கோட் ஒரு மிகச் சிறு இடந்தான். ஆனல், அங்கு நான் கண்ட கோளாறு, இந்தியா முழுதிலும், எங்கும் வியாபித்திருக்கும் ஒரு வியாதியின் அறிகுறியே. ஆகவே, இந்தத் தீமையை முளையிலேயே கிள்ளி விட வேண்டுமென்று நான் எண்ணினேன். அங்கு நான் செய்த முயற்சியின் பயனாக, இதுவரையில் இந்தியா முழுதுக்குமே நன்மை ஏற்பட்டிருக்கிறதென்றே நான் நம்புகிறேன்.

புத்திசாலியான யுத்த தளகர்த்தன், தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளிலுள்ள ஒரு சிறு குறையையும் அலக்ஷியம் செய்ய மாட்டான். நான் அப்படிப்பட்ட ஒரு தளகர்த்தனைப் போலவே நடந்துகொண்டேன். கெய்ரா, சம்பாரண்யம் முதலிய இடங்களில் சத்தியாக்ரஹம் நடத்தியதும் இதே மாதிரி தான். அந்த இயக்கங்கள் நடந்து கொண்டிருந்தபோது இந்தியா முழுவதன் கவனமும் அங்கு இழுக்கப்பட்டது. நான், என்னு

டைய முழுக்கவலையையும் நேரத்தையும் கவனத்தையும் அங்கேயே செல விட்டேன். ஒரே சமயத்தில் எல்லாப் போர்முனைகளையும் சமாளிப்பது என்பது சற்றுத் துர்லபமே யாகும்.

யுத்தத்துக்காக தயார்செய்வது ஒன்று; ஒரு குட்டியுத்தம் நடந்து ஒரு இடத்தில் சண்டையே நடப்பது என்பது வேறொன்று. இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. திரிபுரியில் நடக்கும் காரியம், "யுத்த தயாரிப்பு." ராஜ்கோட்டில் நடந்தது ஒரு குட்டி யுத்தம். உபவாசமென்பது சத்யாக்ர ஹத்தின் ஆயுதச் சாலையிலுள்ள ஒரு மிகவும் திறமையான ஆயுதம். ஒரு சிலர் தான் அந்த ஆயுதத்தைக் கையாள முடியுமென்பதற்காக அதை யாருமே உபயோகிக்கக்கூடாது என்று சொல்லுவது பொருந்தாது. மற்றவர்கள் அந்த ஆயுதத்தை உபயோகிக்க முடியாது என்பதற்காக, நான் கடவுள் எனக்குக் கொடுத்த சக்திகளை உபயோகிக்காது பேசாமலிருப்பது முட் டாள் தனமாகும். ஒருவரிடமுள்ள சில விசேஷ சக்திகள், ஜனநாயகத்தின் சேவைக்காகக் கொடுக்கப்பட்டால், அது ஜனநாயகத்தின் வளர்ச்சியை எப்படி பாதிக்க முடியும்? இதுவரை யாரும் அவ்வாறு கூறுவதாக நான் கேள்விப்பட்டதில்லை. இந்த விசேஷ சக்தியை நான் உபயோகிப்பது ஜன நாயக வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்து ஊக்கமளிருக்கு மென்றே நம்புகிறேன். ராஜ்கோட் உண்ணுவிரதம் அவ்வாறுதான் செய்திருக்கிற தென்பதிலும் சந்தேகமில்லை.

எனது முந்தின உண்ணு விரதங்களால் தேசத்துக்கு நன்மை ஏற்பட் டது என்பது உண்மையானல், ராஜ்கோட் உண்ணுவிரதத்தை ஏன் பழிக்க வேண்டும்? என்னுடைய முந்தின உண்ணு விரதங்களைப்பற்றியும் குற்றம் சொல்லப்பட்டிருக்கிறது என்று இவர்கள் சொல்லலாம். உண்மைதான். அவர்கள் அப்போதும் குற்றம் சொல்லியிருக்கிறார்கள். ஆனல், ஒவ்வொரு உண்ணுவிரதத்தாலும் இந்நாட்டுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை.

ஜனநாயக வளர்ச்சியும் ஜனநாயக மனப்பான்மையும் பாதிக்கப்படு வது வேறெதனலும் அல்ல; பலாத்காரம் ஒன்றுதான் ஜனநாயக உணர்ச்சி யின் வளர்ச்சியைத் தடை செய்யும். என் உண்ணுவிரதத்தால் வேறு என்ன பயன் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டலும் பலாத்காரம் தலை எடுக்காமல் தடுக்கப்பட்டது என்பது மட்டும் நிச்சயம். இவ்வாறு நான் கூறுவதை ஜனங்கள் நம்பட்டும்.

வைசிராயிடம் சென்றதுபற்றி நான் வெட்கப்படவே யில்லை. பிரிட் டிஷ் சர்க்காரின் பிரதிநிதி யென்ற ஹோதாவில் அவர், பிரிட்டிஷ் சர்க் காருக்குட்பட்ட ஒரு சமஸ்தானதிபதி தன் வாக்குறுதியை நிறைவேற்றும் படி செய்வதற்காகத் தலையிடவேண்டுமென்று நான் அவரது கடமையைக் கூறி அழைத்தேன். நான் அவருடைய தயவு அல்லது சலுகை அல்லது கருணைக்காக வேண்டிக்கொள்ளவில்லை. அவர் தலையிடவேண்டு மென்று நான் கூறியிருந்தேன். அந்த நிலைமையில் அவர் அந்த விவகாரத்தைப் பற்றி விவாதிப்பதற்காக அழைத்தால், அதற்கு நான் போக மறுப்பது முற்றி லும் சிறுபிள்ளைத்தனமாகவும் கண்ணியக் குறைவாகவுமே இருக்கும். உண்ணுவிரதத்தின்போது வைசிராய் எவ்வளவு கண்ணியத்துடன், அழ காக, நடந்துகொண்டார் என்பதை நான் ஏற்கனவே ஒப்புக்கொண்டு, என் கருத்தை வெளியிட்டிருக்கிறேன். அவர், என் உண்ணுவிரதத்தை

அலக்ஷியம் செய்து, அவர் இஷ்டம்போல், அவருக்கு எப்போது சவுகரியமோ அப்போது தலையிடவும், அல்லது தலையிடவே மறுக்கவும்கூட முடியும். அவர் அவ்வாறு செய்யவில்லை. தேசத்தின் பெரும் கவலையை அவர் உணர்ந்தார். ராஜபுதானா, சுற்றுப்பிரயாணத்தை அவர் திடீரென்று நிறுத்திக் கொண்டதற்கு, அவரது நல்ல மனித உணர்ச்சியும் ஒரு காரணமென்றே நான் நம்புகிறேன். தாமதமின்றி ஏதாவது தீர்மானத்துக்கு வர வேண்டுமென்று கருதித்தான் அவர் தன் யாத்திரையை முடித்துக்கொண்டு டில்லிக்குத் திரும்பினர். வைசிராயிடம் போய் காத்திருந்ததுபற்றி நான் வருத்தம் தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை.

கண்ணியமான முறையில் ஒரு ஒப்பந்தத்துக்கு வருவதும், எதிரியைத் தன் அபிப்பிராயத்துக்குத் திருப்ப முயற்சிப்பதற்கான சந்தர்ப்பதைக் கைவிடாதிருப்பதும் சத்யாக்ரஹத்தின் அம்சமாகும்.

இதற்குமுன், லார்ட் இர்வின் வைசிராயாக இருந்த காலத்தில் நான் எவ்வாறு நடந்துகொண்டேனே, அதே முறையை லார்ட் லின்லித்கோவுடன் அதைவிட சிறிய அளவில் நான் இப்போது திரும்பவும் செய்தேன்.

கடைசியாக, பெடரல் நீதிபதியின் தீர்ப்புக்கு விட்டதுபற்றிச் சொல்கிறேன். தாகூர் சாஹிப், சர்தார் பட்டேலுக்கு 1938 டிசம்பர் 26ௗ எழுதின கடிதத்தின் சரியான வியாக்யான மென்னவென்று அபிப்பிராயம் கூறுவதற்கு, பெடரல் நீதிபதியின் தீர்ப்புக்கு விடுவதென்று நான் ஏற்றுக்கொண்டேன். அந்தக் கடிதத்துக்கு, தாகூர் சாஹிப் ஒருவிதமான வியாக்கியானம் கூறினர். ஸர்தார் பட்டேல், வேறு விதமாக வியாக்கியானம் செய்தார். இந்த நிலைமையில் இதுபற்றி, பெடரல் நீதிபதி தன் வியாக்கியானத்தைச் சொல்லட்டும் என்று வைசிராய் யோசனை கூறினர். அந்த நிலைமையில் நான் செய்யவேண்டியதென்ன? "அவர் இந்திய அரசியல் சட்டப்படி ஏற்பட்ட ஒரு கோர்ட்டின் நீதிபதியாகையால், அவருடைய அபிப்பிராயத்துக்கு விடக்கூடாது" என்று நான் சொல்வதா? அவ்வாறு ஆக்ஷேபிப்பது எனது கண்ணிய உணர்ச்சிக்கும் உசிதானுசிதம்பற்றிய உணர்ச்சிக்கும் முற்றிலும் மாறுகும். அவ்வாறு நான் ஒருகாலும் சொல்ல முடியாது.

அந்தக் குறிப்பிட்ட ஒரு தஸ்தாவேஜியின் வியாக்கியானமென்ன என்று கூறுவதற்கு, ஸர். மாரிஸ் குவயரைக் கேட்டுக்கொள்ள நான் இணங்கியதால், சமஷ்டி ஒரு அங்குலம்கூட நெருங்கி விடவில்லை.

ஸர். மாரிஸ் குவயர் வியாக்கியானத் தீர்ப்பு அளித்தது பெடரல் நீதிபதியென்ற ஹோதாவிலல்ல. கியாதி பெற்ற ஒரு சட்ட நிபுணர் என்ற ஹோதாவிலேயே பிரச்னை அவரது அபிப்பிராயத்துக்கு விடப்பட்டது.

அவர் எவ்வளவு உழைப்புடன் தன் கடமையைச் செய்திருக்கிறார் என்பதை அவரது தீர்ப்பைப் பார்த்தால் யாரும் தெரிந்து கொள்ளலாம்.

## ஒவ்வொரு மெம்பரும் எல்லோருக்கும் பிரதிநிதி

சீர்திருத்த கமிட்டியில் தாகூர் சாஹிப் நியமித்த நாலு பேர்களும் விலக்கப்பட்டபோதிலும் சீர்திருத்த கமிட்டியானது எல்லா வகுப்பாருக்கும் எல்லா நன்மைகளுக்கும் பிரதிநிதி யென்ற தோரணையில் நடக்குமென்பது நிச்சயம். அந்த நாலு மெம்பர்கள் கவனிக்கும் நன்மைகளையும் சீர்திருத்த கமிட்டி கவனித்தே தீரும். ஒரு கமிட்டி ஏகோபித்து எல்லா நன்மைகளையும் கவனிக்காமல் அக் கமிட்டியிலுள்ள பலர் பலவித நன்மைகளைத்

தனிப்பட்ட தோரணையில் கவனிப்பதென்ற அடிப்படையில் உலகில் ஒரு கமிட்டிகூட ஏற்பட்டதாக எனக்குத் தெரியாது.

தேசத்திலுள்ள பல்வேறு நன்மைகளுக்கும் ஒவ்வொரு நபரும் பிரதிநிதி என்பதே ஜனநாயகத்தின் சாரமாகும். ஆனல், விசேஷ நன்மைகளுக்கு விசேஷ பிரதிநிதித்துவம் இருப்பதை ஜனநாயகம் ஒதுக்கவில்லை; ஒதுக்கக்கூடாது. ஆனல் அவ்வித விசேஷபிரதிநிதித்வம் ஜனநாயகத்தின் களங்கமே தவிர சிறந்த அம்சமல்ல.

* * * * *

சர்தார் பட்டேல் நியமிக்கும் நபர்கள் முஸ்லீம்களின் உரிமைகளையும், பாயாத்கள், ஹரிஜன்கள் முதலியவர்களின் நியாயமான உரிமைகளையும் பாதுகாக்கமாட்டார்களென்பது அர்த்தமல்ல. கமிட்டியைப் பொறுத்த வரையிலும் இக் கனவான்களுக்கு சமூக அபிமானமில்லை. அவர்களுடைய நோக்கம் ராஜ்கோட் மக்கள் அனைவரின் க்ஷேமாபிவிருத்தியே. ஜனங்களின் உரிமைகளுக்காக, பரிஷத்தே போராட்டம் நடத்தியதால், அப் பரிஷத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள்.

## “ துர்ப்பாக்கிய திருவிதாங்கூர் ”

“ சட்ட மறுப்பை அங்கே நிறுத்திவைத்தது முற்றிலும் நியாயமென்பதைச் சம்பவங்கள் நிரூபித்து விட்டனவென்பதை அங்கிருக்கும் ஊழியர்கள் உணரவேண்டும். அவர்கள் பொறுமையையும் அடக்கத்தையும் காட்டுவதற்கு அதிகாரிகள் போதிய சந்தர்ப்ப மளித்திருக்கிறார்கள்.

சட்டமறுப்பு இல்லாமலேயே கஷ்டங்களை அநுபவிப்பதற்கும் அவர்கள் சந்தர்ப்பம் அளித்திருக்கிறார்கள். எனவே, மனேதிடமும், நம்பிக்கையும் குறையாமல் ஊழியர்கள் இந்த வேள்வியில் பிரவேசிப்பதுடன் அமைதியாகவும் உறுதியுடனும் நிர்மாண வேலைகளைக் கடைபிடிப்பார்களானல், ஸ்வராஜ்யம் தானகவே சித்தித்து விடும். இது, துணிச்சல் நிறைந்த அறிக்கை. சிலர், இது கேலிக்கிடமா யிருப்பதாகச் சொல்வார்கள். இருந்தாலும் ஆழ்ந்த நம்பிக்கையே அதற்கு அஸ்திவாரமாயுளது.

## சமஸ்தானபதிகளின் அதிகார எல்லை யென்ன?

வைசிராய் 1937 பிப்ரவரி 26வ யன்று ஒரிஸ்ஸா சமஸ்தானங்களுக்கு கொடுத்த சன்னத் பத்திரத்திலிருந்து சிலவாக்கியங்கள்.

“ உங்கள் சமஸ்தானத்தில் கொலை, கொள்ளை முதலிய அக்கிரமச் செயல்களை ஒடுக்குவதற்கு உங்களால் இயன்றதெல்லாம் செய்து முயற்சிக்க வேண்டும்.

“நீதியாகவும் நேர்மையுடனும் பக்ஷபாதமின்றியும் எல்லோருக்கும் நீதி வழங்க வேண்டும். உங்கள் சமஸ்தானத்து மக்களின் உரிமைகளை அங்கீகரித்துக் காப்பாற்ற வேண்டும். அவ் வுரிமைகளை ஒடுக்கக்கூடாது; வேறு யாரும் ஒடுக்கவும் தாங்கள் சம்மதித்துப் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. அதிலும் முக்கியமாக ‘பூர்வ குடிகள்’ மலைஜாதியார் இவர்கள் விஷயத்தில் நீர் தனி ஹோதாவிலும் ஜவாப்தாரியாவீர்.

வைசிராயிடம் அதிகாரம் பெற்ற கவர்னர் ஜெனரலின் கிழக்குச் சமஸ்தான அரசியல் ஏஜண்ட் அல்லது அவரது அதிகாரம்பெற்ற வேறு அதிகாரி சொல்லும் புத்திமதிகளின்படி நீவிர் நடக்கக் கடமைப்பட்டவர். ”

# 33

## சிதறிய இதயம்—சிதைந்த காதல்

புறக்கடைப்பக்கத்தை நோக்கி ஓடும் சுமதியைப் பிடிப்பதற்கு பின்னால், தட்டித் தடுமாறி விழுந்தவர்களும், எழுந்தவர்களுமாய், வெகு கவலையுடன் ஓடியும் அவளைப் பிடிக்க முடியவில்லை.

சுமதியின் வாக்கிலோ, "நான் அபாக்கியவதி! பெரிய வியாதிக்காரனின் பொருள்; மஹா பாபிஷ்டி; மஹா அதிர்ஷ்டஹீனை! அபாக்கியவதி! இனி உயிர் வாழ லாயக்கற்றவள். என்னைத் தொடரவேண்டாம்" என்று கத்திக்கொண்டே பின்புறமுள்ள தோட்டத்தில் தலைகால் தெரியாமல் தலைவிரி கோலமாக ஓடுகிறாள்.

ஆச்ரமத்தின் ஜல சௌகரியத்திற்காக, தோட்டத்தில் பெரிய துறவு ஒன்று, இருக்கிறது. அதிலிருந்து பம்பு மூலம் வாட்டர் ஸ்டோர் செய்து பல குழாய்கள் வழியாக ஜலம் ஸப்ளையாகிறது. ஆகையால், அந்தத் துறவில் விழுவதற்குத்தான் சுமதி ஓடுகிறாள் என்பது தலைவிக்கு வெகு நன்றாகத் தெரிந்துவிட்டதால், அந்த அம்மாளின் தவிப்பு பன்மடங்கு அதிகரித்துவிட்டது.

மனத்திலுள்ள வேகத்தினால் தள்ளாமையின் தளர்ச்சிகூட மறைந்துவிட்டது. "சுமதீ! சுமதீ! என்னைச் சந்தியில் விட்டு சங்கடப்படுத்தாதே! என் உயிரை வாங்காதே! என்னைச் சோதிக்காதே! நில்லு; நில்லு. என் செல்வமே நில்லு" என்று கண்ணீர் பெருகப் பரிதாபகரமாய்க் கூவிக்கொண்டே ஓடினாள்.

தோட்டத்தில் மாடுகளுக்குத் தண்ணீர் காட்டிக்கொண்டிருந்த தோட்டக்காரன் ஏதோ கூச்சல் பெரிதாகக் கேட்பதை அறிந்து எழுந்து ஆச்சிரமத்துப் புறம் வரக் கிளம்புகையில், சுமதி ஓடி வருவதையும், தலைவியும் மாணவிகளும் கூச்சலிடுவதையும் பார்த்து ஒன்றுமே புரியாதவனாய்த் தம்பித்து நின்றான்.

அடுத்த வினாடியே விஷயங்களை அவரவர்களின் வாய்ப் பேச்சினால் தெரிந்துகொண்டு, சுமதியை ஓட விடாமல் தடுத்தான். சுமதியின் மனக் கொதிப்பின் வேகத்திற்குமுன் இந்த ஏழைத் தோட்டக்காரனின் தடுப்பு எம்மட்டும்? அவள், ஒரே தட்டாக அவனைத் தட்டிவிட்டாள்.

தலைவியை நோக்கி, "அம்மணீ! நான் அனாவசியமாய் ஆச் சிரமத்துத் துறவில் விழுந்து, ஆச்சிரமவாஸிகளுக்கு ஒருவித கஷ் டத்தையும் உண்டாக்கமாட்டேன். நான் ஓடுவது துறவில் விழு வதற்கல்ல. நீங்கள் எல்லோரும் நில்லுங்கள்" என்று ஒரு நிமிடம் அவளையும் மறந்து நின்றவாறு பதில் சொன்னாள்.

இதற்குள், ஓடிவரும் பெண்கள் சுமதியைப் பிடித்து, ஓட முடியாமல் கட்டி அணைத்துக்கொண்டார்கள்.

சுமதிக்கு, கட்டுக்கடங்காத துக்கம் பொங்குகையில், அவள் மட்டும் கட்டுக்கு அடங்குவாளா? ஒரே திமிருகத் திமிறிக்கொண்டு தோட்டத்து வேலியையும் தாண்டி அப்பால் ஓடிவிட்டாள். பின் புறத்துத் தெருவில், பத்தடிக்கு அப்பாலுள்ள ஓர் சிறிய அம்மன் கோவிலுக்குள் ஓடினாள்.

அச் சிறிய—படாடோபமே இல்லாத, இடிந்து விழுந்துள்ள சுவர்களுக்கு மத்தியில் வெகு எழ்மையாயும், ஜகஜ் ஜோதியாயும் வீற்றிருக்கும் அம்மன் சந்நிதானத்தில்தான் சுமதி அடிக்கடி சென்று முறையிடுவாள்; வேண்டுவாள்; தொழுவாள்; அழுவாள்.

பெரிய கோவிலாயும், படாடோபம் நிறைந்ததாயும் இருந்தால், சதா ஜனங்களின் தொல்லையும் அர்ச்சக பரிசாரகர்கள், கோவில் அதிகாரிகள், பொது ஜனங்கள் முதலியவர்களின் ஆர்ப்பாட்டமும் தடபுடலும் அட்டகாஸமும் திம்மலோகப்படும். ஏகாந்தமாகச் சுவாமி தரிசனம் கிடைப்பது துர்லபம். கையில் காசில்லாவிடில், சுவாமி தரிசனம் கிடைப்பதும் சில சமயம் கஷ்டமாகிவிடும்.

இம்மாதிரி ஏழைக் கோவில்களில் எவ்விதமான நிபந்தனையோ கஷ்டமோ இல்லை அல்லவா! ஒரு குருக்கள் தம் இஷ்டம்போல் வந்து ஒரு வேளை காலை பூஜையும், ஒரு வேளை மாலை பூஜையும் செய்துவிட்டுப் போய்விட்டால், பிறகு ஒன்றுமே சந்தடியே இல்லை. படாடோபத்தில் இருக்கும் அம்மனும் ஒன்றுதான்; ஒன்றுமே இல்லாதிருக்கும் அம்மனும் ஒன்றுதான்; எல்லாம் ஒரே ஸ்வரூபம் தான் என்ற தெளிந்த நோக்குடன் சுமதி தரிசித்து வரும் அதே அம்மன் சந்நிதானத்தில் சென்று, தடாரென்று அம்மனின் காலில் விழுந்து நமஸ்கரித்தாள். அந்த அம்மனை யாரும் தொடக்கூடிய நிலைமையில் இருந்ததால், அதன் காலைக் கட்டிக்கொண்டு, "தாயே! அம்பிகே! ஜகன்மாதா! என் தலையில் இம்மாதிரியான எழுத்தை எழுதியா, இதுவரை அதை மறைத்து வந்தாய்?

ஐயோ! எனக்கு இனி என்ன விமோசனம் செய்யப் போகி ருய்? பெரும்பாறை என் தலையில் இருப்பதை யறியாது, நான் என் பாழ்பிறவிக்குமட்டும் வருந்தி உன்னிடம் கண்ணீர் வடித்துக்

கதறினேனே! மன்மதாகாரமான வடிவழகன் எனக்குக் கண்ணாளனாக வரவேண்டுமென்று அனவரதமும் உன் சன்னிதானத்தில் வேண்டித் தொழுததற்கு என் உள்ளத்தை அத்தகைய தீர சுந்தராங்கனே கொள்ளை கொண்டும், பெரும் பாவியாகிவிட்டேனே!

'அம்பிகே! என் எண்ணமெல்லாம் கனவா! என்னுடைய மனக்கோட்டை இடியாதிருக்குமா?' என்று நான் அன்று பிரார்த்தனை செய்யும்போது உன் விளக்கு திடீரென்று அவிந்ததே, என் இதயத்திலும் குபீரென்று கவலையும் திகிலும் அந்தகாரமும் குடிகொண்டன. என் தலையெழுத்து இவ்விதமாக இருக்கும் என்பதை அறியாததால் 'என் ஆத்ம துரைக்கு என்ன விபத்து வந்துவிடுமோ; அப்படியொன்று மில்லாது காக்கவேண்டுமே!' என்று நான் தவித்து வேண்டினேனே!

என் விதி அவருக்கும் ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது. எனக்கும் பேரிடி தலையில் இடித்ததுபோன்றாகிவிட்டதே! ஹா! நினைக்கின் தேகம் பற்றி எரிகிறதே. தாயே! அம்பிகே! பெரிய வியாதிக்காரனா என் புருஷன்!........பெரிய வியாதிக்காரனின் உரிமைப் பொருளா நான்! ஐயோ! என்னால் சகிக்கமுடியவில்லையே! என்னை ஏன் இப்படி எல்லாம் சோதிக்கிறாய்? எனக்கு என்ன முடிவு சொல்லுகிறாய்! சொல்லு. சொல்லு. எனக்கோர் நிம்மதியான முடிவை நீ சொல்லாவிட்டால், உன் சன்னிதானத்திலேயே நான் மண்டையை உடைத்துக்கொண்டு, பிராணனை விட்டு விடுவேன்.

'தாயே! என்னைப் படைத்தாய்! திக்கில்லாத அனாதையாய் வளர்த்தாய்! நடக்கக்கூடாத, மலைபோன்ற ஆசைக் கோட்டையை என்னுள் எழுப்பினாய். கடைசியில் தீராத துக்கத்தில் என்னைத் தள்ளிவிட்டாய். இதிலிருந்து நான் உய்யும் மார்க்கத்தைக் காட்டு. இனிமேல், என்னால் சகிக்கமுடியாது' என்று கண்ணீரை ஆறாய்ப் பெருக்கியவாறு கதறியும், அம்மன் திருவடியில் தலையை முட்டிக்கொண்டும் புலம்புகிறாள்.

தலைவி மற்ற மாணவிகளை நிறுத்திவிட்டுத் தானும் அந்தக் கோயிலுக்குள் வந்தாள். சுமதியின் புலம்பலைக் கண்டு அவளால் சகிக்கமுடியவில்லை. "அம்மா! வீணாய் வருந்துவதனால் உபயோகமில்லை. எழுந்து வா! நீ பிறந்ததே பிறருக்குப் பரோபகாரமாய் இருப்பதற்குத்தான் என்று மனந்தேறு. வாம்மா!" என்று தலைவி சுமதியின் கையைப்பிடித்து இழுத்தாள்.

ஆத்திரம் பொங்கும் வேகத்துடன் காளிகா தேவியைப்போல் பயங்கரமாய் தலைவியை ஒரு முழி முழித்துப் பார்த்தாள். உடனே,

அம்மன் சிலையை நோக்கினள். "ஏ அம்பிகே! உனக்குக் காதும் செவிடா! கண்ணுங் குருடா! நீ வெறுங் கல்லுதானு? உன் சக்தி எல்லாம் எங்கே போயிற்று? யார் அபகரித்துக் கொண்டார்கள்? நீ வாய் திறக்கமாட்டாயா? எனக்கோர் வழி சொல்லமாட்டாயா? இது உன் கடமையல்லவா? மக்களைப் படைக்கவும் துன்பத்தைக் கொடுக்கவுந்தான் உனக்குத் தெரியுமோ?....சேச்சே!....இப்படிப் பட்ட தாயிடம் இனி முறையிட்டு லாபமில்லை. தற்கொலைதான் விமோசனம்.

என்னையோர் அனுதை என்று எண்ணியிருந்த அதே நிலைமையில் என் பிறவி உண்மையாக இருக்குமாயினும் நான் சந்தோஷப் பட்டிருப்பேனே!....பெரியவியாதிக்காரனின் மனைவியா நான்!.... ஹா! சகிக்கமுடியாது. சகிக்கமுடியாது. அதோ! அதோ! மோட்டார் வரும் சப்தம் கேட்கிறது. அதில் அகப்பட்டுக்கொண்டு இறப்பதே சரி" என்று கூறிக்கொண்டே ஓட்டமாக வீதிக்கு ஓடிவந்தாள்.

வேகமாகப் போகும் காரில் அகப்பட்டுச் சாகும்பொருட்டு, இமைகொட்டும் நேரத்தில் காருக்கு முன்னுல் தடாரென்று விழுந்தாள். காரும் வந்துவிட்டது. தலைவியின் உயிரோ துடிதுடிக்கின்றது. அவளால் என்ன செய்யமுடியும்? "ஐயோ! ஆபத்து! ஆபத்து. காரை நிறுத்துங்கள். நிறுத்துங்கள்" என்று கூவிக்கொண்டே இரு கைகளையும் ஆட்டியபடியே வண்டியின் முன்பு ஓடிவந்து சுமதியைத் தூக்குவதற்குள் கார் நெருங்கிவிட்டது.

தலைவியின் கைகாட்டலும், கூச்சலும் கண்ட மோட்டார் ஓட்டுபவர் எத்தனையோ பிரயாசைப்பட்டு ப்ரேக்கு போட்டும் சுமதியின்மீது உராய்ந்த பிறகே கார் நின்றது. காரிலிருந்த ஆசாமி "ஹா! தாங்களா!" என்று கூறிக்கொண்டே ஒரே விநாடியில் இறங்கினர். தலைவியும் அபாரமான வியப்புடன், "நீங்களா! அடாடா! அம்பிகையின் அருள்தான் இந்த சமயம் உங்களை இங்கு வரவழைத்தது" என்று கூறியபடியே, உடனே சுமதியைத் தூக்கி இருவருமாக நிறுத்தினர்கள்.

காரில் வந்தவர், தன் ஆச்சிரமத்தின் போஷகர் என்றதை அறிந்ததும் சுமதிக்கு அத்தகைய நிலைமையிலும் வழக்கம்போன்றுள்ள பயமும்- திகிலும் வந்து சுற்றிக்கொண்டன. தலைவிக்கு உள்ளுக்குள் நடுக்கந்தான். "ஏன் இந்த ரகஸ்யத்தைத் தெரிவித்தாய்? என்று போஷகர் திட்டப்போகிருரே" என்று பயந்தபடியே நின்ருள்.

போஷகர் :—இதென்ன அலங்கோலம்? என் சுமதி இப்படி வந்து விழுந்தாள். விஷயமென்ன?....ஏதாவது....

என்று இழுப்பதற்குள் சுமதியே, "ஆம்! எஜமான்! ஏதாவ தென்று இழுக்கவேண்டாம். என் விதியைத் தெரிந்துகொண் டேன். என் பாழாப்போன பிறவியின் மர்மத்தை அறிந்துகொண் டேன். பெரியவியாதிக்காரனின் மனைவி என்கிற கொடிய பட்டத் திற்கு நான் உரித்தானவள் என்பதை அறிந்தேன். இனி நான் உயிர்வாழ பிரியப்படாமல்தான் இவ்விதம் துணிந்து விழுந்தும் என் சண்டாள உயிர் போகவில்லை."

என்று முடிப்பதற்குள், போஷகர் தலைவியை ஒரு முழிமுழித் துப் பார்த்தார். "என்ன! தற்கொலைக்காத் துணிந்தாய்? சுமதி! என்றைக் கிருந்தாலும் உன் மர்மத்தை ஒருநாள் நீ அறியவேண் டியவள்தான்; இருக்கட்டும். அதற்காக நீ தற்கொலை செய்து கொண்டு உன்னையே பாழ்படுத்திக் கொள்வதுமன்றி, ஆச்சிரமத் தின் பெயரையும் கெடுக்கவா பார்க்கிறாய்? உயிர் உன்னுடைய பொருளல்ல. இந்தச் செய்கை போலீஸாருக்குத் தெரிந்தால் உன்னைத் தண்டிப்பார்கள்.

தலைவியின் முட்டாள்தனமே இதற்குக் காரணமாயிருக்கு மாயின் நான் மிகவும் வருந்துகிறேன். நான் வெகு அவசர காரிய மாய்ப் போவதால், பேச அவகாசமில்லை. நீ நம்பும் இந்த அம் பாள்மீது ஆணையாக, இனி நீ தற்கொலை புரிந்துகொள்ளக்கூடாது. உள்ளே போ! பிறகு நான் வந்து பார்க்கிறேன்" என்று கூறி விட்டுப் போய்விட்டார்.

சுமதி என்னதான் செய்வாள். கதிகலங்கிவிட்டது. எப்படி ஆவேசத்துடன் சாவதற்காக ஓடிவந்தாளோ, அதேபோல் ஆவே சத்துடன் ஓட்டமாக ஓடிவந்து தலைவிரி கோலமாய்த் தன் படுக் கையில் விழுந்தாள். அவள் நெஞ்சை அள்ளித் தின்னும் சங்கடத் தைச் சகிக்கமுடியவில்லை.

"எத்தனையோ அழகான புருஷனுக்கு மாலையிடப் போகி றோம்" என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த எனக்கு பெரியவியாதி புருஷனா? ஐயையோ! நான் எப்படி இதைச் சகிப் பேன்?" என்று தனக்குள் எண்ணிப் புலம்பித் தவிக்கையில், அவ் வறைக்குப் பக்கத்து அறையில் பத்து வயதுக்கு மேல்பட்ட சிறுமிகள் எல்லோரும் ஆச்சிரமத்துக்காக ஏற்கெனவே தயாராகும் நாடகத்தை ஒத்திகை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

அந்தக் கதையோ நம் பாரதநாட்டின் பெருமையைச் சிறப் பிக்க அவதாரம் செய்த கற்புக்கரசிகளாகிய பெண் ரத்தினங் களுக்குள் தலைசிறந்த மாணிக்கம்போன்றவளான நளாயினியின் புனிதமான சரிதை யாகும்.

நளாயினி, தன் புருஷனின் பெரிய வியாதியைக் கொஞ்சமும் வெறுக்காமல் அவர் இச்சித்தபடி எல்லாம் பணிவிடை செய்து அவரை உத்ஸாகப்படுத்தி மகிழ்விக்கும் பாகத்தை ஓர் சிறுமி ஒத்திகையில் பேசுவதைக் காதில் கேட்ட சுமதியின் உள்ளம் ஒரு வகையிலும் நிலைக்காது கட்டுமீறித் தத்தளிக்கின்றது; குழம்பித் தவிக்கின்றது.

அச் சரித்திரத்தைக் கேட்கக் கேட்க, அவள் இதயம் படும் சங்கடத்தைக் கூறத் திறமில்லை. "ஆம்! ஆம்! உத்தமி என்றால் நளாயினி யன்றோ உத்தமி; தன் பெரிய வியாதிக் கணவனின் உச்சிஷ்டத்தை உள்ளன்புடன், பக்தியுடன் உட்கொண்ட புனித தேவியாக விருப்பதால்தான், உலகம் அன்றும், இன்றும், என்றும் அந்த வனிதா ரத்தினத்தைக் கொண்டாடித் தொழுகின்றது.

அவள் மாத்திரம் ஒரு கடுகளவு அசூயையோ, வெறுப்போ கொண்டு கணவனை அலக்ஷியம் செய்திருப்பாளாயின், அவள் இருந்த இடம் தெரியாது தூற்றப்பட்டு மறைந்துபோயிருப்பாள். அவளுடைய சகிப்புத்தன்மையும், பதிபக்தியுமன்றோ உலகம் அழிந்தாலும் அவள் பேர் அழியாதபடிச் செய்துவிட்டன....

நானும் அவளைப் போன்ற ஓர் பெண்தானே! அத்தகைய தெய்வத்தன்மையும், சகிப்புத்தன்மையும் இல்லையெனினும் அவள் அடிச்சுவடைப்பற்றி நடக்க ஏன் எனக்குமட்டும் உரிமை இல்லையா! ஆம்! வீணாகத் தற்கொலை புரிந்துகொண்டு அலகையாய்த் திரிந்து மறு பிறவிக்கும் ஏன் பாப மூட்டைகளைக் கட்டவேண்டும். பல மந்திரவாதிகளின் கையால் அடிப்பட்டுச் சாவதைவிட என் பிறவியின் பாபத்தை யொழிக்க, எனது ஸ்திரீ தர்மத்தின் கடமைப் படிக்கு அந்தப் பெரியவியாதிக்காரனுக்குப் பணிவிடை செய்து நான் ஏன் புண்ணியம் அடையக் கூடாது?

ஆமாம்! அந்த நளாயினியின் வம்சத்தில் நானும் ஒரு பெண்ணாய்ப் பிறந்தும் ஏன் நானும் அவளைப்போல் நடக்கக் கூடாது. அந்த நளாயினியின் சரிதையைப் படித்து ஜனங்கள் அறிகிறார்கள். என் சரிதையை நேரிலேயே பார்க்கட்டும். இனி, இக் கட்டைக்கு இதுதான் முடிவு. காதலாம், களிப்பாம்; எல்லாம் இனி எனக்குச் சாதல்தான் இன்பம்.

உலகோருக்காவது நல்ல பெயர் எடுத்து ஒரு உதாரணமாக வாழ்ந்து காலத்தைக் கடத்துவோம். கடவுளே! எனது இப் பாழ் பிறவியில் நான் அறியாது செய்த பாபங்கள் எண்ணிறந்தவைகளாக இருக்கலாம். ஆனால், நான் அறிந்து மனமாறச் செய்த

பாபம் என் பாழும் மனம் ஆத்மநாதன்மீது சென்று லயித்தது ஒன்றேயாகும். அதைத் தவிர, நான் ஒரு பாபமும் செய்தறியேன்.

ஜகத்ரக்ஷகா! இனி இந்த ஒரு பாபத்திற்குக்கூட நான் ஆளாகும்படிச் செய்யாது, உனது சக்கரத்தினல் என்னுடைய இதயத்தில் பதிந்து கிடக்கும் காதல் களங்கத்தைக் கொய்துவிடு. நிர்மூலமாக்கி விடு. என் இதயத்தில் மாசு மருவிலாது, தூய்மையாக்கிசெப்பனிட்டுவிடு. பழிக்குப்பாத்திரமாக்காதே. உலகம் நிந்திக்கும் முறையில் என்னை ஓர் சுமைதாங்கியாக்கி விடாதே. இதுதான் நான் உன்னைக் கோரும் கோரிக்கை. இந்த ஒரு வரனையேனும் எனக்குக் கொடுத்து என்னைக் காப்பாற்று" என்று தனக்குள் பித்துப் பிடித்தவள்போல் வேண்டிக் கண்ணீர் சிந்தினள்.

உடனே, வீராவேசங் கொண்டவள்போல் எழுந்தாள். தலை குனிந்து கண்ணீரைச் சொரிந்துகொண்டிருக்கும் தலைவியின் முன்பு சென்று மீண்டும் அவள் கரங்களைப்பற்றிக் கொண்டு, "அத்தே! இனி இப்படித்தான் கூப்பிடப் போகிறேன். இந்த நிமிஷம் முதல் நான் இவ் ஆச்சிரமத்தின் அடிமையல்ல. இனி நான் குப்பைத்தொட்டி அனதையும் அல்ல. வீணக இனி நீ என்னைத் தடை செய்யாதே.

பாரத நாட்டின் நிகரிலா கற்பரசிகளின் நிழலையாவது கண்ணில் ஒற்றிக்கொள்ளும் யோக்கியதையும் பாக்கியமும் பெற வேண்டுமென்கிற ஆவலுடன் நான் துணிந்துவிட்டேன். எப்போது என்னைத் தீண்டி இந்தத் தாலியைக் கட்டும்படியான உரிமை ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டதோ அப்போதே நான் அவனது பொருளாகிவிட்டேன். அவன் வியாதிக்காரனுக இருக்கட்டும். கண் குருடனுக இருக்கட்டும். இனி நான் அவனுடைய பொருள். அவனுக்குப் பணி செய்து என் மறு பிறவிக்காவது நன்மையைத் தேடிக் கொள்கிறேன். நான் ஒருத்தி உலக்கைபோலிருக்கையில், அவன் ஏன் ஆஸ்பத்திரியில் அனதைப் பிணமாகக் கிடக்கவேண்டும். இனி நான் அதற்குச் சம்மதிக்கமாட்டேன்....

இதற்குள் தலைவி இடைமறுத்து, "ஐயையோ! சுமதி! இதென்ன பிடிவாதம்? இதென்ன பயங்கரம்? நீ வெளி உலகத்தின் தன்மையையே அறியாது பேசுகிருயே! பெரியவியாதிக்காரனையாவது, நீ வைத்து சம்ரக்ஷிப்பதாவது? உன் வயிற்றுக்கே கஞ்சிக்குத் திக்கில்லாத நீயா இந்த விபரீத காரியத்தில் இறங்குவது? நீயும் என்ன கலியுக நளாயினியாக ஆகிவிட நினைத்துவிட்டாயா! அந்தக் கெட்ட வியாதிக்காரனை, நீ அண்டினல் உனக்குமன்றோ அந்த வியாதி வந்துவிடும்? அவனை வைத்துக்கொள்ள முதலாவது உனக்கு எங்கும் இடமே கிடைக்காதே!

சுமதீ! இளங்கன்று பயமறியாது என்ற பழமொழிப்படிக்கு நீ துள்ளுகிறாய். அந்தப் பயங்கரத்தை நீ இப்போது அறியமாட்டாய். வீண் கனவு காணாதே! உன் தலையெழுத்து இதுதான் என்று எப்போதும்போல் இருப்பதுதான் நலம்." என்று சற்று அழுத்தமான குரலில் கூறினாள்.

சுமதி :—(பின்னும் ஆத்திரம் ததும்பும் குரலில் கண்கள் சிவக்கப் பேசத்தொடங்கி) "அத்தே! உம்....இனி உன் வேதாந்தம் எனக்கு வேண்டாம். என் மனத்தில் நினைத்தபடி என் கடமையைச் செய்தே தீருவேன். பகவானால் படைக்கப்பட்ட இப் பரந்த பிரபஞ்சத்தில் ஒரு சாண் இடம் எனக்குக் கொடுக்காமல் போக மாட்டார். இப்போதிருக்கும் மனோ வியாதியைவிடப் பெரிய வியாதி மட்டும் என்னை என்ன செய்துவிடும்? அதன் ஆட்சியிலும் உழல என் விதி இருந்தால், அதுவும் நடக்கட்டும். மரம் வைத்த மகாதேவன் தண்ணீர் வார்க்காது போகமாட்டான் என்ற நம்பிக்கையை நான் இழக்கவில்லை.

அத்தே! என்னுடைய உழைப்பும், எனது சங்கீதமும், என்னைக் காக்கட்டும். அந்தப் பெரியவியாதிக்காரனையே வைத்துக்கொண்டு பிச்சை எடுத்து அவனையுங் காப்பாற்றி நானும் என் பாவத்தைத் தொலைக்கின்றேன். நாலு வீட்டில் பாடி பிச்சை எடுக்கிறேன். ஆகையால், இனி எனக்கு எவ்விதமான பயமும் இல்லை. தலைக்கு மிஞ்சியப் பிரவாகம் வந்த பிறகு அது ஒரு ஜாணு, ஒரு முழமா என்று பார்க்கவேண்டுமா! அது அனாவசியம்.

அத்தே! 'தனத்தினாலோ, மனத்தினாலோ, தேகத்தினாலோ, எனது கானத்தினாலோ நான் திருப்தியடைவதைவிட அதனால் பிறருக்கு ஓர் சிறிதளவாவது நன்மையும் உதவியும் பயக்கும்படியாகக் கடவுள் கிருபைசெய்தால், அதுவே என்பிறவியின் சார்த்தகம். இதற்காக நான் எத்தகைய த்யாகத்தையும் செய்யத் தயாராக விருக்கிறேன்' என்ற முறையீட்டை நான் பலகாலும் அம்பிகையின் சந்நிதானத்தில் கதறியதுண்டு.

தனத்தால் உதவ அருகதையற்றக் கட்டையாகி விடினும் மற்றவைகளால் நான் உழைக்கக் காத்திருக்கிறேன். என்னையே நான் தியாகம் செய்யத் துணிந்துவிட்டேன். எனக்காக தயவு செய்து நீங்கள் அந்த ஆஸ்பத்திரிக்கு வாருங்கள். இனி நான் பொறுக்கவே மாட்டேன். சாகவும்மாட்டேன்" என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறிக் கையைப் பிடித்து இழுத்தாள்.

அத்தையின் தயக்கத்தை முகத்தாலறிந்த சுமதி, "சரி! இந்த உபகாரங்கூட நீ செய்யமுடியாதென்றால், என் வாயிலிருக்கிறது

வழி. கடவுளின் துணை எனக்கிருக்கிறது. நான் போகிறேன். நான் போகிறேன்" என்று பிடிவாதமாகக் கூறிக்கொண்டே தடதட வென்று புறப்பட்டுப் போய்விட்டாள். தர்ம சங்கடத்தில் அகப் பட்டுக்கொண்ட தலைவி என்ன செய்வாள் பாவம். தன்னுயிர் திடீ ரென்று நீங்கிவிடாதா! என்று மனப்பூர்வமாக எண்ணித் துடித் தாள். "சுமதீ! சுமதீ!" என்று மீண்டும் ஓடிவந்தாள். இதற்குள் சுமதியின் உருவம் மான்வேகமாய் மறைந்துவிட்டது.

# 34

## எது பெரிது? காதலா, கடமையா?

ஆவலே வடிவாய்ச் சென்ற ஆத்மநாதன், என்னதான் மனோ வேதனையில் வெளியில் கிளம்பிவிட்டான் எனினும் அவ னுக்குள்ள புகழுக்கும் கவுரவத்திற்கும் குறைவாக எவ்விதம் தான் பொய்ச்சாக்கைச் சொல்லிக்கொண்டு போவது என்கிற எண்ணம் காரில் போகப் போகத் தானாகவே உதித்துவிட்டது. ஒரு நாளு மில்லாமல் திருநாளைப்போல் திடீரென்று சென்றால் யார் என்ன நினைப்பார்களோ; தன்மீது என்ன விதமான வித்தியாச எண் ணம் உண்டாகிவிடுமோ! ஏற்கெனவே விரோதிகளின் பாணம் ஒருபுறம் தாக்குவதை, இச் செய்கை பின்னும் அதிகப்படுத்திவிட் டால் என்ன செய்வது?

என்று இதுபோன்ற பல யோசனைகளில் மனம் குழம்பிப் போய் விட்டதால் காரின் வேகமும் குறைந்துவிட்டது. எப்படியும் ஆச்சிரமத்துப் பக்கமாவது செல்ல வேண்டுமென்று மனம் தவித்த தால் மீண்டும் அப் பக்கம் சென்றான். அன்பு உள்ளே செல்ல இழுக்கிறது. கவுரவம் காலைப் பின்னுக்கு இழுக்கிறது. இந் நிலை மையில் தத்தளிக்கையில் சோமு அங்கு வேறொரு காரில் வந்தான்.

அவனைக் கண்டதும் ஆத்மநாதனுக்குச் சற்று ஒருமாதிரியாகி விட்டது. தன் காரை நிறுத்திவிட்டு, "என்ன சோமு! இது யாருடைய கார்? எங்கே கிளம்பினாய்?" என்றான்.

சோமு :—(இறங்கி வந்து மெல்லிய குரலில்) டாக்டர்! உங் களுக்கு உடம்பு சரியில்லை என்கிற விஷயத்தை எப்படியோ அறிந்து ஒவ்வொரு பத்திரிகையிலும் போட்டுவிட்டதால், ஆஸ்பத்திரியில்

உங்களைப்பார்க்க வரும் ஜனங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. டெலிபோன் மணி அடித்தது ஓயவே இல்லை. பதில் சொல்லவே என்னால் முடியவில்லை. இந் நிலைமையில் நீங்கள் இப்படி வெளியில் செல்வது அழகல்ல. உங்களைப் பார்க்க வந்த ஒருவரின் காரையே எடுத்துக் கொண்டு நான் வந்தேன். நீங்கள் உடனே வாருங்கள்" என்று கட்டாயப்படுத்திப் பதில் பேசவிடாதபடி தடுத்து, அவனை வருமாறு வற்புறுத்தினான்.

ஆத்மநாதன் பாடு தர்ம சங்கடமாகிவிட்டது. தன் உள் ரகசியத்தையும் சொல்லமுடியவில்லை. போவதற்கும் மனமில்லை. சந்தர்ப்பமோ மிகவும் நெருக்கடியாய் இருப்பதால், உடனே அவனுடன் மறு பேச்சின்றிப் புறப்பட்டு மீண்டும் ஆஸ்பத்திரிக்கே வந்து படுக்கையில் படுத்தான். "என்னை யாரும் வந்து பார்க்க விடவேண்டாம். நீயே பதில் சொல்லி அனுப்பிவிடு" என்று உத்தரவிட்டான்.

சோமுவுக்கு ஆத்மநாதனிடம் அத்யந்தப் பிரீதியும், பக்தியும் இருப்பதோடு அவனுடைய மனங்கோணாமலும் விருப்பம் அறிந்து தந்திரமாய் நடக்கவும் பேசவும் பழகி இருந்தான்.

ஆத்மநாதனின் இதய பரிசுத்தத்தைச் சோமு முற்றிலும் அறிவான். அதேபோல் அவனது அந்தரங்க ரகஸ்யமாகிய சுமதியின் மீது கொண்ட காதலையும் எப்படியோ திருடனுக்குள் திருடனாயிருந்து தெரிந்துகொண்டுவிட்டான். ஆதலால்தான் அவன் மன நோக்கத்தை யறிந்து, யாருடைய காரையோ அவசரமாக எடுத்துக்கொண்டு ஆத்மநாதனுக்கு எவ்விதமான ஆபத்தும் நேராமலிருக்கும் பொருட்டுப் பின்தொடர்ந்து சென்று, தந்திரமாய் அழைத்து வந்துவிட்டான்.

சுமதியின்மீது கொண்ட பிரேமையே அவனை அங்குக் கடத்திக்கொண்டு சென்றது என்றதை நொடியில் தெரிந்துகொண்டிருப்பதனால்தான், ஆச்சிரமத்திற்குள் திடீரென்று போய்விடப் போகிறாரே; அதனால் என்ன நேருமோ, அவருடைய பெயருக்கு ஹானி வருமோ என்ற பயத்துடன் உள்ளே செல்லவிடாது அழைத்துவந்து படுக்கவைத்து விட்டானே யன்றி, திரும்பவும் எழுந்துபோய்விட்டால் என்ன செய்வது என்கிற பயம் ஒருபுறம் வதைத்து இருவரும் இருவிதமான வேதனையில் நித்திரையின்றித் தவித்தார்கள்.

விடியற்காலை, டெலிபோன் மணி அடித்தது....அணைகடந்த பிரவாகத்துடன் செல்லும் அன்பு வெள்ளத்தால் தாக்கப்பட்ட மீனலோசனியம்மாள் பேசுவதை அறிந்ததும் ஆத்மநாதன் இதயத்திலும் ஒரு புதிய சக்தி தாக்கியது. "அம்மா........பயப்படாதேம்மா! எனக்கொன்றும் உடம்பில்லை. சரியாகிவிட்டது.

என்ன!....வீட்டில் வந்து நான் படுத்துக்கொள்ளவேண்டுமா! எம்மா! பயப்படுகிறாய். ஒன்றுமில்லை. நீ இரவு தூங்கவே இல்லையா; ஐயையோ! உனக்கு உடம்புக்கு ஆகாதம்மா! சரி! உன் இஷ்டப்படியே இதோ வருகிறேன்.'' என்று கூறிவிட்டு படுக்கையில் அமர்ந்தான்.

டாக்டரின் மனம் சற்று மாறுதலையடைந்திருக்கிறது என்பதையறிந்த சோமு, டாக்டர் இச்சமயம் இங்கில்லாது வீட்டுக்குப் போவதே அவருடைய நிலைமைக்கு நல்லது என்று எண்ணி, "டாக்டர்! தாயின் அன்பைப் பார்த்தீர்களா; உங்களுக்குள்ள தேக நிலைமையில் ஏன் இங்கு தனியே படுத்துக்கொண்டு கஷ்டப்பட வேண்டும். அந்தம்மாளும் அங்கு கவலையால் வாடுகிறார்கள். நீங்கள் வீட்டிற்குப்போய் அம்மாவின் மனத்திற்குச் சந்தோஷத்தை உண்டாக்குங்கள்'' என்று தந்திரமாய் கூறியபடியே டாக்டருக்கு தர்மாமீட்டரை வைத்துப் பார்த்தான்.

ஜுரம் 102 டிக்கிரி இருப்பதை டாக்டரிடமே காட்டினான். டாக்டருக்கே இதைக் கண்டதும் தூக்கி வாரிப்போட்டது. "என்ன! 102 டிக்கிரியா?'' என்று வியந்தபடியே சில மருந்துகளின் பெயரைச் சொல்லி, அதைக் கொடுக்கச் செய்து உடனே சாப்பிட்டான்.

"சோமு! காரை எடு. நான் என் தாயாரிடமே செல்கிறேன். நீயும் மற்றவர்களும் எல்லாவற்றையும் சரியாகக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுத் தன்னுடைய தாயாரிடம் போய்விட்டான்.

தாயார் அன்புடன் தடவிக்கொடுத்து, கரைகடந்த புத்திர வாத்ஸல்யத்துடன் பக்கத்திலேயே இருந்து மகனைக் கவனித்து வரும் அன்பே அவுஷதமாகி ஆத்மநாதனின் பிணியை அகற்றியது.

"இத்தகைய தாயின் அன்பை எப்போதும் அனுபவிக்கமுடியாது சதா வேலை வேலை என்று சாகிறோமே; அன்னையின் அன்பிற்கு இவ் வகிலங் கூட ஈடாக மாட்டாதே'' என்று தனக்குள் எண்ணி ஒருபக்கம் பூரிக்கிறான்.

மற்றொரு பக்கமோ இவனை யறியாது, சுமதியின் எண்ணமாகிய அலைகள், அந்தரங்கக் கடலில் கொந்தளிக்கின்றன. இந்நிலைமையில் இருவிதமான உணர்ச்சிகள் அவன் மனத்தில் போராடும்போது இவ்விரண்டு இன்பத்தில் எது பெரிது. எது முக்கியம் தாயின் அன்பா, அல்லது சுமதியின் காதலா!

ஊர், பெயர் தெரியாத அனாதையை மணக்க ஒருபோதும் யாரும் சம்மதிக்க மாட்டார்கள். அவளை யடையும் பொருட்டு,

இத்தகைய விலைமதிப்பற்ற தாயாரின் ப்ரேமையைத் திரஸ்கரிப்பதா அன்றி, தன் சுயநலத்தை த்யாகம் செய்வதா என்கிற இரு உணர்ச்சிகளும் அவன் இதயத்தில் பெரிய மல்யுத்தம் செய்யத் தொடங்கின. அதுவே ஒரு இன்ப உணர்ச்சியாக எண்ணி, அந்தக் கற்பனை உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.

## 35

### அந்தகார குகையில் வெந்துருகும் உயிர்கள்

ஒருபுறம் பிரவாகம். ஒருபுறம் அகோரமாய்ப் பற்றி எரியும் நெருப்பு. ஒருபுறம் அதபாதாளம். ஒருபுறம் கொடிய மிருகங்கள் நிறைந்த பயங்கரமான கானகம். இந்த நான்கிற்கும் மத்தியில் ஒரு உயிர் அகப்பட்டுக் கொள்ளுமாயின், எவ்விதந்தான் தவிக்கும். எவ்வாறுதான் துடிக்கும். அது மீளுவதுதான் எங்ஙனம்?

இந்நிலைமைக்கு ஒப்பாகவே சுமதி, தன் வாழ்க்கையை நினைத்து முடிவு செய்தாள். தன் பாழும் பிறவியைச் சுற்றி இத்தனை பயங்கரங்கள் இருப்பதை இப்போதே அறிந்தாள். நெருப்பில் விழுந்தாலோ, உடனே பஸ்மம். பாதாளத்தில் விழுந்தாலோ, எலும்பு தூள்கூட கிடைக்காது. கொடிய வனத்தில் புகுந்தாலோ, பல மிருகங்களுக்கும் இரையாகிச் சாக நேரும். ஆழமான தண்ணீரில் விழுந்தால், ஒரு வேளை இல்லாவிட்டால், ஒரு வேளை எங்காவது ஒரு துரும்பாவது அகப்பட்டு அதைப் பிடித்துக்கொண்டு நீந்திப் பிழைக்கலாம், என்று தீர்மானிப்பதுபோல் சுமதியும் தீர்மானித்தாள்.

தன்னுடைய தற்கொலை பாதாளத்திற்குச் சமமாகத் தோன்றியது. தன் கடமையைக் கவனிக்காது நெறி தவறி நடப்பதானது, விபரீத நெருப்புக்கு ஒப்பாகத் தோன்றியது. தன் கடமை யொன்றிருக்கிறது என்பதை யறிந்தும் தான் அதைச் செய்யாதிருப்பதானது கொடிய வனத்தில் புகுந்ததற்கு ஒப்பாகத் தோன்றியது.

ஆகையால், எவ்விதம் தன் வாழ்க்கை முடிந்தாலும் முடியட்டும், தான் நினைத்தபடியே செய்து, அதன்மூலம் தன் மறுபிறவிக்கேனும் ஒரு ஆதாரம் கிடைக்குமா என்று தேடுவதுதான் முக்கியம். தண்ணீரில் இறங்குவதுபோல் இந்த வழியில் இறங்குவது என்று தனக்குள் தான் பலவிதமாக எண்ணிக்கொண்டே வீதி என்பதையும் பார்க்காது ஓடினாள்.

தான் எங்கே போகிறோம். எங்கே போகவேண்டும். என் பதைக்கூட மறந்து ஓடுவதை யொன்றுமட்டும் அறிந்து, கால் போன இடமெல்லாம் சென்றாள். வழியில் செல்லும் சிலரைக் கண்டு, "ஐயா! லெப்பர் ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறது?....அம்மா! லெப்பர் ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறது?" என்று கேட்டாள்.

இவளுடைய வேஷத்தையும் தலைவிரி கோலத்தையும் பார்த்து சிலர் பைத்தியமென்று தீர்மானித்துவிட்டார்கள். "ஏ! பொண்ணே! ஒனக்கு ஒரு வியாதியும் இல்லாமெ நல்லா இருக்கியே! ஒனக் கெதுக்கு லெப்பர் ஆஸ்பத்திரி; உனக்கு வேண்டியது பைத்தியக்கார ஆஸ்பத்திரி யல்லவா?...." என்று சிலர் கூறி, கடகட வென்று சிரித்தார்கள்.

இதுவும் தன் தலைவிதி என்று மனத் துயரத்துடன் மீண்டும் நடந்தாள். இவளது துரதிருஷ்டமே ஓர் பெரிய கதவாய் மறைப் பதுபோல் ரயில்வே கேட்டு போட்டுவிட்டார்கள். கதவைச் சாத்தும்போதுதான் ஒரு கார் அந்தப் பக்கம் கடந்து சென்றதை, தற்செயலாகக் கவனித்த சுமதி, "ஹா!....அதோ! டாக்டர் கார் போகிறது. என் ஆத்மநாதனின் கார் போகிறது....டாக்டர்! டாக்டர்!" என்று கூவிக்கொண்டே சாத்தி யிருக்கும் ரயில்வே கேட்டைக் கடந்து ஓட, கேட்டின் இடுக்கால் நுழைந்து தண்டவாளத்தின் பாதையில் குதித்து விட்டாள்.

ரயிலோ அட்டகாஸமாய்க் கூவிக்கொண்டு காதை செவிடாக்கும் இரைச்சலுடன் வேகமாக வருகிறது. கேட்டிலிருப்பவர்கள், 'ஐயோ! ஐயோ!' என்று பெரிதாகக் கத்துகிறார்கள். கேட்டு சேவகனின் கதி கலங்கிவிட்டது.

தான் பச்சைக் கொடி காட்டவேண்டியதையும் மறந்து அதை ஒருகையில் பிடித்தபடியே ஒரே தாவாகத் தாவி, சுமதியை அப்புறம் இழுத்துத் தள்ளினான். இதற்குள், ரயிலும் தன் விசை குன்றாது போய்விட்டது.

'இப்படியும் கண்மூடித்தனமாகப் போவார்களா?' என்று சிலர் சுமதியைத் திட்டினார்கள். சிலர், "ஐயோ பாவம்! புத்தி கலங்கி விட்டது" என்றார்கள். சிலர் 'தற்கொலைக்குத்தான் இம்மாதிரி வந்தாள்' என்றார்கள். சிலர் 'பையித்தியக்காரி' என்று தீர்ப்பு கூறினார்கள்.

கடைசியில் பையித்தியக்காரி என்கிற பட்டமே அவளை இம்முறை, காப்பாற்றியதுபோல் விட்டுவிட்டது. தான் இம்மாதிரி தெருவில் திரிந்தால், இனி பலவிதமான ஆபத்துக்கள் தன்னைச்

1.83032

சாரும் என்ற பயம் ஒருபுறம் பாதித்ததால், க்ஷண நேரம் யோசித்தாள்.

தான் எப்படியும் ஆத்மநாதனின் உதவியைக் கோரி, அவன் மூலமாகவே தன் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளவேண்டு மென்ற முடிவுக்கு வந்து நேரே ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தாள்.

* * * * *

உடம்பு வேதனையும் மனோ வேதனையும் ஒன்றாகூடி வதைத்த தால், ஆத்மநாதன் அவனை மீறிய உணர்ச்சியுடன் தாயின் அன்பில் கட்டுண்டு, மூன்று தினங்கள் அவ்விடமே இருந்து விட்டான்.

“அம்மா! இன்று உடம்பு ஒன்றுமே இல்லை. இனி நீ கவலைப் படாதே! என் கடமைகளை நான் செய்யப் போய்வருகிறேன்.” என்று தாயாருக்குத் தைரியம் கூறிவிட்டுக் கிளம்பி, தன்னுடைய பேஷண்டுகளை ஒருவர் விடாது பார்த்துவிட்டுத் தன் ஆஸ்பத்திரி நோயாளிகளை எல்லாம் ஒரு முறை பார்த்தான்.

தம்தம் இஷ்டப்படிக்கு, சில நோயாளிகள் உல்லாஸமாய்க் கிராமபோன் பிளேட்டுகளைப் பாடச் செய்து கேட்போரும், வாய்ப் பாட்டுக் கேட்போரும், வாத்தியங்கள் கேட்போருமாய் ஆனந்த மாய் இருப்பதைப் பார்த்து, பரம சந்தோஷத்துடன் தன் அறைக்கு வந்து உட்கார்ந்தான்.

அவனை அறியாமல் சுமதியின் ஞாபகம் திடும் திடும் என்று உண்டாகி வருத்தியதால், தனக்கு வந்துள்ள கடிதக் குவியல்களைப் படிக்கவும் தோன்றாது அப்படியே அசைவற்று உட்கார்ந்திருந் தான். பழைய நினைவுகள் அவன் அகக் கண்முன்பு நாடகமாடுவது போல் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தன.

அச் சமயம், “டாக்டர்! டாக்டர்! இந்த அபாக்கியவதியைக் காப்பாற்றுங்கள். இந்தப் பாவியைக் காப்பாற்றுங்கள்” என்று சுமதி, தலைவிரிகோலமாய்க் கதறிக்கொண்டு ஓடிவந்து தடாரென்று ஆத்மநாதனின் காலில் விழுந்தாள்.

கற்பனை உலகத்தில் தன் நிறையழிந்து இன்பமும் துன்பமும் ஒருங்கே கூடிய உணர்ச்சியுடன் சஞ்சரிக்கும் ஆத்மநாதனுக்கு, தான் சற்றும் எதிர்பாராத விதமாய், சுமதி வந்து விழுந்து புலம்பு வதைக் கண்டதும், இவ்வுலகமே தலைகீழாய்ச் சுற்றுவதுபோலாகி விட்டது.

சடக்கென்று எழுந்து, “ஹா! சுமதீ! சுமதீ! உண்மையில் நீயா புலம்புகிறாய்? உண்மையில் என்னுருயிர் சுமதியா! இது கன

வல்லவா! நினைவா!" என்று கூறிக்கொண்டே, தான் நெடுநாளாய் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த ஆவல் முற்றும் கலந்த அன்பின் ஆவேசத்துடன் அவளைத் தூக்கி நிறுத்தி, தன் சவுக்கத்தால் அவள் முகத்தைத் துடைத்தான்.

இவை எல்லாம் இமைக்கொட்டும் நேரத்தில் முடிந்துவிட்டன. சுமதியின் நிலைமையில் அடக்கமுடியாது பொங்கி வரும் துக்க வெள்ளத்தைத் தவிர பேசவும் முடியாது க்ஷணநேரம் தம்பித்துப் போய்விட்டவள் ஆத்மநாதன், "என்னுருயிர் சுமதியா!" என்று கூறியமொழிகள் காதில் பட்டதும், அவளுடைய துன்பத் தீயை, பின்னும் எண்ணெய்விட்டு எரிவிப்பதுபோல் உண்டாகிய உணர்ச்சியுடன் தவிக்கையில் அவன் தூக்கியும் நிறுத்திவிட்ட சமயம் அவள் இதயத்தைப் பீறிக்கொண்டு ஆவி பறந்துவிடும் போன்ற சங்கடம் உண்டாகிவிட்டது.

"டாக்டர்! நான் அபாக்கியவதி! உங்களுடைய அன்பு மொழிக்குகந்த புனிதவதி நானல்ல. இது வெறும் ஜடம். மாமிசப் பிண்டம். பெரியவியாதிக்காரனின் உரிமைப் பொருள். என்னைத் தீண்டாதீர்கள். நான் அந்நியனின் மனைவி, அயல்பொருள். நிராதரவாகி நின்ற மகா பாவிக்குப் பரமதயாள மூர்த்தியாகிய தாங்கள் உதவி செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கவே இங்கு வந்தேன்."

என்று சுமதி கதறிக்கொண்டே கண்ணீர் பெருகக் கூறும் வார்த்தைகளால் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை ஆத்மநாதனின் இரு செவிகளிலும், இதயத்திலும் ஏக காலத்தில் புகுத்துவதுபோன்ற வேதனையுண்டாகித் துள்ளினன். சுமதியைப் பிடித்திருக்கும் அவன் கரங்கள் அனலைப் பிடித்திருப்பதுபோன்றும், தன்னையே நாடிய தீ ஜ்வாலைப் பிடித்துக்கொண்டு எரிப்பதுபோன்றும் தோன்றியது.

"என்ன! பெரியவியாதிக்காரன் மனைவியா? பெரிய வியாதிக்காரன் மனைவியா! பெரிய வியாதியா! குஷ்டரோகியா! கர்ம வியாதியா! சுமதீ! சுமதீ! நீ சொல்வது உண்மையா? நீ அயலானின் உரிமைப் பொருளா? இது சொப்பன உலக சம்பவமா?" என்று பித்தன்போல் கேட்டான்.

சுமதி அடக்க முடியாது நெஞ்சைப் பீறிக்கொண்டு வரும் துக்க த்வனியுடன் பேசத் தொடங்கி, டாக்டர்! என்னுடைய பாழும் பிறவியே சொப்பன உலகமாக ஆகிவிட்டதேயன்றி, இப்போது நிகழ்வது சொப்பனமல்ல. என்னை விழுங்க வந்த கொடிய விதியின் ஆட்சியில் நடக்கும் உண்மைச் சம்பவமே யாகும். இதோ! இதோ! இந்த மாங்கல்யமே அதற்குச் சாக்ஷி. இதைப் பாருங்கள்.

இதைப் பார்த்த பிறகாவது மனம் தேறுங்கள் ” என்று கூறிக் கொண்டே தன் மாங்கல்யத்தைக் காட்டினுள்.

ஆத்மநாதனுக்கு உலகமே பாழடைந்து அந்தகாரக் குகையைப் போல் காணப்பட்டது. எரி மலேயே தன் தலையில் புரண்டதுபோல் தோன்றி வேகத்துடன் நின்ற விடத்திலேயே கல்லாய்ச் சமைந்து போய்விட்டான். சுமதியைப் பிடித்திருந்த கைகள் தாமாகவே நழுவின. கண்களில் பெரிய அருவியைப்போல், கண்ணீர் ஓட வாரம்பித்தது. சுமதியின் நிலைமையை விவரிக்கவேண்டுமா ?

## 36

### தெளிந்த சித்தம்—தேங்கிய அன்பு

கந்தனுடன் ஊருக்குச் சென்ற சிதம்பரநாதனுக்கு அங்கு போய் பார்த்த பிறகே நடந்திருக்கும் அக்ரமங்கள் நன்ருகத் தெரிய வந்தன. இனி, தவறி விட்டப் பண்டத்தைப் பற்றி நினைத்துப் பல னென்ன ? தன்னையும் ஏமாற்றி அழைத்துப் போகச் செய்து தன் வீட்டையும் கொள்ளை யடிக்க ஏற்பாடு செய்துவிட்ட வைத்தியின் தீய எண்ணத்தை எண்ணி மனம் புழுங்கினன்.

ஊரிலுள்ள பொது ஜனங்களை வைத்துக்கொண்டு வைத்தியின் வீட்டார் செய்த அக்கிரமத்தை வெளிப்படுத்தி, அவர்களை அவ மானப்படுத்தி, சொத்துக்களை மீண்டும் மீட்டுக்கொண்டதோடு, நம் பிக்கைத் துரோகஞ் செய்ததற்காக அவர்களைக் கட்டுப்பாடாக ஜாதி பிரஷ்டம் போட்டு விட்டார்கள்.

குடி கெடுக்கும் வைத்திக்கு, இந்தத் தகவல் கடித மூலமாக எட்டிய பிறகே அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தான். ஊர் ஜனங் களின் கட்டுப் பாட்டையும், தன் குடும்பத்திற்கு நேர்ந்துள்ள தீராத அவமானத்தின் விபரீத விளைவையுங் கண்ட பின்னர், தன் தலையில் தானே மண்ணைப்போட்டுக் கொண்டதை யறிந்து, விச னித்து அந்த அவமானம் தாங்காமல் குன்றிப்போய்விட்டதுடன் விமலாவுக்குப் பெரும் பகையாளியாகி பழிக்குப் பழி வாங்கவே எண்ணினுன்.

ஊரிலுள்ள சகல விவகாரங்களையும் நம்பிக்கையான ஒருவ ரிடமே ஒப்புவித்துவிட்டுத் தான் தன் மகனிடமே வந்து விட

வேண்டும் என்ற நோக்கத்துடன் சிதம்பரநாதன் வேலை செய்து வந்தார். அடிக்கடி தன் மகனின் தேக விஷயத்தைப் பற்றி மனைவிக்குக் கடிதமெழுதி விசாரித்துக்கொண்டார். தன் மகனுக்கு உடனே விவாகத்தைச் செய்து பார்க்க வேண்டு மென்கிற பேராவல் அவரை இரவும் பகலுமாக வாட்டியதால், மகனின் அந்தரங்கம் அறியாது, தானே அவனுக்குத் தக்க பெண்ணைத் தேடவும் ஆரம்பித்து, அவனது நிலைமையையும் பார்க்காமல் அவனுக்குக் கல்யாணத்தைப்பற்றி, மறுதினமே கடிதம் எழுதிவிட்டார்.

ஆத்மநாதன், தனக்கு வந்துள்ள கடிதத்தைப் பிரித்துப் பார்ப்பதற்குள்ளாக இத்தகைய பேரிடி அவன் இதயத்தில் இடித்து அவன் கட்டியிருந்த காதல் கோட்டை முற்றும் இடிந்து சிதைந்து பொடி சூரணமாகிவிட்டதால், அவன் தத்தளிக்கின்றான் என்பதை அவர் எங்ஙனம் அறியக்கூடும்?

ஆத்மநாதன், அப்போதுள்ள நிலைமையில் தன்னுடைய கௌரவம், தான் இருக்கும் இடம், தனது உணர்ச்சி எல்லாவற்றையும் மறந்துபோய், சில விநாடிகள் அப்படியே பதுமைபோல் இருந்தான்.

சுமதியும் சில விநாடிகள் உயிரற்ற சவம்போலவே காணப்பட்டாள். பிறகு சற்று சுய உணர்ச்சி உண்டாகப்பட்டவளாய், தனது தாமரைமலருக் கொப்பான பரந்த விழிகளால் ஆத்மநாதனை நோக்கினாள்.

அவனுடைய பேரெழில் நிறைந்த பிம்பம் பின்னும் பதினாயிரம் மடங்கு அதிகரித்த சோபையுடனும் உள்ளத்தை யள்ளித் தின்னும் கவர்ச்சியுடனும் கோடி சூர்யப்ரகாசமாய் விளங்கியதைக் கண்டதும் சுமதியின் மதி ஒரு விநாடி மழுங்கியே போய் விட்டதால், அவள் தன் பழைய தீர்மானங்களை ஒருங்கே மறந்துபோய் "ஹா! டாக்டர்" என்று கூவிக்கொண்டே அவனிருகரங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தன் இதயத்துடன் பிணைத்து ஆனந்தக் கண்ணீரை மடமடவென்று உதிர்த்தாள்.

அயோமயமான நிலைமையில் தடுமாறியிருக்கும் ஆத்மநாதனுக்குச் சுமதியின் செய்கை பழைய அன்புக்களஞ்சியத்தைக் கிளறி விட்டது போலாகிவிட்டதால் அவனும் தன் நிலைமறந்து கட்டுமீறிக் கொந்தளிக்கும் அன்பு வேகத்தால், "என் கண்மணி! சுமதீ!" என்று கூவிக்கொண்டே அவளைச் சேர்த்தணைத்து இறுகத் தழுவி முகத்தோடு முகம் பதித்து மெய்ம்மறந்து விட்டான்.

சுமதி, தன் பிறவியில் கண்டறியாத ஆனந்தப்பரவசத்தில் ஒரு க்ஷண நேரம் தோய்ந்திருந்த மறுக்ஷணமே "ஐயோ! டாக்டர்!

நான் விபரீத பாபத்தைச் செய்துவிட்டேனே! ஹா! கடவுளே! என்னை மன்னிப்பாயா? ஐயோ! அரைக்ஷணம் முன்பு இருந்த ஞானவைராக்கியம் அரைக்ஷணத்தில் மாறி, என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டதே! ஏ, பரந்தாமா!....டாக்டர்! நான் வந்த காரியத்தை மறந்து என் ஜென்மத்திற்கு அழியாத பாபத்தைத் தேடிக்கொள்ளத் துணிந்தேனே! ஐயோ! என்ன செய்வேன்? டாக்டர்! டாக்டர்! என்னை மன்னித்து விடுங்கள்."

என்று சுமதி கூறிக் கண்ணீர் வழியக் கதறுவதைக் கண்ட பிறகுதான் ஆத்மநாதனுக்கும் மதியைக் கலைத்திருந்த காதல்மேகம் சற்று விலகியது. அவனுக்கு மனத்தில் சகிக்கவியலாத சங்கடமே உண்டாகிவிட்டது. சுமதி அணைப்பிலிருந்து விலகியதை யறிந்து உடல் நடுங்கியது. இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

ஆத்மநாதன், தன் கைக்குட்டையை முகத்தில் பதித்து, தொண்டையை அடைக்கும் தாங்கவியலாத் துக்கத்துடன் பேசத் தொடங்கி, "சுமதி! சுமதி! நீ என்னை மன்னித்துவிடு. இனி இம் மாதிரி ஒரு சோதனைக் காலச் சம்பவம் என் ஜீவியத்தில் நடக்காதென்று உறுதியாய்க் கூறுகிறேன். மதி மயங்கியது. அறிவுச்சுடர் அணைந்து அரைக்கணம் அந்தகாரம் குடிகொண்டது. வெறியின் வேகம் நெறியைக் கடந்துவிட்டது.

சுமதி! இது உன் குற்றமும் அல்ல. என் குற்றமும் அல்ல. இது ஒரு சோதனையின் கூற்று. விதியின் விளையாட்டு. பிறவித் துன்பத்தின் நிழல். கடவுளின் கொடிய பரீக்ஷை. சுமதி! இந்த விநாடி முதல் நான் ஒரு அன்னியன். நீ ஒரு அன்னிய ஸ்திரீ. இதுதான் நிலைத்த தர்மமென்பதை இப்போது உணர்ந்தேன். வருந்தாதே! நம்முடைய பிறவியின் நாடகத்தில் இதுவரையில் ஒரு அங்கம் முடிந்தது. இனி, இக்காட்சிக்கு இடம் இல்லை. சுமதி! இதற்காகத்தான் இதுவரையில் நீ என் கண்ணில் படாதிருந்தாயா!" என்று மெல்லிய குரலில் கேட்டான்.

தத்தளித்துத் தடுமாறும் நிலைமையிலுள்ள சுமதிக்குத் தேம்பித் தேம்பி அழுவதைத் தவிர வேறு ஒன்றுமே தோன்றவில்லை. "டாக்டர்! நான் திக்கில்லாத பரதேசி, அனாதை, எனக்குச் சாஸ்வதமான துணைவன் கடவுள்தான். அவராலனுப்பப்பட்ட மனிதத் திக்கு நீங்கள்தான். உங்களையின்றி எனக்கு இப் புவியில் ஐயோ பாவம் என்று கூறுவதற்குக்கூட மனிதர்களில்லை. என்னை வெறுக்காதீர்கள்; என்னைப் புறக்கணிக்காதீர்கள். எனது கோரிக்கையை ஈடேற்றுங்கள். என் பாபப் பிறவியின் கொடிய மர்மம் அறிந்து

என்னை நிராகரித்து விடாதீர்கள்" என்று மெஷின்போல் கூறிக் கொண்டே போனாள்.

அதைக் கண்டு சகிக்கமுடியாத ஆத்மநாதன் இதயத்திலிருந்து பொங்கி எழும் உணர்ச்சிகளுடன் சுமதியைத் தீண்டாமல் நோக்கியபடியே "சுமதீ! இந்தக் கட்டையில் என்னுயிர் ஊசலாடும் வரையில் நான் பிறருக்கு உழைத்து அந்த ஆனந்தத்தையாவது அனுபவித்துச் சாவதற்கு உறுதிகொண்டு விட்டேன். என் ஜீவியத்தில் என்னால் என்னென்ன விதத்தில் தர்ம விரோதமின்றி, உனக்கு உழைக்க வேண்டுமோ அதைச் செய்யக் காத்திருக்கிறேன். சுமதீ! என்னுயிரை வேண்டுமாயினும் தாராளமாய், பரிபூர்ண த்ருப்தியுடன் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். என்னை நம்பு.

ஒருகால் என்னையே நான் வெறுத்தாலும் வெறுப்பேன். இவ்வுலகத்தை வெறுத்தாலும் வெறுப்பேன். என் ஜீவாதாரமாகிய உன்னை ஒருபோதும் வெறுக்கவோ, மறக்கவோ மாட்டேன். இது சத்தியம்.

சுமதீ! உனது குறைகள்தான் என்ன! உன் பிறவியின் மர்மந்தான் என்ன? தயங்காது சொல்லு. உன் புலம்பலின் பரிதாபத்தை என்னால் சகிக்க முடியவில்லை. பெரிய வியாதிக்காரன் என்றாயே! அதென்ன? விவரத்தை விளக்கு" என்று கண்ணீர் வழியக் கேட்டான்.

சுமதி பதிலே பேசாமல் தலைவி இவளிடம் கொடுத்த கடிதத்தை அவனிடம் கொடுத்து, "இதோ! இதைப் பார்த்தால் தெரியும்" என்று கூறிவிட்டுச் சோபாவில் குப்புறக் கவிழ்ந்தாள்.

கடிதத்தைப் படித்த ஆத்மநாதனுக்கு மனத்தில் செய்யும் சகிக்க வியலாத சங்கடத்தையும் சித்திரவதையையும் கூறத்திறமின்றி இதயம் வெடித்துவிடும்போல் பெருமூச்சு வழியாய்த் தாத்துகிறது. "ஹா! குஷ்டரோகி! குஷ்டரோகி!....மாசிலாத மதிமுகத்து மங்கைக்கா ஓர் குஷ்டரோகி மணாளன்! ஐயோ!

மிருதுவே வடிவமான ரோஜா புஷ்பத்திற்கு ஒப்பான சுமதிக்கா நெருப்பினுங் கொடிய வியாதிக்காரன் கணவன்!" என்று தனக்குள் சில வினாடிகள் எண்ணாததும் எண்ணித் துடித்தான். குப்பைத்தொட்டி அனாதையல்லாத இப் பதுமைக்கு, இந்தப் புவன மோகனாங்கிக்கு இக்கதியா விதித்தாய். பிரம்மதேவா! உன் கைத்திறத்தின் எழில்கூட உனக்குத் தெரியாத இப்படியா தலையில் எழுதுவாய்? உன் மதிப்பையே நீ குலைத்துக்கொண்டாயே!

உம். மடமை! மடமை!!....இத்தனை தெரிந்தும் மூடமாக எண்ணுகிறேனே!" என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டு திரும்பினான்.

சுமதி, குப்புறப்படுத்துத் தேகங் குலுங்க அழுவதை எப்படித் தான் கண்டு பொறுப்பது, அவளைத் தீண்டவும் இனி அருகதை யற்றுவிட்டது. தீண்டாதிருக்கவும் மனம் இடந்தராது பதறித் துடிக்கிறது. தரும சங்கடமான நிலைமையில் என்ன தான் செய்வது?

களங்கமற்ற மனத்துடன் எல்லோருக்கும் உபகாரம் செய்யும் முறையில் யாரையும் தீண்டுதற்குச் சகல உரிமைகளையும் பகவான் தனக்குத் தன் தொழிலின் மூலம் அளித்திருப்பது நினைவிற்கு வந்தது. எனினும் அவளைத் தீண்டக் கைகள் கூசின.

"சுமதீ! சுமதீ!! எழுந்திரு. என் இதயத்தைச் சிதறவடிக்காதே! என் ஆவியைப் பதறச் செய்யாதே. உன் பரிதாபகரமான வாழ்க்கையின் மர்ம மறிந்தேன். என்னால் உனக்கு என்னம்மா உதவிவேண்டும் சொல்லு. சுமதீ! சுமதீ! இக்கட்டை அதற்கும் உபயோகமில்லை என்றால், இது உயிருடன் இருந்தும் ஒன்று. இறந்தும் ஒன்றுதான். அம்மா! சுமதீ! எழுந்திரு. கதறாதே. என்னால் தாங்கமுடியவில்லை." என்று துக்கமும், இரக்கமும், பரிதாபமும் தோய்ந்த குரலில் கூறினான்.

கண்ணீர் குளம்போல் தேங்கும் கண்களிலிருந்து மடை திறந்துவிட்டதுபோல் கன்னத்தின் வழியாக வழிந்தோட மெல்ல நிமிர்ந்து ஆத்மநாதனை நோக்கினாள். அவ்வணங்கின் அந்த பார்வையில் ஜ்வலித்த பலவிதமான உணர்ச்சிகளும் ஆத்மநாதனின் இதய ஏட்டில் பதிந்துவிட்டன.

"சுமதீ! இனி உனக்கு ஏக்கம் வேண்டாம். அதைப் போக்கு. கடவுள்மட்டும் என்னைக் கொண்டுபோகாது வைத்திருப்பாரானால் உனக்கு என்னால் செய்யக்கூடிய எந்தவிதமான உதவியையும் செய்யத் தயாராகவிருக்கிறேன். எழுந்து உன் மனத்தில் உள்ளதைத் தெரிவி. எழுந்திரும்மா!" என்று அன்பு ததும்பும் குரலில் ப்ரேமை நிறைந்த பார்வையுடன் கூறினான்.

அலங்கோலமான கேசத்தைக் கோதியவாறு முகத்தைத் துடைத்துக்கொண்டு சுமதி மெல்ல எழுந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். "டாக்டர்! சத்தியமாக என்னை வெறுக்கவில்லையே? என்மீது கோபிக்கவில்லையே?"........

ஆத்ம :—சுமதீ! கடவுளின்மீது ஆணையாக இல்லை. என்மீது உனக்கு நம்பகமில்லையா? நான் நம்பிக்கை த்ரோகியல்ல. விஷயத்தைச் சொல்லு.

சுமதி :—டாக்டர்! நான் கூறப்போகும் வார்த்தை தங்களுக்கு வியப்பாக விருக்கலாம். ஆனால், இனி என் கடமை அது. லெப்பர்

ஆஸ்பத்திரிக்கு என்னை நீர் அழைத்துக்கொண்டுபோக வேண்டும். கிளம்புங்கள்.

அந்த வார்த்தையைக் கேட்டதும், ஆத்மநாதனின் தேகம் அதிர்ச்சியினால் ஒரு துள்ளு துள்ளியது. முகம் மாறுதலடைந்து, "என்ன! சுமதி! சுமதி! லெப்பர் ஆஸ்பத்திரிக்கா! ஐயோ! ஏன்? எதற்கு? அந்தக் கண்ருவியை நீ கண்ணால் வேறு பார்க்கவேண்டுமா! சுமதி!" என்றான்.

சுமதி:—டாக்டர்! நெருப்பில் நிற்பவளுக்கு நெருப்பைக் கையால் தொட்டால்தான் பற்றிக் கொள்ளுமோ! ஏற்கெனவே பற்றி எரியும் தீ கண்ணிற்குப் படவில்லையா!

ஆத்ம:—சுமதி! அது சாமான்ய வியாதியல்லவே! நீ போய் பார்த்து என்ன செய்யப் போகிறாய்? நன்றாக யோசித்துப் பாரு, சுமதி!

சுமதி:—எல்லா யோசனைகளும் தீர்ந்துவிட்டன. நான் என்ன செய்யப் போகிறேனா?....டாக்டர்! பாரதநாட்டின் கற்புக் கரசிகளில் தலை சிறந்து விளங்கி அழியாச் சுடராய் ப்ரகாசிக்கும் நளாயினி என்ன செய்தாள்? அதைத்தான் நானும் செய்யப் போகிறேன்.

ஆத்ம:—ஹா!....அவனுடன் கூட......

சுமதி:—ஆம். அவருடன் கூட நானும் சாகப்போகிறேன்.

ஆத்ம:—ஐயோ! சுமதி! இக்காரியம் அத்தனை இலேசானதா? அந்த வியாதி மிகவும் கொடிய தொத்து வியாதியாயிற்றே! உன்னையும்........

சுமதி:—ஆம்! என்னையுமா?....டாக்டர்! இப்போது என்னைச் சுற்றியுள்ள பயங்கர வியாதிகளை விட அது ஒரு பெரிதா! இந்த பாவியை அதுவும் பிடித்துத் தின்னட்டும். உலகத்தில் ஒன்றுக்கும் உதவாதக் கட்டையாய், பலர் பலவிதமாய் பரிகஸித்து ஏசிப்பேசி ஏளனம் செய்து பயங்கரச் சுழலில் வாழ்க்கை நடத்துவதைவிட இது எனக்குத் தெளிந்த இன்பமாகவே இருக்கும்.

டாக்டர்! தயங்கவேண்டாம். உலகத்தில் வாழ்ந்தால் ஒன்று தன் மனோபீஷ்டம் நிறைவேறி இன்பவாழ்க்கை வாழவேண்டும். அல்லது அதை வெட்டிமுறிக்கும் திட வைராக்கியத்துடன் வாழ வேண்டும். இரண்டுங் கெட்ட வாழ்வு கொடிய மிருகங்கள் நிறைந்த கானகத்தில் அகப்பட்டுக் கொண்டதற்கல்லவோ சமானம்.

ஆத்ம:—உன் மனம் வைராக்கியமடைய இதுதானா வழி?

சுமதி :—டாக்டர்! வேறு ஒரு வழியும் உண்டு. அதுதான் என் தற்கொலை. அது தங்களுக்குச் சம்மதமா அல்லது என் பழம்பிறவியின் பாவத்திற்குப் பரிகாரமாய் எனது கடமையைச் செய்து, சாவதில் உங்களுக்குச் சம்மதமா! நீங்கள் சற்று முன் கொடுத்த வாக்குப்படி செய்யப்போகிறீர்களா! இல்லையா! கண்டிப்பாய்த் தெரிவித்து விடுங்கள்.—

என்று ஆத்திரமும் ஏமாற்றமும் கலந்த தொனியில் கேட்கும் போது டெலிபோன் மணி கணகணவென்று அடித்தது கேட்ட ஆத்மநாதன் அதற்குப் பதில் சொல்வதா, சுமதியின் பேரிடி போன்ற வார்த்தைக்குப் பதில் பேசுவதா? தர்ம சங்கடமான நிலைமையில் பேசத்தொடங்கி, "சுமதீ! ஏற்கனவே பற்றி எரியும் என் இதயத்தில் இன்னும் தீ மூட்டுகிறாயே! நானா உன் தற்கொலைக்குச் சம்மதப்படுவேன்! கண்மணி!....ஐயோ!....வாய்த் தவறி வந்துவிட்டது. மன்னிக்கவேண்டும். சுமதீ! அம்மாதிரி ஒருகால் நேருமாயின் உன் சவம் எரிவதற்கு முன்பே என் சவம் கொழுந்துவிட்டெரிந்து சாம்பராகி இருக்கும் என்பதை மறந்து பேசுகிறாயே........

என்று முடிப்பதற்குள் சுமதி நெருப்பை மிதித்தவள் போல் துள்ளினாள். காதைப் பொத்திக்கொண்டு, "ஹா! ராம். ராம்!" என்று கூவியவாறு அவனை நோக்கினாள்.

'சுமதீ! சற்று இரு. இந்தப் பாழும் டெலிபோனுக்குப் பதில் சொல்லிவிட்டு வருகிறேன்'....

சுமதி :—வேண்டாம்....அதில் யாராவது உங்களைக் கூப்பிடுவார்கள். நீங்கள் போய்விடுவீர்கள். அது அடித்துக் கொண்டே இருக்கட்டும்.

ஆத்ம :—சுமதி! உன் கடமையை நீ நினைப்பதுபோல் இது என் கடமையல்லவா! இரு இரு! இதோ வந்துவிட்டேன்........ ஹல்லோ........என்ன! டேஞ்சராயிருக்கிறதா! உடனே ஆபரேஷன் செய்யவேண்டுமா!....என்று கூறும்போதே அவன் இதயத்தில் செம்மட்டியால் அடிப்பதுபோன்ற சங்கடம் உண்டாகிவிட்டது. "சரி. எல்லாம் தயாராகட்டும். இதோ வருகிறேன்"....என்று கூறியதைச் சுமதி கேட்காமலிருக்க முடியுமா?

சுமதி :—நான் சொல்லியபடியே ஆய்விட்டதே. ஆபரேஷனா! இப்பவா.....

ஆத்ம :—ஆம்....இப்பதான்....ஐயோ! என்னுடைய இந்த நிலைமையில் கடவுள், என்னைச் சோதிக்கும்பொருட்டே இத்தகைய

பயங்கர வேலையை இத்தருணம் காட்டியிருக்கிறார் என்று தோன்றுகிறது. ஒருவிதமான ஆபத்துமின்றி, என் பெயருக்கு ஹானியுமின்றிக் காப்பாற்றுவாரா!........

சுமதி :—டாக்டர்! போகிறீர்களா?

ஆத்ம :—ஆம். என்னுடைய சோதனைப் பரீக்ஷைக்குப் போகிறேன். சுமதி! தடை செய்யாதே!— என்று கூறிக்கொண்டே கிளம்பினான்.

சுமதி, அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, "டாக்டர்! என் கதி என்ன? நான் என்ன செய்வது?"....என்று முடிப்பதற்குள், ஆத்மநாதன், தன் கடமையில் மனம் லயிக்கச் செய்தவண்ணம், "சுமதி! பதறாதே....உன் கதி என்னவா? இதுதான்" என்று கூறியவாறு, அவளைச் சோபாவில் உட்காரவைத்துவிட்டு, பொறி கலங்கும் நேரத்தில் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான்.

கதவைப் பூட்டும் சத்தம் கேட்ட பிறகே சுமதிக்கு விஷயம் தெரிந்தது. அதன்மேல் என்ன செய்யமுடியும்? எண்ணாத எண்ணமெல்லாம் ஏதேதோ எண்ணியவளாய், பதைத்த மனத்துடன் எழுந்து ஓடிவந்து ஜன்னலால் எட்டிப்பார்த்தாள். டாக்டர் ஓர் எந்திரம்போல் நடப்பதைப் பார்த்து, ஜன்னலுடன் சாய்ந்தபடியே நின்றுவிட்டாள்.

## 37

### சோதனைப் பரீக்ஷை—சொல்லொணா இம்சை

ஆத்மநாதன், தன் வழக்கம்போல் தங்வந்திரியின் படத்தை நமஸ்கரித்தான். கடவுளை எல்லாம் வேண்டிக்கொண்டு, "என் மனத்திலுள்ள குழப்பத்தை மாற்றி, தெளிவைக் கொடு. இந்த அசேதனக் கட்டையினால் ஒரு உயிருக்குப் பங்கம் விளைக்காதே" என்றெல்லாம் வேண்டியபடியே ஆபரேஷன் உடையை அணிந்து கொண்டு, ஆபரேஷன் தியேட்டருக்கு வந்தான்.

எத்தனைதான் மனத்தை மாற்றித் திடப்படுத்திக் கொண்டாலும் உள்ளுக்குள் துளைக்கும் உணர்ச்சி திடும் திடும் என்று அலறச் செய்யாமலில்லை. கத்தியைக் கையில் எடுத்தால், அவனை யறியாது

கை சற்று நடுங்கியது. சுமதியின் பரிதாபகரமான முகம் உரு வெளித் தோற்றம்போல் தெரிந்து வதைக்க வாரம்பித்தது.

ஒரு க்ஷண நேரத்தில் எத்தகைய பெரிய ஆபரேஷன்களையும் செய்து முடிக்கும் ஆத்மநாதன் இன்று இப்படித் தடுமாறும் ரகஸ்யம் யாருக்குத்தான் தெரியும்?

உதவி டாக்டருக்கு இச்செய்கை ஆச்சரியத்தைக் கொடுத்தது. எதனால் இப்படி தயங்குகிறார் என்று சந்தேகித்தபடியே, "டாக்டர்! க்ளோரோபாரம் கொடுத்து நேரமாகிறதே. இப்படி இருந்தால், ஆபத்தல்லவோ! என் தாமதம்?" என்று எச்சரித்தார்.

ஆத்மநாதனின் ஜென்மத்திலேயே இதுதான் முதன் முறை உதவி டாக்டர் எச்சரித்ததாகையால், அவன் உள்ளத்தில், தான் பெரிய முட்டாள்தனம் செய்துவிட்டோ மென்றும், அவமான மடைந்து விட்டோம் என்றும் ஓர் வீர உணர்ச்சி சுடச் சுட எழுந்தது. தன் குற்றத்தையுணர்ந்து, உடனே தன் வேலையில் கவனத்தைச் செலுத்த வாரம்பித்தான்.

ஜன்னலருகில் நிற்கும் சுமதிக்கோ, ஆத்மநாதனின் மனோ நிலைமையில் நோயாளிக்கு ஒருவிதமான ஆபத்து மின்றி, அனுகூல மாக வேண்டுமே என்ற கவலை பிடித்துக்கொண்டது. கடவுளை வணங்கி, ஆத்மநாதனுக்குத் தெம்பும், தெளிவும், தைரியமும், ஜெயமும் கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டியவாறு தொழுதாள்.

உள்ளே இருப்புக் கொள்ளவில்லை. நாலாப்பக்கமும் சுற்றி வந்தாள். மீண்டும் நாற்காலியில் அமர்ந்தாள். ஆத்மநாதன் போகும் வேகத்தில் தன் ட்ராயரைச் சாத்தாமல் போய்விட்டான். அதிலிருந்த டைரியின்மீது சுமதியின் திருஷ்டி சென்று லயித்ததால், அதைத் துணிந்து எடுத்தாள்.

> "இன்று இருபத்தினன்கு மணிநேரத்தில் 15 மணி நேரம் உழைப்பு. மூன்று மணிநேரம் படிப்பு. ஒருமணி நேரம் அரைத் தூக்கமும் இன்பக்கனவும். 5 மணிநேரம் விழிப்பும், ஆகாயத்தைப் பார்த்து பெருமூச்சும். இத்துடன் இன்றைய பொழுது கடந்தது. எத்தனை நாளைக் குத்தான் எனது இதயராணியாகிய சுமதியைப் பார்க்காதிருப்பேன்!
>
> ஆத்மநாதன் 11—3—19...."

> "என்னைப் பிறர் பார்த்திருந்தால், கட்டாயம் பைத்தியமென்றுதான் சொல்லியிருப்பார்கள். ஏன்? ஆச்சிரமத்தை 5 முறை சுற்றிவந்தும் என் பிரேமையின் போக்

கிஷம் என் கண்ணில் படவில்லை. எத்தனை முறை அலேந் தாலும் நோயாளியைப் பார்க்கச் செல்கிறுன் என்கிற கௌரவமன்றே என்னைக் காத்தது. 12—3—19....

கண்மணீ! கனவில் காட்சிக் கொடுத்து என்னைக் கடும் பித்தனுக்கும் நீ, நினைவில் ஏன் ஒருமுறை உன் அழகிய திருமுகத்தைக் காட்டக்கூடாது. இது என் துர்ப்பாக்கியமா! சீச்சி! எல்லா நோயையும் விடக் கொடிய நோய் இக் காதல் நோய்தான். இது, கண்களுக்கு உறக்கத்தை யொழித்தது. பசியை அகற்றியது. நன்றுய் போஜனமும், தூக்கமும் கொண்டு எத்தனை நாளாயிற்று. இல்லை! யுகங்களாயிற்று. 14—5—19....

இதற்குமேல் சுமதியினுல் படிக்க முடியாது, விம்மலும் பொருமலும் பொங்கிவழிந்து, திக்கு முக்காடும் சமயம் ஆத்மநாதன் தன் தொழிலை வெகு அக்கரையுடன் முடித்துவிட்டு, இங்கு கதவைத் திறந்துகொண்டு வந்தான்.

சுமதி, டைரியைப் பார்ப்பதைக் கண்டதும், "சுமதீ! கொடுத்துவிடு. இவை இறந்துபோன காலத்தின் கனவுகள்" என்று அதை அவள் கையிலிருந்து தானே பிடுங்கி, மேஜையில் போட்டுப் பூட்டினுன். சுமதி, கண்களைத் துடைத்துக்கொண்டு, "டாக்டர்! ஆபரேஷன் ஒரு கோளாறுமின்றி, நன்றுக நிறைவேறியதா?" என்று ஆவலாய்க் கேட்டாள்.

ஆத்ம:—ஆம். திருப்திகரமாகவே கடவுள் முடித்து வைத்தார்—என்று கூறிக்கொண்டே ஆயாசமாய் சோபாவில் படுத்தான்.

ஆஸ்பத்திரியில் முன்பு சுமதி இருந்த காலத்தில் ஆத்மநாதனின் பழக்கங்கள் நன்றுகத் தெரியுமாதலால், அவனுடைய அலுப்பையும் களைப்பையுமறிந்து, எப்போதும் அவன் மேஜைமீது தயாராக விருக்கும் சூடான காப்பியைக் கொட்டிக் கொடுத்து, "டாக்டர்! இதைச் சாப்பிடுங்கள். சற்று களைப்பு தீர்ந்ததும் நாம் போகலாம்" என்று கூறியபடியே கையை நீட்டினுள்.

ஆத்ம:—சுமதீ! மன்னிக்கவேண்டும். எனக்கு ஒன்றும் வேண்டாம். தேகத்திற்குக் களைப்பிருந்தால், இக் காப்பியினுல் தீரும். என் இதயக் களைப்புக்கு இந்தப் பானம் எதற்கு? வேண்டாம்....சரி!....எழுந்திரு போவோம் — என்று கூறிக்கொண்டே தன் மேஜையைப் பூட்டிவிட்டுக் கிளம்பினுன்.

அவனுடைய களைப்பும், பரிதாபமும், துக்கமும், முகத்தில் ஜொலிப்பதை, சுமதி அறியாமல் இல்லை. ஆனுல், வாய் பேசவும்

முடியாது மௌனமாகக் காப்பியை வைத்துவிட்டு, தலை குனிந்த படியே நடக்க ஆரம்பித்தாள். ஆத்மநாதன் காரில் உட்கார்ந்ததும் சுமதியும் அவன் பக்கத்து ஸீட்டிலேயே அமர்ந்தாள். காரும் வேகமாகக் கிளம்பியது. இருவரும் மௌனப்பதுமைகளானார்கள்.

சுமதியின் எண்ணங்களின் அளவைக் கூறவே திறமன்று. இதயத்திலும் வயிற்றிலும் செய்யும் சங்கடமோ சகிக்க முடிய வில்லை. பகீர், பகீர் என்று செய்யும் வேதனையினால், குபீர், குபீர் என்று வெயர்வை வெள்ளம் வெந்நீர்போல் பொங்கி வழிகிறது. பெருமூச்சின் சப்தமானது காரின் விபரீத ஓசையிலும் ஜெயித்துக் கொண்டு வருவதை ஆத்மநாதன் கவனித்துவிட்டான்.

அவனுடைய பெருமூச்சும் சுமதியுடைய விம்மலுக்குப் போட்டி போடுவதாகவே இருந்தது. ஆத்மநாதன், "ச்சூ, அப்பாடா!" என்று ஸ்டீரிங்கிமீது தலையைச் சாய்த்து, கவிழ்ந்து கொண்டான். காரின் வேகம் குறைந்தது.

இதைக் கண்ட சுமதி நடுங்கிப்போய்...."டாக்டர்! டாக்டர்! என்ன செய்கிறது? ஏன் இப்படிச் சாய்ந்துவிட்டீர்கள்?" என்று ஆவலே வடிவாய்க் கேட்டாள். உண்மையில் அவனுக்குத் தலை சுற்றுகிறது. இன்னதென்று விவரிக்க வியலாத வேதனை செய் வதைச் சகித்துக்கொண்டு, "ஒன்றுமில்லை சுமதி! பயப்படாதே" என்று கூறிக்கொண்டே முகத்தையும் கண்களையும் துடைத்துக் கொண்டு மீண்டும் காரை ஓட்ட ஆரம்பித்தான். "சுமதி! நீ போய் பார்ப்பதன் கருத்துதான் என்ன?" என்று கேட்டான்.

சுமதி:—என்னவா! அவரை அழைத்து வைத்துக்கொண்டு, அவருக்குப் பணி செய்து என் பாபத்தைப் போக்குவது.

ஆத்ம:—என்ன! அழைத்து வைத்துக்கொள்வதா! எங்கே?....

சுமதி:—கடவுளால் படைக்கப்பட்ட இப்பரந்த உலகில் இரு ஆத்மாக்கள் வசிக்க இடங் கிடைக்காதா! அங்கேதான்.

ஆத்ம:—சுமதி! குழந்தை விளையாட்டாகப் பேசுகிறாயே! ஒரு நோயாளியை, அதிலும் குஷ்டரோகியை வைத்துக்கொண்டு ஜீவியம் நடத்துவதென்றால், யார் இடங் கொடுப்பார்கள்?.... எவ்விதம் காலக்ஷேபம் நடப்பது?

சுமதியின் கண்களில் நீர் பெருகியது. ஆத்மநாதனை எக்கம் நிறைந்த உணர்ச்சியுடன் ஒரு முழிப்பு முழித்துப் பார்த்தாள். "டாக்டர்! நீங்கள்கூடவா கைவிட்டு விடுவீர்கள்? உங்களுடைய நிலத்தில் ஒரு குடிசைக்கு எனக்கு இடமில்லையா! முன்பு ஒருதரம் என் சங்கீதத்தை ஆசித்த நீங்கள் அதை மறந்தீர்களா! நாற்றுக்

கணக்கானவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவில் கொஞ்சம் இந்தப் பாவிக்குக் கிடையாதா! அதில்லை எனினும் உங்களுடைய ஆஸ்பத்திரியைப் பெருக்கும் வேலைக்காரியாய்க் கூட நான் இருக்க முடியாதா! அந்த வகையில் என் காலக்ஷேபம் நடக்காதா?''

என்று முடிக்கும் வரையில் கூட ஆத்மநாதனின் மனம் தாங்கவில்லை. தான் ஏன் அம்மாதிரி கேட்டோம் என்ற விசனமே உண்டாகிவிட்டது. சுமதியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, ''சுமதி! மன்னித்துவிடு. உன்னை வருத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் நான் கேட்கவில்லை. என்னுடைய உதவியில் நீ இருக்கப் பிரியப்படுகிறாயா என்பதை அறியவே கேட்டேன். கோபிக்காதே.... ஐயோ! ஞாபகமின்றி தீண்டிவிட்டேன். வருந்தாதே!'' என்றான்.

மீண்டும் நெடு நேரம் வரையில் மௌனம் குடிக்கொண்டது. பிறகு, ''சுமதி! இதோ தெரியும் கட்டிடந்தான் லெப்பர் ஆஸ்பத்திரி'' என்றான். சுமதியைத் தூக்கிவாரிப் போட்டது. ''இதுவா! இதுவா!'' என்று அலறியதுபோல் கேட்டாள்.

ஆத்ம :—ஆம், இதுதான். உனக்கு அந்த மனிதன் யாரென்று தெரியுமா!

அவன் கேட்டபிறகே தனக்கு ஆளே இன்னுனென்று தெரியாதே. யாரைப் போய்ப் பார்ப்பது, என்ன கேட்பது? எந்த கோரமையைச் சகிப்பது? ஐயோ! என்று, அவள் நெஞ்சை அள்ளித் தின்று வதைக்கின்றது.

''டாக்டர்! எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே! இப்படியே என் உயிர் போய்விடக் கூடாதா? என் மனோவேகத்தின் ஆத்திரத்தில் நான் வந்துவிட்டேனே! டாக்டர் என்ன செய்வேன்?'' என்று கதறினாள்.

ஆத்ம :—சுமதி! இப்போதும் பாதகமில்லை. நாம் இப்படியே திரும்பி விடுவோம். கடவுள் விட்டவழி யாகட்டும். காரைத் திருப்பிவிடட்டுமா?

சுமதி :—ஐயோ! வேண்டாம்! வேண்டாம். உள்ளே போய் விஸிட்டர்போல் பார்த்துவிட்டுச் செல்வோம். பிறகு, என் அத்தையை விசாரித்துக்கொண்டு வரலாம்....ஹா....அதோ! ஆச்சிரமத்தின் கார் நிற்கிறதே....ஆச்சிரமத்திலிருந்து இங்கு யார் வந்திருப்பார்கள். டாக்டர்! காரை நிறுத்துங்கள்—என்று கூறிக்கொண்டே வண்டியை விட்டு இறங்கி, அந்தக் காரிடம் சென்று டிரைவரை நோக்கி, ''சாகிப்! இங்கு யார் வந்திருக்கிறார்கள்?'' என்று கேட்டாள்.

இவளைக் கண்டு ஆச்சரியமடைந்த சாகிப், "ஆ! அம்மா! நீங்க இதோ இருக்கிறீங்களே! பெரியம்மா உங்களைத் தேடிக் கொண்டல்லவோ இங்கே வந்திருக்கிறாங்க. அவங்க உள்ளே போயிருக்காங்க" என்றான்.

ஓரே ஓட்டமாய் ஆத்மநாதனிடம் வந்து, "டாக்டர்! அத்தே தான் என்னைத் தேடிக்கொண்டு உள்ளே போயிருக்கிறாளாம். வாங்கோ! போகலாம்" என்றாள்.

ஆத்ம :—சுமதி! அத்தையம்மாள்தான் இருக்கிறார்களே! நானும் வரவேண்டுமா!

சுமதி :—ஐயோ! வாருங்கள், வாருங்கள். எனக்காக வாருங்கள்—என்று காரின் கதவைத் திறந்தாள். மறு பேச்சின்றி ஆத்மநாதன் விதியை எண்ணி மனம் தவித்தவாறு இறங்கினான். அதிகாரியிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு உள்ளே பிரவேசித்தார்கள்.

அந்தோ! அந்தக் கண்றாவியை விவரிக்கமுடியுமா! எத்தனையோ வியாதிக்காரர்கள் படுத்தும், உட்கார்ந்தும் இருப்பதையும் அவர்களுடைய கோரத்தைக் கண்டு சகியாமல் சுமதி உள்ளம் புகைந்து கொண்டே சென்றாள். சற்று தூரத்தில் ஒரு சயிற்றுக் கட்டிலின் பக்கம் தலைவி நிற்பதைக் கண்டதும், அவன்தான் தன் புருஷனாக இருக்கவேண்டும் என்று யூகித்துக்கொண்ட சுமதிக்குக் கால்களை எடுத்தும் வைக்க முடியாது தள்ளாடிப் பின்னலிட ஆரம்பித்தது.

படபடவென்று மார்பு துடிக்கிறது. கண்களில் பொங்கி வரும் வெள்ளத்தை அவளால் அடக்கவே முடியவில்லை. மெல்ல நடந்து சென்று சற்று தூரத்திலிருந்தபடியே அவனைப் பார்த்து விட்டாள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்.

சுமதிக்குக் காதல் என்றால் என்ன என்று தெரியாததற்கு முன்பு, அவள் மனச்சுவரில் அழகான சுந்தர வீரபுருஷன் தனக்குக் கணவனாக வரவேண்டுமென்று ஒருவரின் உருவமும் இல்லாது அழகிய சித்திரத்தைத் தீட்டி இருந்தாள்.

அதற்கு நூறு பங்கு அதிகமான அழகுக் குன்றாய்—மன்மத வடிவமாய்—விளங்கும் ஆத்மநாதன் இவள் மனத்தைக் கொள்ளைக் கொண்ட பிறகு, அவளுடைய அகக் கோட்டையின் கட்டிடம் பெரிதாகத் தானாகவே எழும்பிக்கொண்டிருந்தது. தன் பயங்கர சரிதையை அறிந்ததும் இடி இடித்துப் பொடி சூரணமாகிவிட்ட சமயம், இந்தக் கோர ஸ்வரூபத்தைப் பார்த்ததும் அவளை மீறி, 'கூ' என்ற ஒரு சத்தமிட்டாள். நெருப்புப் பிடித்து அவள் இதயமே எரிவதுபோலாகி விட்டது.

ஆத்மநாதன் உயிர் துடிக்கிறது. அத்தை, இவள் கூவியதைக் கேட்டபிறகே சுமதி வந்திருப்பதை அறிந்து, ஓடிச் சென்று சுமதியைத் தாங்கிக்கொண்டாள்.

கட்டிலில் படுத்திருக்கும் நோயாளி, "ஹா! கடவுளே! இதென்ன சோதனை. ஒருவர் கண்ணிலும் படாது என்னைக் கொண்டுபோய்விடு என்று கதறி நான் வேண்டியதெல்லாம் வீணுகவா போய்விட்டது. ஐயோ! அந்த உத்தமச் சுந்தராங்கி இந்தப் பாபக் கட்டையைப் பார்க்கவேண்டாம். சுமதி! என்னைப் பார்க்காதே! திரும்பிப் போய்விடு. போய்விடு. எத்தகைய தபஸ்விகளின் மனத்தையும் அரைக் கணத்தில் கலங்க வடிக்கச் செய்யும் பேரெழில் வாய்ந்த அழகுத் தெய்வம்போன்ற நீயா இக்கொடிய பிணத்தைப் பார்ப்பது? முடியாது, முடியாது. வேண்டாம், வேண்டாம். அத்தையம்மா! இங்கு கூப்பிடாதே" என்று தனக்குள் தானுகவே கத்திக்கொண்டே துணியை இழுத்து முற்றிலும் போர்த்திக்கொண்டு குப்புறப் படுத்துவிட்டான்.

இவ்வளவு தெளிவாய் அவன் பேசுவதிலிருந்து அத்தையின் மூலம் சகல விஷயங்களையும் அறிந்துகொண்டு விட்டான் என்று ஆத்மநாதனுக்குத் தெரிந்துவிட்டது. அந்தக் கண்ருவியைக் கண்டு சகிக்காமல் அவன் கை குட்டையும் நனைந்துவிட்டது.

அங்குள்ள மற்ற குஷ்டரோகிகள் இந்தச் சம்பவத்தை ஒரு வேடிக்கையாகப் பார்த்தார்கள். சுமதி, சில வினடிகள் கண்களை இறுக மூடிக்கொண்டு தூர நின்றவள் சற்று நேரம் சென்றபிறகு சிறிது தெளிவு பெற்று, அந்தப் பக்கம் நோக்கினள்.

நோயாளி, கால் முதல் தலைவரையில் இழுத்துப் போர்த்துக் கொண்டு குப்புறப்படுத்து தேகங் குலுங்கப் புலம்புவதைப் பார்த்ததும், 'ஐயோ! அத்தே! அவருக்கு விஷயம் பூராவும் தெரியுமா! என்னைப் பார்த்த வுடனே ஏன் இப்படிச் செய்கிறர். சொல்லு' என்று கேட்டாள்.

தலைவி:—நீ சென்றதும் உன்னைத் தேடியும் அகப்படாததால், நீ இங்குதான் வந்திருப்பாய் என்று இங்கு வந்து விசாரித்தறிந்து இவனைப் பார்த்தேன். ஏற்கெனவே நான் சில வருஷங்களுக்கு முன்னர் இவனைப்பார்த்திருப்பதால் சுலபமாகத் தெரிந்துகொண்டு விசாரிக்கையில் நீயும் வந்தாய். சுமதி! இந்தக் கண்ருவியை என்னல் கண்டு சகிக்க முடியவில்லை. அவன் உன்னைப் பார்க்கவே அஞ்சி, நடுங்கி வெட்கிச் சாகிறன். அம்மா! நான் சொல்வதைக் கேளு. நீ இப்படியே திரும்பிவிடு. வா! போகலாம்.

சுமதி:—போதும் உங்கள் உபதேசம்—என்று அவனை உதறித் தள்ளிக்கொண்டு கட்டிலின் சமீபம் ஓடினாள். வ்யாதியஸ்தனின் படுக்கையும் நிலைமையும் எத்தகையோருக்கும் வெறுப்பைத் தரும் அல்லவா? அந்த வாடை முதலில் சுமதியையும் ஒரு கலக்குக் கலக்கியது. உடனே தன்னைத்தான் தேற்றிக்கொண்டு, "இதோ பாருங்கள். மாமா! மாமா!" என்று ஒரு முறைக் கூப்பிடுவதற்குள் துக்கம் தொண்டையை அடைத்து விட்டது.

மீண்டும் கண்களைக் கைகளால் மூடிக்கொண்டு, "ஐயோ, கடவுளே! என்னை உடனே விழுங்கிவிடலாகாதா? என் வைத்து ஆட்டுகிறாய்?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே மறுபடியும் "மாமா! மாமா! என்னை நீங்கள் வெறுத்தாலும் கடவுள் நம்மை பிணைத்துவிட்டு வெறுக்காதுதான் பார்த்துக்கொண்டிருக்கிறார். உலகமும் இந்த அக்ரமத்தைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. இனி, தங்களுக்கு ஏன் மனக் கலக்கம். இப்படித் திரும்புங்கள்" என்று கெஞ்சிய குரலில் கேட்டாள்.

'மாதா பிதாக்கள் செய்த சதிக்கு மக்கள்தான் கலங்கித் தவிக்கக் கடமைப்பட் டிருக்கிறார்கள்' என்ற வாக்கு நம் வாழ்க்கையில் உண்மையாகிவிட்டது. சுமதி! உன்னை நான் கேவலம் சிறிய குழந்தையில் பார்த்தவன் என்றாலும் சிறிய குழந்தையே பெரியவளாகிய பிறகு எப்படி இருப்பாய் என்று நான் மானஸீகக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். அதைவிட ஆயிரம் பங்கு வனப்புடன் நீ விளங்கியதை உங்கள் ஆசிரமத்து க்ரூப் புகைப் படத்தில் பார்த்து அறிந்த நாள்முதல், இந்த மகா கொடும்பாவியொருவன் இருக்கிறான் என்பதை நீ அறியுமுன்பு என்னாவி நீங்க வேண்டி நான் பலகாலும் தொழுது வேண்டியதெல்லாம் வீணாகி விட்டது. சுமதீ! என்னைப் பார்க்காதே. என்னருகில்கூட வராதே! எழுந்து போய்விடு.... போய்விடு".... என்று கதறினான்.

சுமதி, சற்றும் தயங்காமல், "ஆம். விதியை வெல்லும் சக்தி நமக் கிருக்குமாயின், பிறகு கடவுள் ஒருவர் இருக்கிறார் என்கிற நினைவே மக்களுக்கு மாறிவிடு மல்லவா! விதியின் ஆட்சிக்கு யார் அகப்படாதவர்கள். தலைக்கு மீறிப் போகும் வெள்ளத்தில் அளவு வேறு எடுக்கவேண்டுமா?" என்று கூறிக்கொண்டே அந்த நோயாளியின் முகத்தில் மூடியிருந்த துணியைத் தானே தைரியமாயும் ஒருவித ஆவேசத்துடனும் எடுத்தாள். நோயாளியின் பரிபவத்தைக் கண்டதும் எத்தனை தான் வேதாந்தமும் வைராக்கியமும் கொண்ட மனத்தினளாக சுமதியிருப்பினும் கதிகலங்கிவிட்டது. 'இவனா தன் கணவன்' என்று நினைக்கும்போது, அவளால் தாங்கமுடியாது மயக்கம் வந்துவிட்டது. அப்படியே கீழே சாய்ந்து விட்டாள்.

## மாய உலகின் மாறுதல் காட்சிகள்

மேற்குறித்த சம்பவத்திற்குப் பிறகு இப்போது சுமார் ஒரு வருஷம், இருந்த இடம் தெரியாது மறைந்துவிட்டது. ஆத்மநாதனின் ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள பெரிய தோட்டத்தில் ஒருபுறம் சிறிய குடிசை வீடொன்று புதிதாக இருக்கிறது. அதில், சுமதியும் அவள் புருஷனும் வசிக்கிறார்கள் என்று சொல்லவும் வேண்டுமா!

உலர்ந்த கட்டையைப்போல் சுமதியின் சரீரம் காய்ந்து போய்விட்டது. மல்கோவா மாம்பழம்போல் இருந்த அவளது கன்னங்கள், சப்பி உமிழ்ந்த மாங்கொட்டையைப்போலாகி விட்டன. தலையில் ஆலம்பால் திரிக்காமலேயே ஜடை விழுந்தது போல் கூண்டாகிவிட்டது. ஆத்மநாதன் எத்தனை சொல்லியும் கேட்காமல், 'நான் வேலை செய்துதான் ஜீவனத்திற்கு வழி தேடு வேன்' என்று பிடிவாதம் செய்ததால் ஆஸ்பத்திரியில் பாட்டுப்பாடும் வேலையைக் கொடுத்து, அவளைத் திருப்தி செய்தான்.

ஆத்மநாதன், இந்தக் கொடிய வியாதியைத் தீர்த்து ஸ்வஸ்தப் படுத்துவதற்காக இந்த வியாதிக்குக் கெட்டிக்கார டாக்டர்களை எல்லாம் வரவழைத்துச் சிகிச்சை செய்யவும் ஆரம்பித்தான்.

ஆத்மநாதனுடைய வாழ்க்கையிலேயே என்றுங் கண்டறியாத இன்பப் பெருக்கை அன்று அரைக்ஷணம் மதிமயக்கத்தில் அனுப வித்ததே கடைசியாக அமைந்தது. அதன் பிறகு அவன் சுமதி யுடன் நேரில் நின்று பேசவும் மனங்கொள்ளாது ஜாடைமாடை யாகப் பேசுவதும், அவள் கவனிக்காத சமயம் அவளை அவன் கண்டு களிப்பதும், அவளுடைய விதியை எண்ணி வருந்துவதுமாக ஆகிவிட்டான்.

காதலின் சக்தி எத்தகையது என்பதை அவன் அனுபவிக்கும் போதுதான் வசுந்தராவைத்தான் நிராகரித்த சமயம் அவள் எப் படித் துடித்திருப்பாள் என்ற உண்மை தெரியவந்தது; மனங் கலங்கினான். தனது விஷயத்திலேயே நாளைச் செலுத்திவிட்டதால், வசுந்தரா என்னவானாள் என்பதைக் கவனிக்கவும் முடியாதுபோய், மத்தியில் சில தினங்களாகிவிட்டன.

இந்த வேதனை இவனைச் சித்திரவதைசெய்ய வஸுந்தராவைப் பற்றிய கவலையும் இரக்கமும் அதிகரித்து, அவளைத் தான் நேரில்

போய்ப் பார்க்கவேண்டும் என்ற எண்ணமும் உண்டாகியதால், அதற்கும் துணிந்தான். அன்று வந்த பத்திரிகையைப் புரட்டும் போது அதிலிருந்த புகைப்படம் இவனைப் பிரமிக்கச் செய்தது.

வஸுந்தராவும், ஆச்சிரமத்தின் போஷகரும் நாகரிகக்கல்யாண கோலத்துடன் காட்சி அளிப்பதைக் கண்டதும், "ஆஹ்ஹா! என் மனம் இப்போதுதான் குளிர்ந்தது. வஸுந்தரா! ஒரு கவலை நீங்கியது. இனி, உன் பிதா என்னைக் கோபிக்கமாட்டாரல்லவா?" என்று தனக்குள் எண்ணி சந்தோஷப்பட்டவாறு அந்தப் படத்தை மட்டும் கிழித்துத் தன் ட்ராயரில் வைத்துக்கொண்டான்.

ஆனால், வஸுந்தரா கல்கத்தாவிலேயே இரண்டு மாதமும் இருந்துவிட்டதால், அவளைப் பார்க்க முடியாமலேயே போய் விட்டது. சாதாரணமாக உடம்பில் ஏதேனும் வியாதி வந்தாலே உடம்பு துரும்பாகப் போய்விடும்போது மனத்தில் என்றும் ஆற்ற முடியாத ரணம்போல் பீடிக்கும் நோயால் ஆத்மநாதன் மெலிந்து வருவது வியப்பா! அவன், நல்ல தூக்கமும் நல்ல உணவும் கொண்டு எத்தனையோ மாதங்களாகிவிட்டன.

நாளுக்கு நாள் மனச் சோர்வும், அசக்தமும், ஏக்கமும் அவனை மிகவும் வாட்டத் தொடங்கின. எனினும், தன் தொழிலில் மட்டும் ஒரு குறைவுமின்றி முன்போலவே கவனித்து வந்தான்.

கலி முற்ற முற்ற உலகம், தலை கீழாகிக்கொண்டு வருவதைப் பிரத்தியக்ஷமாக அனேக விஷயங்களில் பார்க்கிறோமல்லவா! அது ஆத்மநாதன் விஷயத்தில் மட்டும் பொய்யாகிவிடுமா! சுமதிக்காக அவன் செய்யும் உதவிகள் முற்றும் அங்குள்ள பொறாமைக்காரக் கூட்டங்களின் வயிற்றில் மிளகாய் அரைத்ததுபோலாகிவிட்டது. அதிலிருந்து குசமச வென்ற வார்த்தைகள் சிறிது சிறிதாகப் பரவ ஆரம்பித்தன. "குஷ்டரோகியை இந்த தோட்டத்தில் சேர்த்திருப்பதால், ஆஸ்பத்திரியிலுள்ள எல்லோருக்கும் இந்த வியாதி பரவி விடாதா! இம்மாதிரி அநீதி செய்தால், யார் ஆஸ்பத்திரிக்கு வருவார்கள்?" என்ற ஒரு அக்கிரமமான புகாரைக் கிளறிவிட்டு குறும்புப் பிரசாரம் செய்யத் தயங்காமல் ஆரோக்கியசாமியின் கோஷ்டி ஒருபுறம் கிளம்பி பேஷண்டின் மனத்தைக் கலக்க வாரம்பித்தது.

ஆத்மநாதனின் பெற்றோர்கள் ஒருபுறம் கல்யாணத்திற்காக அவனைச் செல்லரிப்பதுபோல் அரிக்க வாரம்பித்தார்கள். எத்தனை விதமான துன்பத்தைத்தான் ஆத்மநாதன் சகிக்க முடியும்? சுமதியின் துறவிபோன்ற தோற்றம் ஒருபுறம் இதயத்தைத் துளைக்கிறது. அவளது மனவலிமையும், சாந்தமும், சகிப்புத்தன்மையும் ஆத்மநாதனைப் பிரமிக்கச் செய்தன.

ஆனால், அவளுடைய வியாதிக் கணவனுக்கு மட்டும் ஆஸ்பத்திரியில் சுமதியைப் பார்க்கமாட்டேன் என்று கூறிய மனப்பான்மை சிறுகச் சிறுக மாறிப்போய் அதிகார தோரணையும், சந்தேகப் பேய் பிடித்தத் தன்மையும், இரக்க மற்ற இதயமும், அன்பற்ற அலகையின் குணமும் உண்டாகிவிட்டன.

எத்தனை பயந்துகொண்டு, நடுங்கி நடுங்கிப் பணி செய்தாலும், "ஏ! சுமதீ! எங்கே போய்விட்டாய்? கொஞ்சம் விசிறக்கூடாதா? இங்கே வா!" என்று ஒரு கர்ஜனை செய்வதைக் கேட்கும்போது, சுமதியின் தேகம் ஒரு துள்ளு துள்ளும். ஆ! இதோ வந்துவிட்டேன். அடுப்பில் சாதம் அளிந்துவிடுமே என்று அருகிலேயே இருக்கிறேன்" என்று வெகு பொறுமையுடன் கூறும்போது அவளை மீறிக் கண்ணில் நீர் துளிர்த்துவிடும்.

சாதம் உரப்பாயிருந்தாலும், "ஏன் இப்படி என் மென்னியைப் பிடிக்கும்படி சோத்தைப் போட்டுக் கொல்லப் பார்க்கிறாய். சோறு பதமாவதற்குள் வடித்துவிட்டு, எங்கே போய்விட்டாய்?" என்று திட்டுவான். சாதம் அளிந்துவிட்டாலோ, "இப்படி அம்மனுக்குக் கூழ் வார்ப்பதுபோல் எனக்குப் போடப் பார்க்கிறாயா! சோத்தைக் கூழாக வைத்துவிட்டு, எங்கே போய்விட்டாய்!" என்று அதட்டுவான்.

நிமிடத்திற்கு நிமிடம் தேள் கொட்டுவதுபோல் பேசும் பேச்சுக்கள் சுமதியின் வியப்பைக் கிளறின. ஆனால், வைராக்கியத்தைத் தூண்டி இன்னும் பலமாக்கியது. உலகத்தவருக்குத் தன் சரிதம் ஒரு பாடமாகட்டும் என்ற எண்ணமே அதிகரித்தது. நியாயத்திற்குட்பட்டு நெறி தவறாது மானமாய், மரியாதையாய், கற்புடன் தன் வாழ்நாளைக் கடத்திவிட்டுச் சாக நினைத்ததற்குத் தன் கணவனே தன்னைச் சந்தேகித்துப் பேசுவதானது அவளால் சகிக்கமுடியாத வேதனையாகி மனத்திற்குள் மலைபோல் அழுத்திக் கொண்டே இருந்தது.

சதா சர்வ காலமும் அருகிலிருந்து விசிறிக்கொண்டே இருந்தாலும் ஏதேனும் சொட்டுச் சொல்லும் ஆசாமியின் குண மாறுதலைப்பற்றிக் கூறவேண்டுமா! சுமதி, 'பாட்டுப் பாடும் தொழிலை ஏன் எடுத்துக்கொண்டோம்' என்று வருந்த ஆரம்பித்தாள்.

உத்ஸாகமில்லாது சதா விசனத்துடன் பாடினால் பாடத்தான் வருமா? அந்தப் பாட்டுத்தான் சுவைக்குமா? கேட்கும் ஜனங்களுக்குச் சற்று அதிருப்தியே உண்டாகி வருவதை மகா யூகசாலியாகிய சுமதி அறிந்துகொண்டாள். இனி, தான் அதற்கும் லாயக்கில்லை என்பதைத் தெரிந்துகொண்டதும், இதை ஆத்மநாதனிடம் சொல்ல சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

சற்றுநேரம் தாமதமாகிவிடுமாயின், சுமதியின் கணவனுக்குக் கடுங்கோபம் வந்துவிடும். "நான் ஆஸ்பத்திரியில் பலபேர் முன்னிலையில் சந்தோஷமாக இருந்தவனைக் கெடுத்து இப்படி ஒண்டிக் கட்டையாக்கி ஏன் துன்பப்படுத்தவேண்டும்? சதா என்னுடன் இருந்தால் வியாதி மூண்டுவிடும் என்று பயமா! இதற்காகவா என்னை இங்கு அழைத்து வந்தாய்?" என்று சுடச்சுடக் கேட்கும் போது சுமதியின் நெஞ்சும் பகீர் என்று எரியும்.

"நான், உங்களைத் துன்புறுத்துவதற்குக் கனவிலும் நினைக்கவில்லையே மாமா! என் மனப்பூர்வமாய் நான் கடவுளுக்குப் பொதுவாகச் செய்கிறேனே! இது தங்களுக்குத் தெரியவில்லையா! நான் அப்படி அவமதித்து உங்களை வருத்த வேண்டுமென்று நினைத்திருப்பதாயிருந்தால், நான் எனது பழய நிலைமையிலிருந்து மாறவேண்டியதே இல்லையே! இரவு பகல் தங்களுக்கு நான் உண்மையாகப் பாடுபடுவது ஏன் தெரியவில்லையா!" என்று அவள் தன்னை மீறிக் கேட்டுவிட்டாள்.

அன்று அந்த நோயாளிக்கு வந்த கோபத்திற்கு எல்லையே இல்லை. சுமதியின் புழுதிபடிந்த மேனியில் அடியும் விழ ஆரம்பித்தது. என்றுவது வரும் வழக்கம்போல் ஆத்மநாதன் பார்க்க வந்த சமயம் இங்கு நடந்த சம்பவத்தைக் கண்ணால் பார்த்ததும் அவன் நெஞ்சம் வெந்து புண்ணாகியது.

"அறுதைப் பிணமாய், வியாதிப் பிண்டமாய், ஆஸ்பத்திரியில் கிடந்தவனைத் தர்மம் தர்மம் என்றும், பதி சேவை செய்து தன் பாபத்தைப் போக்க வேண்டுமென்றும் சத்தியத்திற்கும் கற்பிற்கும் பாடுபட்டுப் பணி செய்யும் பேதைப் பெண்ணின் உண்மைக் குணத்தை அறியாது அடிக்கவுமா அடிக்கிறான்!

இந்தக் கலியுகத்தில் இம்மாதிரியொரு நவீன நளாயினியை யாரேனும் பார்க்கமுடியுமா? ஹா! என்ன உலகம்! என்ன அக்கிரமம்! அன்று அவன் ஆஸ்பத்திரியில் காட்டிய லீலைகள் எல்லாம் வெறும் வேஷம் என்றல்லவா இப்போது தோன்றுகிறது. இம்மாதிரி இம்சைப் படுவதைச் சுமதி நம்மிடம் மூச்சுக்கூட விடவில்லையே! என்ன பொறுமை! என்ன சகிப்புத்தன்மை! அடாடா! சுமதீ! உன் தலையில் இப்படியா எழுதவேண்டும்?" என்று எண்ணியபடியே வந்த ஜாடை தெரியாது சிலைபோல நின்றுவிட்டான்.

கண்ணில் நீர் முட்டுகிறது. அந்த நோயாளியின் துர்க்குணத்தைக் கண்டு ஆத்திரம் ஒருபுறம் வதைக்கிறது. சுமதி தானகவே 'தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக்கொண்டாள்' என்கிற எண்ணம் இத்தனை நாள் இல்லாது இன்று ஆத்மநாதனின் மனத்

தில் உறுத்தியது. தான் நேரே சென்று, அந்த நோயாளிக்கு அவன் நிலைமையை அவன் அறிந்துகொள்ளும்படிக்குச் செய்ய லாமா என்றும் நினைத்தான்.

"சேச்சே! அம்மாதிரி செய்வதால் சுமதிக்குத்தான் பின்னும் கஷ்டம் உண்டாகும். நம்மால் என் உபத்திரவம்?" என்று தனக்குள் எண்ணிப் பெருமூச்சுவிட்டான். அதே சமயம் நளா யினிக்கு ஒப்பான சுமதி அந்த அடியைத் தாங்கிக்கொண்டு, 'ஹா!' வென்ற மூச்சுக்கூட விடவில்லை. 'ராமா! கிருஷ்ணு!' என்ற பகவன் நாமத்தையே உச்சரித்தவாறு பதுமைபோல் இருந்தாள்.

நோயாளி, அடிப்பதை நிறுத்திவிட்டு முணுமுணுத்தபடியே, "ஆமாம்! இந்த சாகஸத்தினுல்தான் நீ பிழைக்கிறுய். வெந்நீர் ஜலம் கேட்டேனே எங்கே? காது செவிடாகிவிட்டதோ! அல்லது மனம் இங்கில்லையா?" என்று கடிந்து பேசினுன். இதோ கொண்டு வரேன் என்ற ஒரே வார்த்தையைக் கூறிவிட்டு எழுந்து வந்தாள்.

இவ்வறைக்குச் சற்று தூரத்தில் ஆத்மநாதன் நிற்பதை தற்செயலாய் பார்த்துவிட்டாள். அவள், தடைகட்டிய நாகம்போல் அப்படியே கதிகலங்கிப்போய், "டாக்டர்!" என்று மெல்லிய குரலில் வாய்விட்டுக் கூறினுள். கண்ணில் மளமளவென்று ஜலம் வந்துவிட்டது.

ஆத்மநாதன் வாயைத் திறக்காமல் சமிக்ஞையினுல், 'பேசாமல் உள்ளே போ! எல்லாம் எனக்குத் தெரியும். தலைவிதி!' என்று தலையில் அடித்துக்கொண்டான்.

இதுபரியந்தம் தன்னுடைய சீர்கேடெல்லாம் சற்றும் அறி யாதிருந்த ஆத்மநாதனுக்குத் தெரிந்துவிட்டதே என்கிற கவலையும் அவமானமும் குபீரென்று சுமதியின் உள்ளத்தில் பொங்கியது. "டாக்டர்! உள்ளே வாருங்கள்" என்று மெல்லிய குரலால் அழைத்தாள்.

ஆத்மநாதன் 'முடியாது' என்று தலையை மட்டும் ஆட்டிக் கூறி விட்டுக் கண்ணைத் துடைத்துக்கொண்டே போய்விட்டான். இந்தச் சொல்ப நேரத்திற்குள் நோயாளி இரண்டு மூன்று முறைகள் கூப் பிட்டுவிட்டான். தன் துக்கம் முற்றிலும் வயிற்றில் அடக்கிக் கொண்டு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ஜன்னலின் அருகிலேயே சுமதி நின்றுள்.

"இதுகாறும் உள்ளே வந்து விசாரிக்கும் ஆத்மநாதன் இன்று மட்டும் என் இம்மாதிரி போய்விட்டான். இந்தச் சம்பவத்தைக் கண்ணுல் பார்த்துவிட்டதனுல் ஏதேனும் மனக்கலக்க மிருக்குமா?

என்ன செய்வது?" என்ற கவலையுடன் அவள் வீதியைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"அம்மா! தாயே! நீயுந்தான் விசிறமாட்டாய். தானாக தர்மத்திற்கு அடிக்கும் காற்றையும் மறைத்து சுவர் வைத்ததுபோல் ஏன் நிற்கிறாய்?" என்ற நோயாளி கூறிய வார்த்தையைக் கேட்டபிறகே சுமதி சற்று உணர்வு பெற்று விசிறியை எடுத்துப் பதுமைபோல் நின்று வீச வாரம்பித்தாள்.

## 39

### கலகத் தீயும், தியாகச் சுடரும்

மாலை மூன்று மணி யடித்தது. சுமதி நோயாளிக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டு வழக்கம் போல் பாட்டுப்பாடச் சென்றாள். நோயாளி மட்டும் யாருடைய வரவையோ எதிர்பார்ப்பவன்போல் வீதிப் பக்கமே நோக்கிக் கொண்டிருந்தான்.

'உள்ளே வயிறெரிய, உதடு பழம் சோறிய' என்பதுபோல் நடித்த கமலாவை ஆத்மநாதன் தள்ளிவிட்டான். ஆனால், ராஜமும் அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவள் என்று அறியாது அவளை மட்டும் நீக்கா திருந்தான். அந்தச் சித்தராங்கியின் மூலமே பழிக்குப் பழி வாங்க எண்ணிய கமலாவும், ஆரோக்கியசாமியும் ராஜத்தை ஆத்மநாதன் பக்கமாகவே நடப்பதுபோல் நடிக்கச் செய்து, விஷயம் அறிந்து வந்தார்கள்.

அந்த விஷ ஜெந்துவாகிய ராஜம், ஒய்யாரமாய்ச் சிரித்துக் கொண்டே, "என்ன பிச்சு! எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே வந்து உட்கார்ந்தாள்.

நோயாளி:—இதென்ன இத்தனை நாளாக வராது ஏமாத்தி விட்டாயே! நீ ஏன் வரவில்லை?

ராஜம்:—வேலைதான், மென்னியை அமுக்துகிறதே! உங்க சுமதியைப்போல் தளுக்காக இரண்டு பாட்டைப் பாடிவிட்டு, வந்து விடுகிற வேலையா எனக்கு? உங்களுக்கு உடம்பு ஒன்றும் குணத்தையே காணவில்லையே! நான்தான் அப்பவே சொன்னேனே! உமக்கு வைத்தியம் செய்வதாக நடிப்பதெல்லாம் வெறும் பொய் நாடகம். உங்கள் வியாதி குணமாகாமல் சீக்கிரம் இறப்பதற்காகவே செய்யும் சூழ்ச்சி இது.

அவர்கள் இருவரும் வெகு நாளையக் காதலர்கள் என்பதை நான் முதலில் உங்களுக்குக் கூறியபோது நம்பமாட்டேன் என்றீர்களே! இப்போதாவது நிஜம் தெரிந்ததா! அவர்கள் எண்ணத்திற்கு நீங்கள் தடையாய் இருப்பதை அறிந்த பிறகு, கலியுக நளாயினி என்று தன்னைப் பிறர் மெச்சுவதற்காகப் போடும் வேஷம் இது. நேற்றிரவுகூட அவர் இங்கு வந்து பேசிக்கொண்டிருந்தாரே!

நோயாளி :—என்ன! என்ன! நேற்றுக்கூடவா வந்தான். ஐயோ! நான் சிவனே என்று இருந்தவனை இங்கு கொண்டுவந்து வதைப்பதை என்னால் சகிக்கவே முடியவில்லையே! ஆமாம். நீங்கள் ஏதோ யோசனை செய்திருப்பதாகச் சொன்னீர்களே! அது என்ன வாயிற்று?

ராஜம் :—ஆவதென்ன? பலமான அஸ்திவாரத்துடன் நடந்து கொண்டிருக்கிறது. முற்றிலும் நெருப்புப் பிடிக்க ஆரம்பித்துப் புகையும் கிளம்பிவிட்டது. இனி, பற்றி எரியவேண்டியதுதான். கூடிய சீக்கிரத்தில் பார்க்கலாம். ஆரோக்கியசாமி, பெரிய டாக்டர் ஒருவருக்கு எழுதியிருக்கிறார். அவரிடமிருந்து தகவல் வந்ததும் உமக்குத் தெரிவிக்கிறேன். அந்த மருந்து சாப்பிட்டால் கட்டாயம் குணமாகிவிடும்.

நோயாளி :—அப்படியானால் இந்த வைத்தியமெல்லாம் வேண்டாமென்று சொல்லிவிடட்டுமா! அந்தக் கபட வேஷக்காரியைக் காணக்கூட எனக்குப் பிடிக்கிறதே இல்லை. அந்த அத்தை சனியனும் செத்துத் தொலைந்த பிறகு அவளுக்குக் கேட்பாரே இல்லாது போய்விட்டது.

ராஜம் :—ஐயோ பாவம்! அந்தம்மாளும் இவளுடைய அவமானம் பொறுக்காமல்தான் செத்தார்கள். அடாடா! மணி 4 ஆகிவிட்டது. நான், என் விதியைத் தொலைக்கச் செல்லுகிறேன். இந்த விஷயமெல்லாம் ரகஸியமாய் இருக்கட்டும்—என்று கூறிக் கொண்டே எழுந்தாள்.

பாட்டுப் பாடச் சென்ற சுமதிக்கு மனம் அன்று அடியோடு சரியாய் இல்லையாதலால், விசனத்துடனேயே சென்றாள். அவள் வரும் நேரம் அறிந்து அதற்காகவே காத்துக்கொண்டிருந்த ஆத்மநாதன் அவள் செல்லும்போது எதிரில் வந்து நின்றதைப் பார்த்ததும் அவளைத் திடுக்கிடச் செய்தது. "சுமதீ! நீ பாடவேண்டாம். திரும்பிப் போ! வீட்டிற்குப் போ!" என்று மெல்லிய குரலில் கூறினான்.

இவ் வார்த்தையைக் கேட்டு வியப்பும் திகைப்பும் கொண்ட சுமதி டாக்டரை ஒரு முறைப் பார்த்தாள். "டாக்டர்! என்

என்னைப் பாட வேண்டாமென்கிறீர்கள். நான், என்ன குற்றம் செய்தேன்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!" என்று பரிதாபம் நிறைந்த குரலில் கேட்டாள். அடக்கமுடியாது கண்ணில் நீர் முட்டிவிட்டது.

ஆத்ம:—சுமதீ! ஒன்றும் கேட்காதே! போம்மா! இனிமேல் நீ பாட வரவேண்டாம். யார்மீதும் குற்றமில்லை. விதியின்மீது தான் குற்றம். போ!.... நிக்காதே! புலம்பாதே!—என்று கூறிக் கொண்டே நிற்காமல் போய்விட்டான்.

ஒன்றுமே புரியாத சுமதிக்கு எப்படித்தான் இருக்கும். அந்த இடம் முற்றும் ஓர் அந்தகாரக் குகையைப்போல் தோன்றியது. "டாக்டர்!" என்று கூப்பிடுவதற்குள் அவன் மாயமாய் மறைந்து விட்டான். க்ஷணநேரம் தம்பித்து நின்றாள். பிறகு, தன் விதியை எண்ணிக் கண்ணைத் துடைத்துக்கொண்டே தன் குடிசையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவளுக்கு இதன் காரணமே தெரியாதாகையினால், தலை சுற்றுகிறது. மனம் படபடவென்று அடித்துக்கொள்கிறது. தனது துர்ப்பாக்கிய நிழல்தான் இம்மாதிரி ஆட்டுகிறதென்பதை எண்ணி விசனித்தபடியே தன் குடிசைக்குள் நுழையும்போது உள்ளே இருந்து பேச்சுக் குரல் கேட்பதை அறிந்து, வியப்புடன் நின்று ஒட்டுக் கேட்டாள்.

அங்கு பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கக் கேட்க சுமதிக்குத் தன் மண்டைமீது அடிப்பது போலாகிவிட்டது. "ஆஹா! இப்போதல்லவா உண்மை தெரிகிறது. ஆஸ்பத்திரியில் இருந்து வந்தபோது இந்த மனிதனுக்கு இருந்த பிரியமும் பச்சாத்தாபமும் இதற்குள் எப்படி மாறிவிட்டது என்று குழம்பினேனே! 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்ற பழமொழி பொய்யாகுமா?

அட கிரகசாரமே! ஒற்றுமையாய் இருந்தவர்களை எப்படியோ கலகஞ்செய்து குடி கெடுப்பதற்கென்றே அவதாரம் செய்துள்ள சில பிரகிருதிகள், 'நமக்குச் சமானம் இல்லை' என்று வேஷம் போட்டுக்கொண்டு, பரம சாதுவைப்போல நயமாகப் பேசி, நடித்துக் குலாவுகிறதுகளே; இதென்ன மாயம்! கலகம் என்பதையறிந்து கொண்டு, கண்டிப்பவர்கள் இல்லை என்ற நினைவோ என்னவோ?

இன்று கலகம் செய்யும்போது வெகு ருசியாய் இருக்கிறது. தினவு எடுத்துச் சொரியும்போது வெகு ஆனந்தமாய்த்தான் இருக்கிறது. பிறகு, எரிச்சலும் ரணமுமாகி அவதியை உண்டாக்கிவிடு

கிறதே அதையாவது இக் கலகக் கொள்ளிகள் உதாரணமாக எண்ணக் கூடாதா! இன்று, இளித்துக்கொண்டு இச்சகமாகக் குசுகுசுவென்றும் ரகஸியமாயும் பூனைபோல் கலகம் செய்து மனஸ்தாபத்தை உண்டாக்கிவிட்டால், நாளை எப்படியாவது இது வெளிவரும்போது ஏற்படும் சங்கடத்தை வெல்லமுடியுமா! கேட்பவர்கள் என்றும் கேட்டுக்கொண்டே இருப்பார்களா?

அந்தோ! மக்களுக்கு ஏன் இப்படி விவேகம் கெட்டுப்போய் பிறர் விஷயத்தில் தலையிட்டு வீண் பாபத்தை மூட்டைக் கட்டுவதல்லாது, ஒற்றுமையுள்ள குடும்பங்களில் பிளவுகளை உண்டாக்கி, பிறகு பலரால் இகழுப்படக்கூடிய ஒரு நிலைமையை அடையவேண்டும்? கலகத்தைக் கேட்டு நடப்பவர்களே ஒருநாள் இல்லாவிட்டால், ஒருநாள் அதற்கு உரித்தானவர்களிடம் விஷயங்களைச் சொல்லிவிட்டால், தன் கதி என்னவாகும் என்று ஏன் சிந்திப்பதில்லை. இப்படி பொருமையும் கலகமும் கொண்டுதான் உன் சகபாடிகள் விரட்டப்பட்டார்கள். உனக்கும் அக் காலம் சமீபித்துவிட்டது போலும்! உன் தலை விதியை யாரால்தான் மாற்ற முடியப் போகிறது?

உம். என்ன இருந்தாலும் நான் மனைவி; அவன் என் கணவன். என்னையும் ஆத்மநாதனையும் இம்சிப்பதற்காக இத்தகைய கலகத்தைச் செய்யும் நீ என்ன வாழப்போகிருய்? தண்ணீரும் தண்ணீரும் ஒன்று சேருவதுபோல் நாங்கள் ஒரு காலையில் எப்படியும் ஒன்று சேர்ந்துவிடுவோம். அடி பாதகி! நீதான் ஊசி மிளகாயைக் கடித்தவள்போல் தனியே நிற்கப் போகிருய். நீ படித்த படிப்பும், இப்போது படிக்கும் படிப்பும், உனக்கு இந்த அல்ப புத்தியைத்தான கொடுத்தது. இந்தக் குடி கெடுக்கும் புத்திதான வளர்ந்தது. படிப்பிலிருந்து நீ அறிந்த விவேகம் இதுதான? படிப்பு, குணத்தை ஒருகாலும் கெடுக்காது என்பதும் பொய்த்ததே!

சீச்சி! துஷ்டே! கலகத்தினல் பிளவுபட்டுள்ள குடும்பத்தைச் சேர்த்து வைக்கும் நல்ல காரியத்தில் உன் பாழும் மனம் செல்லவில்லையா? உம். உன் விதி இது. இம்மாதிரி குடி கெடுக்கும் தொழில், கெட்டதென்பதை நீ என்ருவது அறிந்து வருந்தும்படிக் கடவுள் செய்துவிட்டால் போதும்" என்று தனக்குள் எண்ணியபடியே, எதிரில் சென்று உடனே சண்டையிட்டுவிடுவது என்று துடித்தாள். ஆனல், அடுத்த வினடியே, தான் எதுவும் ஆத்திரப்பட்டுச் செய்வது சரி இல்லை. இன்னும் நடப்பதை அறிந்து சரியான வழி செய்யலாம் என்று முடிவு கட்டிக்கொண்டு, ஜன்னலின் ஓரமாக நின்ருள்.

அச் சமயம் உள்ளே கலகம் முடிந்துபோய், அக் கலகக் கொள்ளிவாய்ப்பிசாசு, வெளியில் வருவதையறிந்த சுமதி, உடனே தடதட வென்று பக்கத்துத் தடுக்கின் பின்னுல் மறைந்தாள். அப் பாதகி சென்றதும் தான் ஒன்றும் அறியாததுபோல் உள்ளே வந்து தன் வேலையைக் கவனித்தாள். தினத்தைவிட இன்று சுமதிக்கு அதிக வசவும் சிடுசிடுப்பும் கிடைத்தது வியப்பா? கலகத்திற்கு இடந் தருபவர்கள், நிதானம் தவறுவது சகஜமல்லவா?

தன் கணவனின் மாறுதலுக்குக் காரணத்தை யறிந்த பிறகு சுமதியின் மனங் கொதிக்கிறது. ஆத்மநாதனை அடியோடு படு குழியில் தள்ளுவதற்கு ஏதோ பள்ளம் தோண்டுவது மட்டும் தெரிந்ததே யன்றி அது என்ன விதமானதென்று தெரியவில்லையே! எத்தகைய ஆபத்தோ! ஆத்மநாதனின் உயிருக்கே ஹானி விளை வித்து விடுவார்களா! அல்லது அவரை வேண்டுமென்றே கொன்று விடுவார்களா? ஒன்றும் தெரியவில்லையே! இந்த ஆபத்தைத் தடுக்கக் கடவுள் ஒரு மார்க்கத்தைக் காட்டமாட்டாரா! என்ற எண்ணமே மனத்தைக் கலக்குகிறது.

அதன் பிறகு, எப்படியோ நாட்கள் மட்டும் நான்கு கடந்து விட்டன. ஆத்மநாதன், இவள் கண்ணில் படவே யில்லை. ஆத்ம நாதன் சங்கீத ஆராய்ச்சியை ஆரம்பித்தகாலத்தில் செய்ததைவிட இப்போது மனம் உடைந்த பிறகு, அந்த ஒரே வழியில் ஈடுபட்டு அதில் மும்முரமாக வேலைசெய்ய வாரம்பித்தான்.

ஆஸ்பத்திரியில், " சங்கீதப் பிரிவு " (ம்யூஸிக் வார்ட்) என்ற பெயரில் அவன் புதிதாக ஓர் கட்டிடம் கட்டி சங்கீதத்தை விரும் பும் நோயாளிகளை எல்லாம் அந்த இடத்தில் படுக்க வைத்தான். எந்தெந்த நோய்க்கு எந்த மாதிரி சங்கீதம் பிடிக்கிறது என்கிற தைத் தானே நேரிலிருந்து ஆராய்ச்சி செய்து, அந்தந்த மாதிரி அதற்கு ஏற்பாடு செய்தான். ஆஸ்பத்திரியில், ரேடியோவையும் வைத்தான்.

எந்தச் சமயம் எந்த ராகத்தைப் பாடினுல் நோயாளிக்குச் சந்தோஷ முண்டாகிறது என்பதையும் ஆராய்ச்சி செய்தான். தன் ஆராய்ச்சியில் தினே தினே அவன் காணும் பலனைக் கண்டு அவன் இதயம் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தது. இவனை ஏசிப் பேசிப் பரிகாசம் செய்து கொண்டிருக்கும் சில டாக்டர்களுக்கு உண்டாகிய சந்தேகத்தை நேருக்கு நேர் விளக்கிக் காட்டியது மட்டுமல்லாமல், அவர்களில் சிலருக்குத் தேக அசுகம் ஏற்பட்டிருக் கையில், தன் ஆஸ்பத்திரிக்குப் பலவந்தமாகக் கொண்டு வந்து தன் ஆராய்ச்சியை உபயோகித்துக் காட்டினுன்.

இவனை ஏசிய ஒரு டாக்டர், தன் கையில் கட்டி புறப்பட்டு வலி தாங்காது அவஸ்தைப் படும்போதும், இரவு காலத்தில் தூக்கம் வராது தவிக்கும்போதும் சகானா, கானடா, மோகனம் முதலிய ராகங்களை வீணையில் வெகு ஆனந்தமாக வாசிக்கச் செய்தான். வந்த டாக்டர், தன்னை மீறிய ஆனந்தத்தில் சிறிது நேரமாவது தூங்கி, நோயின் பாதையை மறந்திருந்தார்.

அதுமுதல், ஆத்மநாதனின் ஆராய்ச்சியில் உள்ள மகிமையை அவர் உணர்ந்து, அவரே பல டாக்டருக்கும் அதை விளக்கிக் காட்டினார். இந்தப் புது மாதிரி ஆராய்ச்சியில் சிகிச்சை பெற்ற அநேக நோயாளிகள் இதைப் பாராட்டிப் பல பத்திரிகைகளிலும் எழுதியதோடு, பொதுஜனங்கள் எல்லோரும் ஒன்றுகூடி பெரிய கூட்டம் போட்டு விருந்து நடத்தி, டாக்டருக்குப் பரிசும், பதக்கமும் வழங்கத் தீர்மானித்து விட்டார்கள்.

ஏற்கெனவே பொறாமை கொண்ட கூட்டத்தினருக்கு இதைக் கேட்டவுடனே இன்னும் ஆத்திரம் அடித்துக்கொண்டு வந்து விட்டது. இந்தக் காரியத்தை நடக்கவிடாது தடுப்பதற்கு என்ன வழி செய்யலாமென்று ஆரம்பித்தார்கள்.

இதற்கு, ஆரம்ப கர்த்தாக்கள் ஆரோக்யசாமி, விமலா, கமலா ஆகியவர்களாகும். நாம், எந்த வழியில் அவனை அவமானப்படுத்தலாமென்று யோசித்து, அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

ஆரோக்யசாமியின் வீட்டுத் தோட்டத்தில் இரவு 8 மணிக்கு ஓர் கூட்டம் காணப்பட்டது. ஆரோக்யசாமி கூட்டத்திலுள்ளவர்களை நோக்கி, "என்ன! நான் சொல்லியதெல்லாம் புரிந்ததா? புரியாவிட்டால், மீண்டும் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

பெண்பாடகிகளெல்லாம், உங்களை ஒழுங்கீனமாய் நடத்தி, ஆத்மநாதன் இம்சை செய்கிறான் என்பதைக் கண்டனக் கூட்டத்தில் ஆவேசத்துடன் பேசவேண்டும். நோயாளிகளில் சிலர், ஐயோ! எங்களுக்குப் பாட்டும் பிடிக்கவில்லை; எழவு மில்லை. பாட்டுப் பிடித்ததாகவும், அதனால் நோய் குணமாகிவிட்டதாயும் நடித்தாலொழிய சரியாய் வைத்தியம் செய்யமாட்டேன் என்றும், அதிகமாகப் பில் போடுவதாயும், வியாதி குணமாகாது இழுத்தடிக்கும்படிக்கும் செய்வதாகப் பயமுறுத்தியதாயும் சொல்லி, வெளுத்துவாங்கவேண்டும். தெரிந்ததா! மற்றகாரியங்களைப் பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன். இதோ! பேருக்கு ஒரு 50 ரூபாய் நோட்டு" என்று கூறி, அதைக் கொடுத்தான். அங்குக் கூடியிருந்தவர்கள் சந்தோஷத்துடன் ரூபாயை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள்.

ஆத்மநாதனிடம் அன்பு கொண்டுள்ள கட்சிகளின் ஏற்பாடும் பலமாக நடந்துவந்தது. ஆத்மநாதனுக்கு முன் விஷயம் தெரியாது.

தனக்கு அன்புடன் அளிக்கப்போகும் விஷயம் மட்டும் தெரிந்தும் மனம் பூரிக்கவில்லை. பலவிதத்திலும் மனத் திருப்தி இருந்து அதோடு எல்லாம் சேர்ந்தால், சந்தோஷம் உண்டாகும். அவன் தைரியமாய் தான் எடுத்த காரியம் முடிந்து வெற்றிபெற வேண்டுமென்ற ஆர்வத்தினால், மன வலிமையுடன் வேலை செய்கிறானேயன்றி, உண்மையில் அவனுக்குள்ள சோர்வுக்கு அளவே இல்லை.

இரவு வந்துவிடுகிறதே என்று நோயாளிகள் நடுங்குவதுபோல் ஆத்மநாதனின் கதியும் ஆகிவிட்டது. அவன், ஆனந்தமாய் ஒரு காலத்தில் தான் பொழுது போக்கியதும் உண்டா என்று நினைக்கும் படியான நிலைமைக்கு வந்துவிட்டான்.

நித்திரா தேவியும் நிராகரித்த ஆத்மநாதன், பால்போல் காயும் நிலவையும் நக்ஷத்திரக் கூட்டங்களையும் வராண்டாவில் நின்று சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தபிறகு, வராண்டாவிலிருந்து தோட்டத்திற்குச் செல்லும் வழியிலுள்ள ஓர் பாறைமீது வந்து உட்கார்ந்தான்.

நள்ளிரவு என்ற அச்சமோ, பயமோ எதுவுமே அவன் மனத்தில் தோன்றவில்லை. "நம்முடைய கதியாவது எப்படியேனும் இருக்கட்டும். இந்தச் சுமதியின் தலைவிதிக்கு மாற்றென்பதே இல்லையே! மனத்தினாலும் ஒரு பாபமும் அறியாத அந்தப் பேதை வீண் அபவாதச் சொல்லையும் கேட்டு அடியும் உதையும் திட்டும் படுவதைக் கண்டுச் சகிக்க முடியவில்லையே! அவளை, நான் பாடவேண்டாமென்று கூறிவிட்டதையும் எண்ணி, தான் படும் இம்சையையும் சகிக்காது தற்கொலை புரிந்துகொள்வாளோ! என்ற பயமல்லவா வாட்டுகிறது. இதற்கு என்ன செய்வது!" என்று எண்ணமிட்டவண்ணம் அவன் யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

அவனுக்குப் பின்புறமிருந்து துக்கத்தினால் விம்மும் குரலில் "டாக்டர்! டாக்டர்!" என்று கூப்பிடும் ஓசைக் கேட்டு, ஆத்மநாதன் திடுக்கிட்டவனாய்த் திரும்பிப் பார்த்து, வியப்பும் ஒருவிதமான மன அதிர்ச்சியுங் கொண்டவனாய், "சுமதீ! இதென்ன இந்த நடு நிசியில் நீ எங்கு தனியாய் வந்தாய்? உன் கணவனுக்குத் தெரிந்தால்........

என்று முடிப்பதற்குள், சுமதி கட்டுமீறிய விசனத்துடன் பேசத் தொடங்கி, "டாக்டர்! மன்னிக்கவேண்டும். நான் இந்த ஒன்னரை வருஷகாலத்தில் என்றைக்காவது இம்மாதிரி வந்தது உண்டா? வர நினைத்ததாவது உண்டா? என் புருஷனுக்குத் தெரியாமல்தான் வந்திருக்கிறேன். நீர் அதை வித்யாஸமாய் எண்ணவேண்டாம்.

ஆத்ம :—வித்தியாசமாய் நான் எண்ணுவதற்கு என்ன இருக்கிறது? சுமதி! அன்று விழுந்த அடியைப்போல் இன்னும் உனக்கு விழப்போகிறதே—என்று என் மனம் தவிக்கிறது.

சுமதி :—உம். கடவுளே என் மண்டையில் செம்மட்டியால் அடித்துவிட்டார். இனி, இந்த அடி எல்லாம் ஒரு அடியா! என்னை அடித்தாலும் கொன்றாலும் பாதகமில்லை. நான் இன்று கேள்விப்பட்ட பயங்கரமான செய்தியைத் தங்களிடம் தெரிவிக்கவே, இப்படி இந்த நள்ளிரவில் இங்கு வந்தேன். அந்த மனிதர் இந்தமாதிரி குணம் மாறி என்மீது பகையும் சந்தேகமும் கொண்டதற்குக் காரணம் இங்கு வெகு சாதுவைப்போல் வேலை பார்க்கும் ராஜமும் ஆரோக்கியசாமியின் கூட்டமுமே என்பது தெரிந்தது. (நடந்ததைக் கூறி,) டாக்டர்! என் கதி எப்படியாகிச் செத்தாலும் இனி ஒன்றுதான். உங்களுக்குப் பேராபத்து விளைவிப்பதற்குச் சதியாலோசனை செய்வதாகச் சொல்லியதுதான் என் உயிரைக் குடிக்க வரும் பெரும் பூதமாகத் தோன்றி வதைத்தது.

ஆத்ம :—அட பயித்தியமே! சுமதி! உனக்கு இன்னும் உலக விவகாரங்கள் தெரியவில்லையாம்மா! எதிரிகளின் பொருமை அதிகரிக்க அதிகரிக்கத்தான் உண்மையான மதிப்பும் பிரகாசிக்கும். பொறுமைதான், பொருமைக்குத் தகுந்த மாத்து. அப்போதுதான் நாம் எடுத்த காரியத்தின் முழு வெற்றியையும் காணலாம். எதிரிகளின் பொருமைச் செய்கையே இதற்கோர் பிரசாரமாகிறதால், அவர்கள் நன்மையைச் செய்வதாகவே நான் நினைக்கிறேன். நீ, எல்லாம் நன்மைக்கே என்று சும்மா இரு. அதற்காக எனக்குக் கவலையே இல்லை. நீ வருத்தப்படாதே!

சுமதி! உனக்கு இத்தகைய சங்கடத்தை உண்டாக்கியவர்கள் அவர்களா? ஐயோ! அதைக் கேட்டுக்கொண்டா அந்த மனிதன் இந்தமாதிரி பிதற்றுகிறான். இதுதான் எனக்கு வேதனையாய் இருக்கிறது.

சுமதி :—உம். உங்கள் விசனம் உங்களுக்கு; என் விசனம் எனக்கு. டாக்டர்! என்னை எதற்காகப் பாடவேண்டாமென்று நிறுத்திவிட்டீர்கள்?

டாக்டர் :—உன்னுடைய க்ஷேமத்திற்காகத்தான் சுமதி! நீ வெளியே செல்வதையே உன் கணவன் குற்றமாகக் கொள்வதால், நிறுத்தச் செய்தேன்.

சுமதி :—டாக்டர்! அப்படியானால் என் பிழைப்பு....(கண்ணீர் வழிந்துவிட்டது.)

டாக்டர் :—சுமதி! கண்ணீர் விடாதே. என் ஜீவன் உள்ள வரையில், உன் பிழைப்பிற்கு யாதொரு பங்கமும் இல்லை.

சுமதி :—ஐயோ! நான் மாட்டேன்! வீணுக உட்கார்ந்து என் சரீரத்தை வளர்க்கமாட்டேன். நான் உட்கார்ந்த இடத்திலேயே செய்யும் வேலை ஏதேனும் கொடுங்கள். இல்லையேல் நான் பிச்சை எடுக்கத்தான் போகவேண்டும்.

டாக்டர் :—ஹா! ஹா! என்ன சொன்னுய்? சுமதீ! வீணுகப் புண்ணில் கோலிடாதே! என் இதயத்திலுள்ள ரணத்தை அறியாது 'கல்யாணம் செய்து கொள்' என்று என்பெற்ருேர்கள் ஒரு புறம் துளைப்பது போதாமல், நீயும் கூறவேண்டுமா! வேண்டாம். வேண்டாம்! சுமதீ! என்னைச் சோதிக்காதே!

சுமதி :—டாக்டர்! எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. உங்கள் வாழ்நாள் முற்றும் இம்மாதிரி துன்பம் நிறைந்த பாழ் நாளாகிவிட்டதற்கு மகா பாவி நான்தானே காரணம் என்பதை நினைக்க நினைக்க, என் மனம் வெடித்துவிடும் போலிருக்கிறது. ஒரு சமயம் தற்கொலையை வெறுத்த என் மனம் இப்போது அநேக சந்தர்ப்பங்களில் அதை விரும்பித் துடிக்கின்றது. தற்கொலை செய்துகொண்டு விடலாமா என்ற துணிபும் என்னை மீறி வந்துவிடுகிறது....

என்று முடிப்பதற்குள், ஆத்மநாதனுக்கு இம் மொழியைக் கேட்டுச் சகிக்கமுடியாது, "ஆ! ஆ! ஆ! என்ன சொன்னுய்? சுமதீ! உன்னுடைய இந்த வார்த்தையே என்னைக் கொலை செய்வது போலிருக்கிறது. கடவுள் கட்டளைப்படி இந்தப் பாழுலகில் வந்து பிறந்தோம். அவன் விதித்த விதியின்படி அனுபவித்து விட்டல்லவா மறையவேண்டும். வீணுக ஏன் பாபத்தைச் செய்யப் பதறுகிருய்?

சுமதீ! நான் படும் இம்சைகளை விடவா நீ படுகிருய்? காதல் சம்பந்தமாக உள்ளத் துன்பம் மட்டும் இருவருக்கும் சமமாகிவிட்டது. அதற்குமேல் எனக்குள்ள வேதனைகள் எத்தனை தெரியுமா? அருமையாய் என் ஒருவனுல் பிரபஞ்சம் என்று இருக்கும் என் பெற்ருேர்களின் ஆவலைத் தீர்க்காது அவர்களை வருத்தித் துன்பத்திற்குப் பாத்திரமாவது ஒன்று. தினே தினே என் கீர்த்தி பெருகுவதால் உண்டாகும் சந்தோஷ உபத்திரவம் வேறு. என் தொழிலில் எள்ளளவும் மாருமலும் விபத்தில்லாமலும் நடந்துகொண்டு வர வேண்டுமே என்ற திகில் ஒன்று. என்னுடைய ஆராய்ச்சியில் வெற்றியடைய வேண்டுமே என்ற ஏக்கம் ஒன்று. எதிரிகளின் பாணத்தினுல் ஒரு ஆபத்தும் நேராதிருக்கவேண்டுமே என்கிற பயம் ஒன்று. என்னுடைய நெறியும் ஒழுக்கமும் என்றும் தவருதிருக்க வேண்டுமே என்கிற ஓயாக் கவலை சதா ஒரு பக்கத்தில் இருந்து கொண்டே யிருக்கிறது.

சுமதி! இத்தனைக்கும் மத்தியில் நான் ஊசலாடுகிறேன். என் நிலை எப்படி யிருக்குமென்று நான் சொல்லவேண்டுமா! செய்துள்ள கருமத்தை அனுபவித்துத்தானே தீரவேண்டும். மனத்தைத் தளரவிடாதே. சுமதி! உனக்கு உன் கணவனின் வசை பாணத்தையும் உன் இதயப் புண்ணையுந் தவிர வேறு என்ன இருக்கிறது? என்னைப் பார்த்து நீ தேறுதலடை. நீயும் தற்கொலை புரிந்துகொண்டு என்னை இன்னும் மீளாத் துயரக் கடலில் தள்ளி வதைக்காதே! இந்த ஒரு உபகாரமாவது நீ செய்யத் தவருதே! சுமதி!" என்று தொண்டையை அடைக்கும் துக்கத்துடன் கூறினன்.

இதைக் கேட்டதும் துக்கம் தாங்க முடியாது சுமதிக்குப் பீறிக்கொண்டு வந்துவிட்டதால், அதை அடக்க மாட்டாது புலம்பியபடியே, "டாக்டர்! நான் உங்கள் கல்யாண வார்த்தையை எடுத்துவிட்டு, அன்றும் உங்கள் மனத்தை நோகச் செய்தேன். இன்றும் இப்படியாகிறது. என்னை மன்னித்துவிடுங்கள், டாக்டர்! உங்களுக்காக நான் இப்பாழும் உயிரை மாய்த்துக் கொள்ளாதிருக்கிறேன். இனி, தற்கொலை என்னும் வார்த்தை எடுக்கமாட்டேன். இது நிச்சயம்; இது சத்தியம்."

என்று சுமதி கலங்கியவாறு சொல்லும்போது, அவர்களுக்குப் பின்னலிருந்து ஒரு குரலில், "ஊஹூம்! ஜோடி பட்சியும் அகப்பட்டுக்கொண்டது. என் மனத்திலிருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் தீர்ந்தது. ஒழிந்தது.....சண்டாளி! அவனுக்காகவா உயிர் வாழப் போகிருய்?" என்ற வார்த்தைகள் கேட்டு முடிப்பதற்குள் பலமான இரும்புக் கம்பியினல் ஓங்கி இரண்டு மூன்று அடிகள் ஆத்மநாதனின் தலையிலும், சுமதியின் தலையிலும் விழுந்தன. 'ஹா!' ஒரே குரல். அடுத்த க்ஷணம் ரத்த வெள்ளத்தில் ஆத்மநாதன் மிதந்தான். சுமதியும் அதே கதியாகிவிட்டாள் என்பதைக் கூற வேண்டுமா!

## 40

### அன்பின் த்யாகம்—அகந்தையின் வேகம்

"வஸுந்தராவைப்பற்றி ஒன்றுமே தகவல் காணவில்லையே!" என்று நம் வாசகர்கள் நினைக்கலாம். அவள், கல்கத்தா சென்ற வுடனே அவளை மணக்க ஆவல்கொண்டுள்ள அனந்தராம் அவர்களை வரவேற்று உபசரித்தார். வஸுந்தரா, அவரை மனப்பூர்வமாகக் காதலிக்கவில்லையென்றாலும் தந்தைக்காக அவரை மணக்க இசைந்தாள்.

ஆனால், அவள் தன் ரகஸியத்தைத் தன் கணவன் விவாகத்திற்குப் பின்னர் அறிந்தால் விபரீதத்திற்கு இடமாகும் என்ற முன் யோசனை யுடையவ ளாகையினால், சென்ற அன்றே அவனைத் தனியே சந்தித்துத் தனது ஆதிகால ரகஸியம் பூராவும் கூறி விட்டாள்.

ஆனால், அவளே பிரமிக்கும் வண்ணம் அனந்தராம் அவ் விஷயங்கள் முற்றும் தனக்குத் தெரியும் என்றும், அது நிறைவேறாது போனதனால்தான் தான் விவாகத்திற்குக் கேட்டதாயும், அதைப் பற்றித் தனக்கு யாதொரு சந்தேகமோ வித்தியாசமோ இல்லை என்றும் வாக்குக் கொடுத்த பிறகே விவாகமாயிற்று.

கல்யாணமாகி இரண்டு மாதங்கழித்து திரும்பி வந்தார்கள். ஆசிரமத்தின் தலைவி போய்விட்டதால், அந்த உத்தியோகத்திற்கு வஸுந்தராவே அமர்ந்து, வெகு ஒழுங்காகவும் சிரத்தையுடனும் கவனித்து வந்தாள். தன்னுடைய நன்மையையும் ஆத்மநாதனுடைய நன்மையையும் உத்தேசித்து, அவள் அவனை அடிக்கடிச் சந்திக்காது இருந்துவிட்டாள்.

சுமதியின்பால் ஆத்மநாதன் காதல் கொண்டுள்ள விஷயமும், சுமதியின் துரதிருஷ்ட சரிதையும் அறிந்த பின்னர் வஸுந்தராவுக்குத் தாங்க வியலாத துக்கமாகிவிட்டது. எதிரிகளின் சூழ்ச்சியையும் கவனித்துக்கொண்டே இருந்தாள். தன் தாயின் மரண வாக்கையும், தகப்பனாரின் கட்டளையையும் உத்தேசித்துப் பகிரங்கமாக எதுவும் செய்யமாட்டாது, தவித்தபடி ரகஸியத்தில் தன் கணவனின் உதவியோடு எல்லாவற்றையும் கவனித்துவந்தாள்.

சுமதியின் மீது ஆத்மநாதனின் மனம் சென்று லயித்ததால், பொறாமைக்காரியான விமலா ஆச்ரமத்திலிருந்து சுமதியைப் பழியோடு நீக்கும் பொருட்டு, அங்குள்ள ஓர் தூர்க்குணியைக் கைக்குள்போட்டுக் கொண்டு, ஒரு மருந்தைச் சிலருக்குமட்டும் ஆகாரத்தில் கலந்துபோட்டு விட்டு, சுமதியின் மீது பழி சாரும்படிச் சதி செய்திருந்தாள்.

அபலையின் பக்கம் தெய்வம் இருப்பதை யார் அறிவார்கள்? அந்தத் தூர்க்குணி விஷயத்தை அறியாது எல்லா ஆகாரத்திலும் போட்டுவிட்டதால், அது ஒருவரால் நடந்த குற்றமென்று கூற முடியாது, ஏதோ வழ வழ கொழ கொழ வென்று மழுப்பலாகி விட்டது. வேறொரு குற்றத்திற்காக அதே தூர்க்குணி வேலையினின்று நீக்கப்பட்டாள்.

இந்த விஷயங்களை எல்லாம் வஸுந்தரா, ஆச்ரமத்திற்கு வந்த பிறகே அறிந்து, மிகவும் ஜாக்ரதையாகக் கவனிக்கலா

ளள். ஆரோக்யசாமியின் கூட்டத்தார் செய்துள்ள சதியை அதில் சம்பந்தப்பட்டவர்களாலேயே ரகஸியமாய் அறிந்து கொண்ட வஸுந்தரா, அதைத் தடுப்பதற்காக வெகு தீவிரமான முயற்சியைத் தன் கணவன் உதவியுடன் எடுத்துக்கொண்டாள்.

ஸி. ஐ. டிக்குமேல் ஸி. ஐ. டி யாக ஆனந்தராமும் வஸுந்தராவும் வேறு வேடத்தில், இவர்களைக் கவனித்து வருகையில், ஆரோக்யசாமியின் தோட்டத்தில் நடந்த விஷயத்தையும் எப்படியோ அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள்.

அன்றே நள்ளிருளில் அந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு பாடகர்களைப் பிடித்து, அவர்களை நோக்கி, "நீங்கள் இந்த 50 ரூபாய்க்காக ஆயுசு பூராவும் சிறைச்சாலையிலிருக்கவேண்டிய சுகத்தைத் தேடிக்கொண்டீர்கள். இந்த நோட்டு என்ன நோட்டு என்று உங்களுக்குத் தெரியுமா? இது முற்றிலும் ஓர் தனவந்தனின் வீட்டிலிருந்து கொள்ளையடித்த நோட்டுகளாகும். இதை ஒவ்வொன்றையும், நம்பருடன் அத் தனவந்தன் போலீஸில் எழுதிவைத்திருக்கிறார். 'திருடன் பெண்டாட்டி என்றும் கம்மனாட்டி' என்பது நினைவில் இருக்கட்டும்.

பேதைகளாகிய உங்களை அனுவசியமாகக் கிளறி விட்டுக் கெட்ட பெயரும் எடுத்து, திருடன் என்ற பெயரையும் கொடுத்துச் சிறைக்கும் அனுப்புதற்கு இது ஓர் சூழ்ச்சி என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு ஒருவிதத்திலும் தீமை செய்யாது இதுவரையில் உபகாரம் செய்து காப்பாற்றி வந்துள்ள டாக்டர் மீது பழி கூறிக் கண்டனம்போட நினைப்பது கடைசியில் பேராபத்தாக முடியும். ஜாக்ரதை! என்றென்றும் அவர் தயவில் பிழைப்பும் கௌரவமும் அடைவதை மறக்காதீர்கள். நான் இதை உங்கள் கூட்டத்திற்கே எச்சரிக்கை செய்கிறேன்.

நீங்கள் புத்திசாலிகளாக இருந்தால், கண்டனக் கூட்டம் என்பதை மாற்றி, அவரைப் பாராட்டும் கூட்டம் போட்டு, உங்களைக் கெடுக்கவிருந்த எதிரியின் பல்லைப் பிடுங்க முற்படுங்கள். இதற்கு நான் சகாயம் செய்கிறேன்" என்று வஸுந்தராவும், அனந்தராமும் கூறி, எச்சரித்துவிட்டார்கள்.

அந்தப் பாடகிகளுக்குக் குலை நடுக்கமெடுத்துக் கொண்டது. உடனே இரவோடிரவாய் அக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட பலரையும் ஒன்றுகூட்டி, தாம் வீணாகக் கெட்டுப்போகாதபடிக்குத் தீர்மானித்துக்கொண்டார்கள். இதற்கு வேண்டிய சகாயமெல்லாம் தாம் செய்வதாகவும் வாக்குக் கொடுத்ததோடு, அத்தனை நோட்டுக்களையும் போலீஸாரிடம் ஒப்புவிக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்த பின்னர் தம் வீட்டிற்குச் சென்றார்கள்.

அதே நள்ளிரவில் நாம் முன் அத்யாயத்தில் தெரிவித்தபடி, ஆத்மநாதனும் சுமதியும் மண்டையில் விழுந்த அடியுடன் ரத்தத்தில் மிதப்பதைப் பார்த்ததும் அவர்களை அடித்த அக் குஷ்டரோகியின் கதி கலங்கியது. எந்த வேகத்துடன் இம்மாதிரி செய்தானோ அந்த வேகம் ஒரு க்ஷணத்தில் அடங்கியதுபோல் கைகால்கள் நடுங்க, தேகம் படபடக்க ஒரு விதமான பதைப்பும் திகிலும் உண்டாகி விட்டன.

சோமு மட்டும் ஆத்மநாதன் நிலைமையைத் தெரிந்து அடிக்கடி அவனைக் கவனித்து வருவது வழக்கம். அன்றும் வழக்கம்போல் வந்து பார்க்கையில் படுக்கையில் ஆத்மநாதன் இல்லாததைக் கண்டு மெல்ல சுற்றுமுற்றும் பார்த்தான்.

அதே சமயம் ஆத்மநாதனின் கூச்சல் கேட்டவுடனே சோமு ஒட்டமாக ஓடினான். யாரோ ஆள் வருவதைக்கண்ட குஷ்டரோகி ஒரு மரத்தடியில் புகுந்து கொண்டான். இதை, சோமு கவனிக்காது ஆத்மநாதனிடம் ஓடிப்பார்த்ததும் திடுக்கிட்டு நடு நடுங்கிப் போய், "ஐயோ! டாக்டர்! டாக்டர்! இதென்ன விபத்து" என்று கத்தியவாறு டாக்டரைத் தூக்கி மடியில் கிடத்திக்கொண்டான்.

ஆத்மநாதனின் உயிர் ஊசலாடுகிறதென்றே கூறலாம். அவன் அத்தகைய நிலைமையிலும், தனது பொறுமையையும், த்யாகத்தையும் கைவிடாது மெல்லிய குரலில் பேசத்தொடங்கி, "சோமு!....கத்தாதே....விஷயம் எல்லாம் எனக்குத் தெரியும். நீ பார்த்தாலும், ஆளைக் காட்டிக்கொடாதே!....முதலில் சுமதியைக் கவனி....தலைவிதியின் திருவிளையாடல் ஒருபாபமும் செய்யாதவர்களுக்கு இந்தத் தண்டனையாயின், செய்தவர்களுக்குக் கடவுள் என்ன விதிப்பாரோ? இதைக் கலவை செய்யாதே. விழுந்துவிட்டதால் அடிபட்டதென்று சொல்லு....பேசமுடியவில்லை....உண்மைக்கு இது காலமில்லை. சத்தியத்திற்கு மதிப்பில்லை....சோமு!....அழாதே!....சுமதியை முதலில் கொண்டுவிட்டு வா!" என்று திணறித் திணறிக் கூறினான்.

சோமு, ஒரே பாய்ச்சலாக சுமதியைக் கொண்டுவிட்டு விட்டு, ஆத்மநாதனைத் தனது அன்பின் பலத்தினால் சிறிய குழந்தையைப் போல் தூக்கிக்கொண்டு போய் விட்டுத் தலையைப் பார்த்தான். கண்றாவியைக் கண்டு சகிக்கமுடியாது துள்ளினான். பெரிய டாக்டருக்கே இக்கதியாகிவிட்டதென்றால், வேறு என்ன செய்வான் பாவம்?

ரத்தம் தலையிலிருந்து எராளமாய்ப் போய்விட்டதால், ஆத்மநாதனுக்குப் பிரக்ஞையும் போய்விட்டது. சோமுவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கலவை செய்யவேண்டாமென்று என்னதான் சொல்லியும் அவனுக்குப் பயம் அதிகரித்து விட்டதால், இரும்புச்

சாமான் ஒன்று தலைமீது விழுந்துவிட்டதாகச் சாக்குக்கூறி, பெரிய டாக்டருக்கெல்லாம் டெலிபோன் செய்துவிட்டான்.

அடுத்த நிமிடமே கார் பின் காராக ஊர்வலம்போல் 'பும் பும்' என்று ஊதிக்கொண்டு பல கார்கள் அங்கு வந்து விட்டன. ஆனால் ஆத்மநாதனுக்கு இதொன்றுமே தெரியாது. வந்த டாக்டர்களுக்கு சோமு கூறும் சாக்கு நம்பிக்கைப் படவில்லை. யாரோ விரோதிகள் வேண்டுமென்று அடித்திருப்பதாகவே நிச்சயித்து விட்டார்கள். ஆனால் விஷயம் என்னவோ யாருக்கும் தெரியாது. பலமாக சிகிச்சை செய்ய வாரம்பித்தார்கள். ஆத்மநாதன் தலையில் தையல் போடும்படியான அவசியமும் இருப்பதாகத் தெரிவித்ததை யறிந்த சோமுவுக்கு நடுக்கம் உண்டாய்விட்டது.

ஆஸ்பத்திரியில் நடக்குந் தடபுடலும், மோட்டார் செல்வதும் பெரிய குழப்பமாகிவிட்டது. மரத்தடியில் மறைந்த குஷ்டரோகியின் காதில் ஆத்மநாதன் கூறிய மொழிகள் பட்டு அவன் இதயத்தைக்கலக்கி வியப்புக் கடலில் மூழ்கவைத்தன. 'ஆளைக் காட்டிக் கொடாதே!' என்ற வார்த்தை அவன் செவியில் பலதரம் ஒலித்து அவனைக் கதிகலங்கச் செய்துவிட்டது.

"ஆத்மநாதன் உண்மையில் என்னைத் தொலைக்கவேண்டு மென்றெண்ணுபவனாக விருந்தால் இதையோர் சாக்காக வைத்துக் கொண்டு, என்னைத் தொலைத்துவிட மாட்டானா? அதை விடுத்து இத்தகைய ஆச்சரியமான வார்த்தையைச் சொல்வதைக் கேட்டதும் என் மனம் நான் செய்துவிட்ட விபரீத குற்றத்தை எண்ணித் தவிக்கின்றதே! ஒருவேளை ஆத்மநாதன் உயிர் இந்த விபத்தினால் நீங்கி விடுமாயின் நம் கதி என்னவாகும்? எத்தனை ஜென்மங்களில் என்னென்ன பாபத்தைச் செய்தோ இத்தகைய கர்மவியாதியை அனுபவிக்க விதியமைந்தது. இன்னும் கொலைபாதகமும் சேர்ந்து விட்டால்?"....என்று நினைக்கும்போது அவன் நிலைமை தடுமாறியது.

தன்னைக் கொலை பாதகன் என்று பலபேர் ஏககாலத்தில் கூவுவதுபோன்றும், தன்னைச் சுற்றிப் போலீஸார் நிற்பதுபோன்றும், தன்னைக் கலகம் செய்து மனதை மாற்றியவர்களும் தற்போது 'இவன்தான் குற்றவாளி' என்று கூசாமல் சாக்ஷிக்கூறுவதுபோலும் அவனுக்குத் தோற்றங்கள் உண்டாகிவிட்டன. அப்போதே அவனுக்குச் சுமதியின் பரிசுத்தமும், ஆத்மநாதனின் அரிய தியாகமும் தெரிந்தன. கார் பின் கார் வருவதைக்கண்டு அஞ்சி ஓடவாரம்பித்தான்.

# 41

## புதுமை விளைவுகள்—பொங்கலோ பொங்கல் !

ஆத்மநாதனுக்கும் சுமதிக்கும் இத்தகைய விபத்து நேர்ந்து விட்டவிஷயம் மறுநாள் ஊர் பூராவும் தெரிந்துவிட்டது. அப்போதுதான் வஸுந்தராவுக்கும் தெரிந்து ஓடி வந்தாள். ஆரோக்கியசாமியின் கோஷ்டியினல்தான் இம்மாதிரி விபத்து நேர்ந்துவிட்டதென்று வஸுந்தரா நினைத்தாளேயன்றிக் குஷ்ட ரோகியைப்பற்றி யாரும் நினைக்கவே இடமில்லை. வஸுந்தரா, இவர்களின் பரிதாபத்தைக் கண்டு துடித்தாள். தந்தி யடித்து மாமனை வரவழைத்தாள். மீனலோசனியம்மாளும் துடித்த வண்ணம், மகனிடம் உட்கார்ந்திருந்தாள்.

ஆத்மநாதன் தலையில் தையல் போட்டிருப்பதால், அதிகமான அதிர்ச்சியோ, கவலையோ உண்டானல் மூளைக்கே ஆபத்துவரும் என்றெண்ணிய டாக்டர், அவன் சில தினங்கள் ஒரு மாதிரியான மயக்கத்துடனேயே இருப்பதற்கான மருந்துகள் கொடுத்தார்.

சுமதிக்கு மனம் வெந்துபோய், மெலிந்த பலஹீனமான நிலைமையில் இருப்பதால், அந்த அடி தாங்காது விபரீதமாகிவிட்டது. அவள், சுயவுணர்வுடன் பேசாவிடினும், "டாக்டர்!........ஹா........ பயங்கரம்!"....என்றுமட்டும் அடிக்கடி கத்திக் கொண்டிருந்தாள்.

அவளுக்குச் சுய உணர்வு வந்து நன்ருகக் கண்திறந்து பார்க்கும்போது, மத்தியில் நான்கு நாட்கள் சென்றுவிட்டன. எங்கும் ஏதோ அந்தகாரம் போலும், பயங்கரமாயும் அவளுக்குத் தோன்றியது. எனினும், "டாக்டர்! டாக்டர் எங்கே?....ஐயோ! அவர் ரத்தத்தில் மிதந்தாரே பிழைத்தாரா? எங்கே டாக்டர்?" என்று பெரிதாக அலறினள்.

அச் சமயம் வெகு சாந்தத்துடன் அவள் பக்கவில் உட்கார்ந்திருந்த வஸுந்தரா, அவளை அமர்த்தியவாறு, "சுமதி! பதருதே!.... உனக்காகக் கடவுள் டாக்டருக்கு உயிர்ப் பிச்சையை அளித்திருக்கிருர். ஆனல், இப்போது நீ பார்க்க முடியாது. பிடிவாதமாய்ப் பார்த்தால், டாக்டருக்கு மூளையே கலங்கிவிடும். பொறுமையை இழக்காதே!"....என்று சமாதானம் கூறிப் படுக்க வைத்தாள்.

சுமதி, வியப்புடன் வஸுந்தராவைப் பார்த்து, "தாங்கள்.... டாக்டர் வஸுந்தராதேவி யல்லவா?....டாக்டருக்கு ஆபத்து

ஒன்று மில்லையே!.... அடித்தவர்....என்று வாயெடுத்ததும் 'ஆளைக் காட்டிக் கொடாதே!' என்று ஆத்மநாதன் கூறியது ஞாபகத்திற்கு வந்ததும் இழுத்தார்ப்போல் நிறுத்திவிட்டுத் தேம்பித் தேம்பி அழ வாரம்பித்தாள்.

உடனே வஸுந்தரா, அவளைக் கட்டி யணைத்தவாறு, "சுமதீ! சகல விஷயமும் எனக்குத் தெரியும். புலம்பாதே!" என்று முடிப்பதற்குள், "ஐயோ!....அவர் பிடிபட்டு....விட்டாரா?....கைதியாகி விட்டாரா?.... இப்போது அவர் எங்கே இருக்கிறார்?"....என்று வஸுந்தராவின் கைகளைப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

வஸு :—சுமதீ! அந்த மகாபாவிக்காக நீ வருந்தவே வேண்டாம். அவனுக்கு நீ தர்ம நெறி தவறாது பாடு பட்டதற்கும், டாக்டர் தன்னையே தியாகம் செய்துகொண்டு அவனுக்கு உழைத்ததற்கும் அவன் செய்த கொடுமைக்காக அவனைப் போலீஸார் கைதியாக்குவதற்கு முன், கடவுளே அவனைக் கைதியாக்கி, அவனுக்கு ஏற்ற உலகத்திற்குக் கொண்டுபோய் விட்டார். இனி, யாருக்கும் தீங்கு செய்ய முடியாது....

என்று முடிப்பதற்குள், சுமதி "ஹா! என்ன! என்ன! அவர் இறந்து விட்டாரா! இறந்துவிட்டாரா? எப்படி இறந்தார்?.... விதவை என்கிற பட்டத்தையா!"....

வஸுந்தரா இடை மறுத்து, "சே!....பயித்தியமே, நீயா விதவை! ஒரு நாளுமில்லை. இது கனவு. உன்னை மாசுபடுத்த வந்த மாயை; உன் மனத்தால் வரித்துள்ள பதிக்கு யாதொரு குறையுமின்றிக் காக்கும்படிப் பகவானை வேண்டு. இதுதான் இனி உனது கடமை. வீணே புலம்பாதே!....அவன் எவ்விதம் இறந்தான் என்பது இனி உனக்கு எதற்கு? தற்கொலையினால்தான் இறந்தான். இது தெரியாதா! சுமதீ! இதென்ன மதியீனம்! புலம்பாதே!.... டாக்டரின் க்ஷேம மல்லவா இனி உன் க்ஷேமம்....

சில நிமிஷங்கள் சுமதி கல்லாய்ப் படுத்திருந்தாள். வாயே அடைத்து விட்டது. உலகமே வெறும் சூனியமாகத் தோன்றியது. தான் ஜென்மமெடுத்ததே பிறரால் இகழப்பட்டுச் சாவதற்குத்தான்; இந்த விதவைப் பட்டமும் கூட வந்தது என்றதை நினைக்கும்போது அவளால் சகிக்க முடியவில்லை.

சில மணி நேரங்கள் சென்றபிறகுதான் அவளுக்குச் சற்றுத் தெளிவு உண்டாகியது. தான் விதவையாகிய பிறகு தன்னை யொருபோதும் ஆத்மநாதன் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இனி, தான் திக்கின்றித் தெருவில் அலைவதைவிட, தானும் இவ்வுலகை விட்டு மறைவதுதான் நலம் என்ற எண்ணமே அதிகமாகப் பாதிக்க வாரம்பித்தது. இந் நிலைமையில் துக்கமும், தான் விதவை

என்கிற அவமானமும் ஒன்றுகூடி, அவளை ஊமையாக்கி விட்டதால், பிறகு வஸுந்தரா எத்தனைதான் தேற்றியும் அவள் தேறுதலடையாமல் தவிப்பதுடன், 'நான் ஒருவர் முகத்திலும் விழிக்கமாட்டேன்' என்ற பிடிவாதத்துடன் குப்புறப் படுத்துவிட்டாள்.

வஸுந்தராவின் பாடு திண்டாட்டமாகிவிட்டது. பெரிய டாக்டரிடம் ஓடினாள். "டாக்டர்! என்ன செய்வது? நீங்கள் சொல்லிய யோசனை பலிக்காததுபோலிருக்கிறதே! சுமதி மிகவும் பிடிவாதமாய் படுத்துப் புலம்புவதால், அவள், நர்ஸ் செய்வது சாத்யமில்லை. இச்சமயம் நாம் அதிக அதிர்ச்சிக்கு இடந்தராது செய்வதுதான் நலம். ஏனெனில், டாக்டருக்கும் மூளை கெட்டுவிடுமோ என்று பயப்படுகிறீர்கள். அவளுக்கும் இவ் வதிர்ச்சியினால் மூளைதான் கலங்குமோ, மூச்சுத்தான் நின்றுவிடுமோ! தெரியவில்லை. ஆதலின், சற்று விட்டுப் பிடிப்பதே நலமல்லவா?" என்றாள்.

பெரிய டாக்டரும் அதற்குச் சம்மதித்தார். ஆத்மநாதன், மிகவும் கவலைக்கிடமான நிலைமையிலிருப்பதால். அங்குபோய்விட்டார்.

நாட்கள் ஒன்றாகி, இரண்டாகிப் பலவாகி, வாரங்கள் கடந்து, மாதமும் ஆகிவிட்டது. சுமதி, எங்கே தற்கொலை புரிந்துகொள்வாளோ என்கிற பயத்தினால், வஸுந்தரா அவளருகிலேயே காவலிருந்ததுடன், அவள் மனம் சற்றுத் தெளியும்படி சதா பேசிக்கொண்டே யிருந்தாள்.

சுமதிக்கு உடம்பு முற்றிலும் குணமாகிவிட்டதெனினும், அவள்தான் விதவை என்கிற அவமானத்தினால், ஆத்மநாதனைப் பார்க்க வேண்டும் என்று தூண்டும் ஆசையையும், மனோவேகத்தையும் அடக்கிக்கொண்டு, பொறுத்துக்கொண்டிருந்தாள்.

அவன் நிலைமையைப்பற்றி வஸுந்தராவின் மூலமாக அறிய அறிய, அவனைப் பார்க்க மனம் பதறித் துடித்தது. ஆனால் துக்கமும் வெட்கமும் கூடவே பாதித்தன. எப்படியாவது அவனை ஒருமுறை பார்த்துவிட்டுத் தானும் தற்கொலை புரிந்துகொள்வது என்று தன் மனத்திற்குள் முடிவு செய்துகொண்டாள். மெல்ல வஸுந்தராவை நோக்கி, "தேவி! நான் அருகில் செல்லாமல், ஒரு முறை தூரவிருந்து என் ஆத்மநாதனைக் கண்ணுறக் காண்பதற்கு நீங்கள் சற்று உதவி செய்யமாட்டீர்களா?" என்றாள்.

வஸு:—பயித்தியமே! தூரவிருந்து பார்க்கமட்டுமல்லவே.... அவருடன் கூடவிருந்து நர்ஸ் செய்வதற்கே உன்னை ஏற்பாடு செய்திருக்கிறேன்! உன் வீண் பிடிவாத யோசனையை விலக்கு. உன் உயிர் உனது அல்ல. நீ தற்கொலைக்காக வழி தேடுவதை நான் அறிவேன். இதை டாக்டர் அறிந்தால், அவர் உயிர் உடனே போய்விடும் என்பதை நீ மறந்தாயா? அவர் இறந்து போவாரேயானால்,

அதனால் உலகத்திற்கு எத்தனை நஷ்டம் என்பதை நீ அறிய மாட்டாயா? வீண் யோசனை வேண்டாம். சுமதீ! எழுந்து வா! நாம் டாக்டரிடம் போகலாம்—என்றாள்.

சுமதி:—(எதையோ எண்ணி அலறியவள்போல்) ஹா! மறந்து விட்டேனே! ஆரோக்யசாமியின் கோஷ்டியார் டாக்டருக்கு ஏதோ பெரிய விபத்து விளைவிப்பதாக....

வஸந்:—(இடைமறுத்து) ஆம்! விளைவிக்க சகல ஏற்பாடும் செய்தது உண்மையே. நானும் அதை அறிந்து, கடவுளின் கிருபையினால் அதைத்தடுத்ததோடு, பெரியமனிதன்வீட்டிலிருந்து நோட்டுகளைக் களவாடச்செய்த குற்றத்திற்காகவும் இன்னும் பல குற்றங்களுக்காகவும் ஆரோக்யசாமி, கமலா, விமலா, ராஜம் முதலிய எல்லோரையும் போலீஸார், ஒரே அடியில் கைதியாக்கி விட்டார்கள். அவன் ஏற்படுத்திய கண்டனக் கூட்டத்தையே நான் மாற்றி, அதை டாக்டருக்கு இம்மாதிரி விபத்து நேர்ந்ததற்கு அனுதாபக் கூட்டமாயும் பிரார்த்தனைக் கூட்டமாயும் அந்த ஆரோக்யசாமியே கண்டு வியக்கும்படியாகச் செய்துவிட்டேன்.

சுமதி:—(ஆனந்தப் பெருக்குடன், வஸந்தாவைக் கட்டிக் கொண்டு) ஆஹா! வஸந்தாதேவி! தங்களைப்போன்ற உபகாரப் பிராணிகள் உலகில் இருப்பதால்தான் அதர்மமே நிறைந்த இக் கலியிலும் மழை பெய்கிறது. அந்தச் சண்டாளனுடைய கோஷ்டி கைதியாகிய சந்தோஷச் செய்தி டாக்டருக்குத் தெரியுமா?

வஸந்:—சுமதீ! டாக்டர் இன்னும் கண்ணையே திறக்கவில்லையே! அவர்தலை, கிழிந்துபோய் ரத்தம் ஆறுய்ப் போய்விட்டதால், என் சரீரத்திலிருந்து ரத்தத்தை அவருக்கு ஏற்றி, தலைக்குத் தையல் போட்டிருக்கிறது. இன்னும் மயக்கமாகவே இருக்கும்படி பெரிய டாக்டர் செய்திருக்கிறார்.

இதைக் கேட்ட உடனே சுமதியின் உள்ளம் நெருப்பின்மீது புழுவெனத் துடித்தது. அவளது மனம் சற்று நழுவ ஆரம்பித்தது. தான் ஏன் தன் அருமை பொக்கிஷத்துடன் கூடவிருந்து பணி செய்யலாகாது என்று ஆசை தலை தூக்கியது. இன்னும் தெளியாது படுத்திருக்கிறார் என்றதைக் கேட்டதும், எங்கே இறந்து விடுவாரோ என்ற திகிலும் கவலையும் குடிகொண்டுவிட்டதால், தன்னை மீறிய பரபரப்புடன், "ஐயோ! இன்னுமா தெளியவில்லை! வாருங்களேன் போய்ப் பார்க்கலாம்"....என்று பரபரப்புடன் கிளம்பினாள்.

வஸந்:—ச்சு! கத்தாதே! அவரிடம்போய் அழவோ, பேசவோ கூடாது. அவருடைய மூளை கலங்கிவிடும். அங்கே அவருடைய தகப்பனர் முதலானோர் அருகிலேயே இருக்கிறார்கள்.

சுமதி :—(பயந்தபடியே) ஐயோ! அப்படியானால் அவர்கள் என்னை விதவை என்று வெறுப்பார்களே! திட்டுவார்களே! இந்தப் பாவியால்தான் இப்படி என்று ஏசுவார்களே!....நான் வரமாட்டேன். நான் அருகதையற்ற அபாக்கியவதி.

வஸு :—சுமதி! நீ என்ன பழங்காலத்து அசடுபோல் பேசுகிறாய். டாக்டரின் மனப்போக்கை அவருடைய டைரியிலிருந்தும், இப்போது ஸ்மரணை இல்லாதிருப்பினும் அவருடைய வாய்ப் பிதற்றலிலிருந்தும் அவர்கள் தன் மகனின் அந்தரங்கத்தை—உன் காதலை—நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார்கள். முதலில், தன் மகன் பிழைத்தால் போதும் என்றும், அவன் இஷ்டப்படியே சமூக சீர்திருத்த முறையில் கல்யாணத்தைச் செய்யவும் தயாராய் இருக்கிறார்கள். வீணாக அவர்கள்மீது விஷயம் அறியாது குறை கூறாதே!

சுமதி :—ஹா! தேவி! தாங்கள் சொல்வது உண்மையான வார்த்தையா!

வஸு :—என்மீது உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் அவ் வார்த்தை உண்மையில்லைதான்.

சுமதி:—(வஸுந்தராவைத் தழுவியவாறு) தேவி! உங்கள்மீது தேவதா விச்வாச முண்டு. உங்களை நான் முற்றும் நம்புகிறேன். பாழடைந்த அந்தகாரத்தில் மூழ்கிவிட்ட என் வாழ்க்கையில் ஒரு இன்ப ஜோதியை உண்டாக்கும் புனிதவதி நீங்களல்லவா! நீங்கள் தியாக அக்னியில் குளித்துவிட்டு, என் மாசையும் போக்கி மகிழ்ச்சியைக் கொடுத்த உங்களையா நான் நம்பமாட்டேன்! வாருங்கள், போகலாம்—என்றாள்.

வஸுந்தரா, அவளைப் பிடித்துக்கொண்டே மெல்ல நடத்தி, டாக்டர் இருந்த விடுதிக்கு அழைத்து வந்தாள். அழகு வெள்ளம் புரண்டு வருவதுபோல் வரும் சுமதியைக் கண்டதும் ஏற்கெனவே பார்த்திருப்பினும் இன்று பின்னும் அதிக எழிலுடன் மீனலோசனி யம்மாளின் கண்ணுக்கு விளங்கினாள். சுமதியே எதிர்பாரா வண்ணம் அவள் எழுந்துவந்து, அவளைக் கட்டித்தழுவிக் கண்ணீர் உதிர்த்தாள். "அம்மா! புலம்பாதே. என் வயிற்றில் கடவுள் பாலை வார்க்கும்படி வேண்டு" என்று கூறினாள்.

சுமதி அந்தம்மாளின் காலில் விழுந்து வணங்கினாள். கண்ணில் பெருகும் நீரை அவளால் அடக்கமுடியவில்லை. ஆத்மநாதனிடம் ஓடினாள். கட்டிலின் கீழே உட்கார்ந்தபடி அவனைத் தடவியவாறு தேகங் குலுங்கக் குலுங்கப் புலம்பித் தவிக்கிறாள்.

சற்று நேரங் கழித்தே ஆத்மநாதனுக்குச் சற்றுத் தெளிவு உண்டாகியது. கண்ணைத் திறந்து பார்த்தான். முதலில் தன் தாயாரே அவன் கண்ணிற்குப் பட்டாள். எங்கும் இருள் சூழ்ந்திருப்பதுபோல்

தோன்றியது. "அம்மா!........அப்பா!....வஸுந்தரா!....ஹா!.... சுமதி!...." என்று ஆட்களைத் தெரிந்துகொண்டு கூப்பிட்டான்.

மீனலோசனியம்மாள், ஆனந்தக் கண்ணீருடன், தன் சுதன் முகத்துடன் முகம் பதித்து அன்பு ததும்ப, "ஆத்மநாதா!....என் வயிற்றில் பாலை வார்த்தாயா?" என்றாள். சிதம்பரநாதன் அது கூடச் சொல்லமுடியவில்லை. மகனைத் தடவிக் கொடுத்தார். வஸுந்தரா, வாய் திறக்காது கண்ணீர் உதிர்த்தாள். அவள் மகா கெட்டிக்காரியாகையால், பெரிய டாக்டரின் முகத்தைப் பார்த்தாள்.

அவரும் வெகு யூகசாலியாகையால் ஆத்மநாதனுக்கு ஒரு ஊசி குத்திவிட்டு, மெல்ல நழுவினார். வஸுந்தரா அவர் பின்னோடு தன் மாமன் மாமியுடன் நழுவினாள். சுமதியும் போகவேண்டுமோ என்னவோ வென்று எழுந்து பார்ப்பதற்குள், கதவு சாத்தப்படும் போது வஸுந்தரா, கையை அமர்த்தி அவளை இருக்கும்படி ஜாடை காட்டினாள். இதை அறிந்த அவ்வாரணங்கு ஆத்மநாதனின் அழகிய முகத்தை ஏற இறங்கப் பார்த்தாள்.

இதுகாறும் மனத்திற்குள் பொங்கிக் கொந்தளித்துக் கிடக்கும் காதல் தீ ஜ்வாலை வீசி எரிய வாரம்பித்தது. அவள் இச்சமயம் தன் கணவனின் நிலைமை, ஆரோக்யசாமியின் நிலைமை முதலிய எதையுங் கூறி அதிர்ச்சியுண்டாக்கக் கூடாதென்று அறிவாளாதலால், அதைத் தெரிவிக்கவில்லை. கட்டுமீறிக்கொந்தளிக்கும் பிரேமை பிரவாகத்தில் தன்னை மறந்து மிதந்தபடியே அவன் முகத்தோடு முகம் பதித்து முத்தமிட்டாள். கண்ணீர், அவன் முகத்தை நனைத்தது. அதே சமயம் ஆத்மநாதன் அவ்வனிதாரத்னத்தின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு 'கண்மணீ! என் இன்பநிலையமே!' என்று கூறி அவளை மார்போடு அணைத்துக் கொண்டான். பேசவில்லை. அதிர்ச்சி யுண்டாகக் கூடாதெனச் சற்றுப் பயந்து நிமிர்ந்தாள்.

இதையறிந்த டாக்டர், ஒரு மாதிரியாக நகைத்துக்கொண்டே, "என் பிரேமையின் பொக்கிஷமே! உன் மனத்திலிருப்பதை நான் அறிந்துகொண்டேன். எந்த விஷயமும் புதிதாகத் தெரிந்தால் தான், அதிர்ச்சியும் அதன்பலனாக அயர்ச்சியும் உண்டாகும். இது உனக்குத் தெரியாதா? அன்பே! சகல விஷயமும் என் ஆப்த மித்திரன் சோமுவின் மூலம் அறிந்தேன். எனக்கு உடம்பு தெளிந்து சில நாட்களாகி விட்டன. ஆனால், என் இன்பவானிதியத்தையடையும்பொருட்டாகத் தெளிவு காணாதவன்போல் வேஷம் போட்டு வந்தேன். என் பெற்றோரின் விசித்திரமான மனமாறுதலை நேற்றுதான் நான் அறிந்தேன். எனக்கு இந்த நாடகத்தை நடிப்பதற்குப் பெரிய டாக்டரும், வஸுந்தராவும், சோமுவும் பெருந்துணை புரிந்தார்கள். சகலமும் அவன் செயல். கண்மணீ! என் இப்படி விழிக்கிறாய்?" என்று அணைத்துக்கொண்டே அவளைக் கேட்டான்.

"ஒன்றுமில்லை டாக்டர்! வாழ்க்கை நாடகத்தில் நடந்த காட்சிகளெல்லாம் என் நினைவில் தோன்றின. ஒரு நிமிடம் பிரமித்தேன். என்ன மாயை! என்ன விசித்திரங்கள்! அடாடா! எல்லாம் நினைக்க நினைக்க ஏதோ செய்கிறது" என்றாள்.

"ஆம். ஆதியில் பரம தரித்திரத்தை அனுபவித்தவனுக்குத் திடீரெனப் பணம் கிடைத்துவிட்டால் அதன் அருமை அவனுக்கு நன்றாகத் தெரியும். குழந்தை இல்லாதிருந்த குடும்பத்தில் குழந்தை பிறந்துவிட்டால், அதன் சுவையே, அந்த இன்பமே வேறுதான். அதேபோலத்தான், காதல் நோயால் வாடி வருந்தி ஏங்கித் தவித்த பின்னர், நாம் நினைத்தவண்ணம் அது கைகூடுமாயின், உலகத்தில் நாம் இன்பத்தின் எல்லையைக் காணலாம். கண்மணீ! அதோ! என்ன ஆனந்தமாகப் பொங்கல் கும்மியடித்துச் சிறுமிகள் பாடும் பாட்டு, காதில் கேட்கிறது பார். நீயும் கஸ்தூரிதிலகம் பாடு" என்று கூறியபடியே, அவளது அழகிய அதரத்தில் முத்தமிட்டான்.

"கஸ்தூரிதிலகம்" என்ற ச்லோகத்தைப் பாடும் இனிய கானம்ருதம் வெளியிலுள்ளவர்களின் செவியில் பட்டதும், பட்டமரமும் பால் சொறிவதுபோல் எல்லோருடைய இதயத்திலும் ஆனந்த ஊற்றுச் சுரந்து அது கண்ணீர் வழியாகப் பெருகியது. மீனலோசனியம்மாள், சிறு பெண்கள்போல் கதவின் இடுக்கினால் எட்டிப் பார்த்து, உள்ளம்பூரித்துப் புலகிதமடைந்தாள். சிதம்பரநாதனும் அவளைப் போட்டியிட்டபடி எட்டிப் பார்த்தான். பொங்கலோ பொங்கல்! போகியோ! போகி! பச்சைப் பொங்கல், பாலு பொங்கல், சக்கரைப் பொங்கல் பொங்கலோ பொங்கல்! போகியோ போகி!" என்று சிறுமிகள் கத்தும் சப்தம் மீனலோசனியம்மாளின் காதில் கேட்டதும், அவள் உள்ளத்திலும் பால் பொங்கிற்று.

சில வருஷங்களுக்கு முன்னால் நடந்த பொங்கல் பண்டிகையன்று நிகழ்ந்த சம்பவங்கள் நினைவில் தோன்றியதால் அவளுடைய இதயத்தில் உண்டான கொந்தளிக்கும் சந்தோஷ உணர்ச்சியைப் பற்றிக் கூறத்திறமன்று. சின்னக் குழந்தையைப்போல் குதித்தாள்; ஆனந்தத் தாண்டவமாடினாள். அந்தக் கானம்ருதத்தைக் கேட்டவாறு, கதவிடுக்கினால் இன்ப ஜோடிகளைக்கண்டு பேரானந்தத்தை—நித்யானந்தத்தை—யடைந்தாள். அதேசமயம் அன்பின் உணர்ச்சியால் அயர்ச்சியைக்கூட லக்ஷியஞ்செய்யாது 'சந்தோஷமே சகல பலம்'என்பதற்கேற்ப ஆனைபலங்கொண்டவர்களாய் ஆனந்தமாய்த் தழுவியபடி தம்பதிகள் வெளியில்வந்து தாய்தந்தையரை நமஸ்கரித்தனர். அவ்வாறு அவர்கள் அருமையாகக் காட்சியளித்ததைக் கண்டு, அங்கிருந்த எல்லோருடைய மனமும் களிப்படைந்தது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

183032